TS107

ஸ்ரீமத் தண்டமயுளா

ஹிந்து மாத சிரோமணிகள்

மதன்மையுள்ள

# ஹிந்து மாது சிரோமணிகள்.

135/23

## Part I.

ஸ்ரீராமகிருஷ்ண ஹிந்து பெண்பாடசாலை
கௌரவ சூப்பரின்டென்டென்ட்,

பெ. மாணிக்கசுவாமி முதலியார், பீ. ஏ.
(Senior Auditor Accountant General's Office Rangoon.)
அவர்கள் இயற்றியது.

2 5 APR 1923

1921.

சென்னை, கோமளேசுவரன்பேட்டை,
"லோகோபகாரி" ஆபீசில் கிடைக்கும்.

ரு பதிப்பு)

INTED BY
ADRAS, S. E.

# அட்டவணை


| | | | |
|---|---|---|---|
| பாயிரம் | .... | .... | 1— 8 |
| சஞ்சுக்தாராணி | .... | .... | 9—21 |
| பத்மினி | ... | .... | 21—39 |
| அர்கால் நாட்டின் ராணி | .... | .... | 40—67 |
| பன்னா என்னும் தாதி | .... | .... | 68—76 |
| கனோர் தேசத்து ராணி | ... | ... | 76—85 |
| ராணி துர்க்காவதி | .... | .... | 86—97 |
| ஜஸ்ரேஸ்வரி | .... | ... | 97—124 |
| கிருஷ்ணாவென்னும் இராஜ குமாரத்தி | | | 125—138 |

2 5 APR 1923

# முகவுரை.

வீரத்தன்மையுள்ள இந்து மாதுசிரோமணிகளின் சரித்திரங்கள் நமது தென்னாட்டு மாதர்களுக்கு மிகுதியும் பயன்படும் என்னும் கருத்துடையோனாகி, இச்சரித்திரங்களுள் சிலவற்றை லோகோபகாரி பத்திராதிபரால் பிரசுரஞ் செய்யப்பட்டு வந்த சக்ரவர்த்தினி என்னும் மாதப் பத்திரிகையில் வெளியிட்டேன். அவற்றை வாசித்த சில நண்பர்கள் இன்னும் ‘அத்தன்மைய சரித்திரங்களை எழுதி புத்தக ரூபமாக வெளியிட்டால் நலமாயிருக்கு மென்று சொன்னமையின், அவ்வாறு செய்யலாயினேன். இப்புத்தகத்தில் சரித்திர விஷயம் தவறின்றிக் கூறப்பட்டிருப்பதுடன் எவ்வெவ்விடங்களில் சத்தியத்தைக் கடைப் பிடிக்கவேண்டிய நீதி நெறிகளைப் புகட்டவேண்டுமோ அவ்வவ்விடங்களில் அந் நீதிகள் குறள் முதலிய சிறந்த நூற்களின் மேற் கோள்களுடன் மிகு சுருக்கமாகச் செவ்வனே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இஃதே இந்தப் புத்தகத்தின் விசேஷ உறுப்பாகும்.

கடவுள்மீது நம்பிக்கையை அவலம்பித்து அந் நம்பிக்கையால் வீரம், சௌரியம், பராக்கிரமம் முதலிய மேம்பாடான குணங்கள் வெளிவரல்கூடு மென்றும், யாதொன்று உயிரினுக்கும் இனியதாக எண்ணப்படுகின்றதோ, அதற்கு ஹானி வருங்கால், அது நசியா வண்

ணம் இரக்ஷிப்பதில், உயிரையும் துறக்கக்கூடிய ஆற்றல் வருமென்றும், இக்கதைகளை வாசிப்போர் பெண்பாலாராயினும் ஆண்பாலாராயினும் அறிந்து அதற்குத் தகுதியாக நடக்கும் இயல்பினைப் பெறுவாராயின், இப்புத்தகத்தை வெளியிட்டதன் கருத்து ஈடேறினதாக மதிக்கப்படும்.

இச்சரித்திரங்களை வரைந்ததில் பாபு மன்மத நாத் டட் எம். ஏ. என்பவர் ஆங்கில பாஷையில் எழுதியுள்ள ஹிரோயின்ஸ் அப் இன்ட் (Heroines of Ind) என்னும் கிரந்தம் அதிக உபயோகமாயிருந்தது.

தென் இந்தியாவிலுள்ள மாதுசிரோமணிகளின் சரித்திரங்களையும் வரைய முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். அவற்றை இரண்டாம் பாகமாகப் பிரசுரஞ் செய்ய யோசனை செய்திருக்கின்றேன்.

இந்தப்புத்தகத்தை எழுதும்படி உற்சாகப்படுத்தினவரும், அச்சுப்பிழைகள் முதலியவைகளைத் திருத்தி எனக்கு உதவி புரிந்தவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ஷண்முக முதலியார்க்கு அதிக வந்தன முள்ளவனாகவிருக்கின்றேன்.

இப்புத்தகத்தில் குற்றம் குறைகளுளவாயின் அவற்றை அறிஞர் எடுத்துக்காட்ட, யான் அவர்களுக்கு மிகுதியும் கடமைப் பட்டவனாவேன்.

கோமளேசுவரன் பேட்டை
சென்னை 8-9-1921 } பெ. மாணிக்கசாமி.

78107



# The Heroines of India.

வீரத்தன்மையுள்ள

# ஹிந்து மாது சிரோமணிகள்.

இவ்வுலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் இந்தியா தேசமானது அதிகச் சிறப்பை யுடையது. ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்காக் கண்டத்தார் விருக்ஷங்களின் தழைகளையும் பட்டைகளையும் ஆடையாக உடுத்திக்கொண்டு காடுகளில் மிருகங்களைப் போலச் ஜீவித்து வந்த காலத்தில், ஹிந்துக்கள் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்று மேலான நாகரீகத்தை அடைந்திருந்தனரென்று இந்துதேச சரித்திர வாயிலாக நமக்குத் தெரிய வருகிறது. ஆரியர்கள் ஸிந்து நதியின் மேற்கரையில் பஞ்சாப் மாகாணத்தில் குடியேறி யிருந்தபோது, வேதங்கள் உண்டாயினவென்று சில மேதாவிகள் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்வேதங்களி லடங்கிய விஷயங்கள் ஆரியர்களின் நாகரீக முதிர்ச்சியையும், பெண்களின் நிலைமையையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றனவென்று பண்டித சிகாமணிகள் யாவராலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது.

ஹிந்து ஸ்திரீகள் மிகுந்த கல்வி யறிவுள்ளவர்களா யிருந்தார்களென்றும், அவர்கள் சிற்சில ஆபத்துக் காலங்களில் வெளியிட்ட குணாதிசயங்கள் உலகத்தார் இன்னும் வியக்கத் தக்கனவாக இருக்கின்றனவென்றும், புறமதஸ்தர் யாவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். இவற்றை அடியிற்கண்ட சில மாது சிரோமணிகளின் ஜீவசரிதை விளக்கிக்காட்டும்.

**வாக்** (*Vak*). இருக்கு வேதத்தின் 10-வது அத்தியாயத்தின் 125-வது பாடலானது வாக் (*Vak*) என்னும் அம்மையாரால் திருவாய்மலர்ந்தருளப் பட்டதென்று கலைவல்லார் கூறுகின்றனர். இவ்வத்தியாயம் வேதாந்த சாஸ்திரத்திற்குக் கடைக்கால் போன்றுள்ளதென்று வேத பாஷியக்காரர்கள் கூறியிருக்கின்றனர். அம்பிராணா (*Ambhirana*) ரிஷியின் குமாரத்தியாகிய வாக் (*Vak*) என்னும் அம்மையாரின் மாட்சிமை இதனாலே நன்கு விளங்கும்.

**லோபாமுத்ரை** (*Lopamudra*). விதர்ப்பதேசத்து இராஜனுடைய குமாரத்தியும், அகஸ்திய மகரிஷியின் மனைவியுமான லோபாமுத்ரை என்னும் மாது இருக்கு வேதத்தின் 79-வது பாடலைப் பாடினாளென்று தெரிகின்றது.

**கார்கி** (*Gargi*). தத்துவஞான முதிர்ச்சியுடைய மிதிலா தேசத் தரசனாகிய ஜனக மஹாராஜன் ஒருகால் ஒரு யக்கியத்தைச் செய்ய ஆரம்பித்தனன். அந்த யக்கியத்திற்கு அநேக சாதுக்களும் பிரஹ்மஞானிகளும் விஜயஞ் செய்தனர். பத்துப் பத்து மோஹூர்கள் (பொன் நாணயங்கள்) ஒவ்வொரு கொம்



பிலும் கட்டியுள்ள 1000 பசுக்களை ஜனகமகாராஜன் அச்சாதுக்கள் மத்தியில் கொண்டு வந்து நிறுத்திக் "கடவுள்மீது பூரண நம்பிக்கை யுடையவர் எவரோ அவர் இந்த 1000 பசுக்களையுங் கொண்டு போகலாம்" என்று யாவரு முணரக் கூறினன். அங்கெழுந்தருளி யிருந்த சாதுக்கள் யாவரும் மௌனமா யிருக்க, மகாஞானவானாகிய யாக்ஞவல்கியர் தமது சீடர்களுள் ஒருவனை யழைத்து அப்பசுக்களை யோட்டிக்கொண்டு போகும்படி கட்டளையிட்டனர் இதனைத் தடுக்க மற்றச் சாதுக்கள் துணிவுகொள்ளா திருந்தனர். ஆனால், கார்கி (*Gargi*) என்னும் மாது சிம்மம்போல் சபை மத்தியிலிருந்து எழுந்து "நீர்தாமோ இங்குள்ள யாவரிலும் கடவுள்மீது பூரண நம்பிக்கையுள்ளவர்" என்று கர்ஜித்துச் சில பிரஸ்நங்கள் செய்தனள். கார்கி (*Gargi*) என்னும் மாதுக்கும், யாக்ஞவல்கியருக்கும் பெரிய வாதம் நடந்தது. முடிவில் கார்கி என்னும் மாது யாக்ஞவல்கியரால் கொண்டாடிப் பேசப்பட்டனள். இவ்வாத சம்பாஷணை அதிக சூக்ஷ்ம விஷயங்களை யுடையதாய்க் கார்கி (*Gargi*) என்னும் மாது சிரோமணியின் கல்வித்திறத்தையும் தைரியத்தையும் நன்கு விளக்குகின்றது.

**கனா** (*Khana*). ஜோதிட சாஸ்திரத்தில் தன்னினும் மிக்கார் ஒருவருமில்லையென ஒரு மாது சிறந்தோங்கி யிருந்தனள். இவள் கனா (*Khana*) என்னும் பெயருடையாள். இவளது வம்ச பரம்பரை இன்னும் ஆராய்ச்சிக் குட்படுத்தப்பட்டு வருகிறது. பெற்றோர்கள் இன்னாரென்று தெளிவாகத் தெரியாவிடினும் இவள் இராக்ஷஸர்களால் (அஃதாவது அநாரி

யர்களால்) வளர்க்கப்பட்டு ஜோதிட சாஸ்திரம் கற்
றுக் கொடுக்கப்பட்டனள் என்றுமட்டும் நமக்கு நன்
ருகத் தெரிகின்றது. இம்மாது அதிக ஞாபக சக்தி
யுள்ளவள். எப்போதும் ஜோதிட சாஸ்திரப் பயிற்
சியிலேயே காலத்தை இடைவிடாது தன் மனதைச்
செலுத்தி அபார தேர்ச்சி பெற்றனள். ராக்ஷஸர்
கள் மிஹிர் (*Mhir*) என்னும் ஜோதிட சாஸ்திர வல்
லானுக்கு இவளை மணம் செய்வித்தனர். இந்த மிஹிர்
(*Mhir*) என்பவன் யாரென்ருல், விக்ரமாதித்திய
ராஜன் அரண்மனை வித்வான்கள் ஒன்பதின்மருள்
ஒருவனுகிய வராஹன் (*Varaha*) என்பவனுடைய
புதல்வனுவன். வராஹன் ஜோதிட சாஸ்திரத்தில்
நிபுணன். அவனுக்கு ஒரு குமாரன் ஜனித்தபோது
அவன் அந்தக் குழந்தைக்கு ஆயுள் 10 வருடந்தான்
என்று ஜோதிட ஞானத்தால் கணித்துத் தெரிந்து
கொண்டான். பத்து வருடம் வரைக்கும் வைத்து
வளர்த்து அன்பு பாராட்டிப் பின் இழப்பதைவிட
பாசத்திற் கேதுவான இக்குழந்தையை இப்போதே
இழப்பது நலமென்று தீர்மானித்து ஒரு மண் பாண்
டத்தில் அக் குழவியை வைத்து ஓர் ஆற்றில் மிதந்து
செல்ல விடுத்தனன். ஸ்நானத்திற்காக ஆற்றங்கரைக்
குச் சென்ற சில ராக்ஷஸ ஸ்திரீகள் நீர்மேல் மிதந்து
வரும் பானையைப் பிடித்துப் பார்க்க அதில் ரூபலா
வண்ணியத்துடன் ஒரு சிசு இருக்கக் கண்டனர். அக்
குழந்தைமீது இரக்கங்கொண்டு அந்த இராக்ஷஸ
ஸ்திரீகள் தங்கள் வீட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய்
வளர்த்து வரும் நாளில், குழந்தையின் புத்தி சூக்கு
மத்தைக் கண்டு அதற்குத் தக்க வயது வந்த காலத்
தில் ஜோதிட சாஸ்திர ஞானத்தை இராக்ஷஸர்கள்



புகட்டி வந்தனர். இந்தப் பையன் ஜோதிட சாஸ்தி
ரத்தில் அதிக நிபுணத்தன்மையை யடைந்தனன்.
இவனைத்தான் கனு (*Khana*) என்னும் மாதுக்குப்
பாணிக்கிரஹணம் செய்து கொடுத்தனரென்று
மேலே கூறப்பட்டது. இவ் வதூவரர்கள் சிலநாள்
இராக்ஷஸர்கள் மத்தியில் சுகபோகிகளா யிருந்து,
பின் தங்கள் மரபினர்களாகிய ஆரியர்களிடஞ் செல்ல
விருப்பங்கொண்டு இராக்ஷஸர்களுடைய சம்மதம்
பெற்று ஆரியர்கள் வசிக்கும் பிரதேசம் செல்லப் பிர
யாணஞ் செய்தனர். வழியில் விக்கிரமாதித்ய மகா
ராஜன் வேட்டையாடிக் கொண்டிருந்த இடத்தைக்
கிட்டினர். அவ்வரசன் வித்யானுபாலனென்று உணர்
ந்து அவன் சமுகஞ் சென்றனர். இவர்களுடைய
ஜோதிட சாஸ்திர ஞானத்திற்கு அரசன் மெச்சி தன்
னுடைய அரண்மனைக்கு இவர்களையழைத்துக்கொண்
டுபோய் வராஹன் வசம் விடுத்து, இவர்களை உபசரித்
துப் பாதுகாத்து வரும்படி அவனுக்குக் கட்டளை
செய்தான். சிலநாள் இவ்விதங் கழிய, மிஹிர் என்ப
வன் தன்னுடைய குமாரனையன்றி வேறல்லனென்று
வராஹன் தெரிந்துகொண்டபோது அவன் தன் மனை
வியுடன் ஆனந்தக்கடலி லாழ்ந்தனன். தங்களுடைய
மருமகளும் அழகிலும் ஜோதிட சாஸ்திர ஞானத்தி
லும் சிறப்புற்றிருந்தமை கண்டு அவர்களுடைய களி
ப்புக் கரையிலதாயிற்று. இவ்வாறு இந்நால்வரும்
ஒரு வருடம் சுகித்து வாழ்ந்து வருநாளில், விக்ரமா
தித்ய மகாராஜன் தனது அரண்மனைப் பண்டிதர்க
ளில் ஒருவனுகிய வராஹனை யழைத்து " நட்சத்தி
ரங்களின் மொத்தத் தொகை எவ்வளவு? உம்மால்

சொல்ல இயலுமா ?'' என்று வினவினன். இது ஆகாத காரியமெனத் தனக்குத் தெரிந்தும், இதுகாறும் தான் பெற்ற கீர்த்தி நிலைகுலையாதிருத்தல் வேண்டுமென்னும் அவாவினால் ஒருநாள் தவணை வேண்டியதென்று அரசனிடம் பகர்ந்து தன் வீடுவந்து சேர்ந்தனன். அரசனை எப்படித் திருப்தி செய்யப் போகிறோம் என்னும் சிந்தாகுலனாகி முகம் வாடித் துக்க சாகரத்தில் ஆழ்ந்திருந்ததைத் தனது மருமகளாகிய கனா என்பவள் கண்டு மாமனார் அருகிற் சென்று துக்க காரணத்தைத் தெரிந்துகொண்டு "மாமா! நீர் இதுபற்றிக் கவலைப்படல் வேண்டாம்; நான் கணித்துக் கண்டு பிடிக்கிறேன்" என்று உரைத்தனள். அப்படியே கணித்துச் சொல்ல அதை வராஹன் (*Varaha*) மறுநாள் இராஜனிடம்போய்ப் பகர்ந்தனன். அரசன் அதிக ஆச்சரியமடைந்து, இதை எப்படிக் கண்டு பிடித்தாய் என்று வற்புறுத்திக் கேட்க வராஹன் (*Varaha*) நடந்த விர்த்தாந்தத்தைப் புகன்றனன். அரசன் வியப்பின் உவகையால் "இன்று முதல் கனா (*Khana*) என்னும் மாது எனது இராஜ சபையின் பத்தாவது இரத்னாகரமாய் இருக்கக்கடவளென்று கட்டளை இட்டனன். இதைக் கேட்ட வராஹன் இடியால் அடிபட்டவன்போல் ஏங்கி நின்றுவிட்டனன். அவன் யாது செய்வான்? கனா என்பவள் ஸ்திரீயாயிற்றே! மேலும் விவாகமான மாதாயிற்றே? இராஜ சபைக்கு எப்படிக் கொண்டு போகப்படலாம்? ஜாதியில் நின்று நீக்கி விடுவார்களே; நாம் பிரஷ்டர்களாக ஆய்விடுவோம்; இவ்வித நிந்தனைக்கும் இகழ்ச்சிக்கும் ஆளாவதைவிட,



தனது குடும்பத்திற்குக் கேட்டை விளைவித்த கனாவினுடைய நாக்கை அறுத்துப் போடுவதே நலமென்று தீர்மானித்துத் தன்னில்லமேகித் தனது குமாரனாகிய மிஹிரை அழைத்துக் கனாவினுடைய நாக்கை அறுத்து விடும்படி கட்டளையிட்டான். இவ்விதம் சம்பவிக்குமென்று ஜோதிடஞானத்தால் முன்னரே கனாவுக்கும் தன் கணவனுக்கும் தெரிந்திருந்தபடியால், கனா என்னும் வித்வத்சிரோமணி யாது செய்தனளெனின், கணவன் கத்திகொண்டு நாக்கை யறுக்க அருகில் வந்தவுடனே, முகமலர்ச்சியுடன் தனது வாயை அகலமாய்த் திறந்தனள். மிஹிர் கத்தியால் நாக்கை யறுத்துவிட்டனன். கனா என்னும் மாது சிறிதும் வருத்தமின்றிப் பேருவகையுடன் உடலைத் துறந்து உம்பருலகம் புக்கனள்.

ஆரியர்கள் பஞ்சாப் என்னும் தேசத்தில் குடியேறியிருந்த காலத்தும் பின் அதனைத் தாண்டி ஹிந்துஸ்தானமென்று வழங்கிவரும் பரத வர்ஷத்தைக் கைப்பற்றி அதில் வாழ்ந்துவந்த காலத்தும் மேற்கண்ட வித்வத் மாது சிரோமணிகள் விளங்கி வந்தனரென்பது வேத சாஸ்திர ஆராய்ச்சி செய்துவரும் பண்டிதர்களின் துணிபாகும். ஆரியர்கள் இப்பரத கண்டத்தில் வெகு காலம் சுகமாக வாழ்ந்துவந்தார்கள். பிறகு அன்னிய ஜாதியார் இந்தியா தேசத்தின்மீது படையெடுக்கத் தலைப்பட்டனர். அப்பொழுது இந்தியா தேசமானது அல்லோகலப்பட்டது. கோயில்களும் விக்ரகங்களும் தகர்க்கப்பட்டன. ஸ்திரீகளின் பதிவிரதாத் தன்மைக்குப் பழுது நேரிடத் தலைப்பட்டது. இவ்வித ஆபத்காலத்தில் ஹிந்து

ஸ்திரீகள் காட்டிய குணாதிசயங்களேயும் வீரத்தன்
மையையும் தக்கவாறு வர்ணிக்க, தமிழ்ப் பாஷையில்
போந்த மொழிகளில்லேயென்று சுதேச நேசர்கள்
வருந்துகின்றனரென்றால், அம்மாது சிரோமணிகளின்
குன்றாப்புகழ் சாமானியரால் நவிலற்பாலதோ ! ஆயி
னும், நமது சகோதரிகளின் நன்மையைக் கருதி இத்
தகைய கீர்த்தியை நிலேநாட்டிய சில மங்கையர்களின்
வீரச் செய்கைகளேக் கூடிய மட்டும் சுருக்கமாக இனி
உரைக்கப் புகுவாம்.



வீரத்தன்மையுள்ள

# ஹிந்து மாது சிரோமணிகள்.

## † ஸஞ்சுக்தா ராணி.

இந்துதேச சரித்திர ஞானமுள்ளோர்க்கு மகம்
மது கோரி என்னும் அரசன் யாவனென்பது நன்கு
தெரியும். இந்தியாவின் மேற்கெல்லேயில் ஆப்கானி
ஸ்தானம் என்னும் ஒரு நாடுளது; அதில் அரசு
செய்து வந்தான் மகம்மது கோரி என்பவன். இவன்
குடிகள் மகம்மதியர்கள். இவ்வரசன் இந்தியாவின்
மேல் படையெடுத்துச் சென்ற பொழுது காஞ்ஜ
என்னும் நாட்டில் அயோத்தியாபுரியில் ஜயசந்திரன்
என்பான் அரசு செலுத்தி வந்தான். சுமார் 750-
வருடத்திற்கு முன்னர் இம்மன்னன் அரசுபுரிந்து
வந்தானென்று சரித்திர ஆராய்ச்சி செய்தவர்கள்
அபிப்பிராயப்படுகின்றனர். இந்த ஜயசந்திர ராஜ
னுக்கு ரூபலாவண்ய மிகுந்த ஒரு புத்திரி இருந்த
னள். அவள் பெயர் ஸஞ்சுக்தா. இவளது கல்வித்
திறத்தையும், புத்தி நுட்பத்தையும், அழகையும்
எல்லா அரசர்களும் கேள்விப்பட்டு இவளே மணம்புரி
யுமாறு போட்டி செய்தனர். ஆதிகாலத்திலே ஒரு

† இம்மாதின் பெயர் ஸம்யுக்தை யென்றும் சில சரித்
திரங்களில் கூறப்பட்டுள்ளது.

பெண்ணானவள் தன்மனதுக்குகந்த கணவனைத் தெரிந்து மாலை சூட்டுவது ஆன்றோரால் அங்கீகரிக்கப்பட்ட வழக்கமாயிருந்தது. நளன் சரித்திரத்தை வாசித்தவர்களும், துரௌபதை, சீதை முதலிய பத்தினிகளின் சரிதையை யுணர்ந்தவர்களும், சுயம்வரம் என்னும் புராதன வழக்கத்தால் பெண்கள் தாங்களே தங்களுக்கு இஷ்டமான மணாளனுக்கு மாலைசூட்டினரென்பதை அறிந்துள்ளார். இப் புராதன வழக்கத்தின்படி ஜயசந்திர ராஜனும் சுயம்வரம் ஒன்றை ஏற்படுத்தி எல்லா அரசர்களுக்கும் நிரூபம் விடுத்தனன். எல்லா அரசர்களும் தங்கள் தங்கள் காணிக்கைகப்பங்களுடன் கானோஜ் நாட்டுக்குச் சென்று ஜயசந்திர ராஜனுக்கு மரியாதை செய்யா நின்றனர்; டில்லி நாட்டு அரசனாகிய ப்ரித்வி ராஜன் மாத்திரம் அச்சுயம்வரத்திற்குப் போகவில்லை. இதைக்கண்ட ஜயசந்திர ராஜன் மிகுந்த கோபங்கொண்டு ப்ரித்வி ராஜனைப்போலவே மண்ணால் பிரதிமை (அஃதாவது உருவம்) ஒன்று செய்வித்து அதற்குக் காவலாளியின் உடுப்புப் போட்டு இராஜாக்கள் கூடியிருந்த அறையின் வாயிலில் ஒரு சேவகனைப்போல நிறுத்தி வைத்தனன். ஸஞ்சுக்தா ராணியின் வரவை எல்லா மன்னர்களும் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டு தங்கள் தங்கள் ஆசனத்தில் வீற்றிருந்தனர். புன்முறுவலுடனும், கண்களைக் கவரத்தக்க அதிக விலை யுயர்ந்த ஆடை யுடுத்திக்கொண்டும், தனது கழுத்தில் மிக அழகான மாலையைத்தரித்துக்கொண்டும், தனது இஷ்ட கணவனைத் தெரிந்தெடுத்து மாலை சூட்டுமாறு அவ்வரங்கில் ஸஞ்சுக்தா இளவரசி வந்து தோன்றினள். அப்பொழுது ஓர் ஊசி விழுந்தாலும் அதன்



சப்தமும் காதில் படும்படியான அவ்வளவு நிசப்தமாய் அந்த ராஜ சபை விளங்கியது. ஸஞ்சுக்தா என்னும் மாது அச்சபையின்கண் விஜயஞ் செய்திருந்த ராஜர்களை ஒரு முறை பார்வையிட்டுப் பின் மெல்ல நடந்து ஒவ்வொரு ராஜனையும் பார்த்துக்கொண்டே சென்று மண்ணாற்செய்த பிரதிமையிருந்தவிடத்தில் வந்து நின்றனள். அத்தருணத்தில் சபை கலேலென்றாய் விட்டது. அப்பிரதிமையின் முன் நின்ற ஸஞ்சுக்தா மங்கையானவள் திரும்பிப் பார்த்தவளுமல்லள், சபையிலிருந்த மன்னர்கள் சொல்வதைக் காதில் போட்டுக் கொண்டவளுமல்லள்; அவர்கள் ஆரவாரத்தைக் கவனித்தவளு மல்லள். அவளது மனச்சாக்ஷி ஏவிய வண்ணம் தன் கழுத்திலிருந்த மாலையை யெடுத்து மண்ணினாற் செய்திருந்த (ப்ருத்வி ராஜனது) பிரதிமையின் கழுத்தில் அணிந்து தான் இஷ்டப்பட்ட கணவன் ப்ருத்வி ராஜனே யெனக் குறிப்பாகத் தெரிவித்தனள். அதைக் கண்டதும் ஜயசந்திரனுக்கு அளவில்லாக் கோபமுண்டாயிற்று; கண்கள் சிவந்து கோபாக்னியைச் சொரிந்தன; மீசை துடித்தது; உடம்பு பதைப்புற்றது; இவ்விதம் கோபத்தினால் உன்மத்தனாகி, தனது புதல்வியாகிய ஸஞ்சுக்தாவைச் சிறைச்சாலையில் கொண்டுபோய் அடைத்து, அவள் தான் செய்த மூடத்தனத்துக்கும், இறுமாப்புக்கும் மனம் வருந்தி, மனந்திரும்பும் வரையில் சிறையிலேயே வைக்கும்படி மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான். அவர்களும் அவ்வாறே அவளைச் சிறைச்சாலையில் கொண்டுபோய் வைத்தனர். பின் சபை கலைந்து அங்கு வந்திருந்த ராஜாக்கள் தத் தம் ஊர்போய்ச் சேர்ந்தனர்.

இச்செய்தி டில்லி நகருக்கு ராஜனாகிய ப்ரித்வி ராஜனுக்குத் தெரியவந்தது. ஸஞ்சுக்தா ராணி தன் விஷயமாய்ச் செய்த செய்கையையும் அதற்கு அவள் தகப்பன் அநியாயமாய் விதித்த தண்டனையையும் அவள் படுங் கஷ்டத்தையும் சகியானாகி, ஸஞ்சுக்தா மாதின் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வதும், சுயம்வரத்தின் கண்ணியத்தை நிலை நாட்டுவதும் தனது கடமையென்று மதித்துத் தனதுசேனைகளை ஒருங்கு சேர்த்து ஜயசந்திரன் பட்டணத்தின் மீது ப்ரித்வி ராஜன் படை யெடுத்துச் சென்றனன். ஜயசந்திரனும் தனது இராணுவத்தைக் கூட்டிப் படுகளத்தில் வந்து நின்றனன். இவ்விரு சேனைகளுக்கும் பெரிய யுத்தம்விளைந்தது; அதில் ஜயசந்திரராஜன் தொல்வி யடைந்தான். அவன் பட்டணம் ப்ரித்வி ராஜனால் கைப்பற்றப்பட்டது. ஸஞ்சுக்தா ராணி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு டில்லி நகரம் கொண்டு போகப்பட்டனள். அங்கே மிகு ஆடம்பரத்துடனும், பெருமையுடனும் ப்ரித்வி ராஜனுக்கும் ஸஞ்சுக்தா ராணிக்கும் விவாகம் நடந்தது. இவ்விவாகத்தைத் தடுக்குமாறு ஜயசந்திரன் போருக்குச் செல்லத் துணியவில்லை. ஆயினும் தனக்கு நேரிட்ட அவமானத்தால் மனத் தாங்கல் மிகவடைந்து ப்ரித்வி ராஜனைப் பழிவாங்கும் வகையையே சதா எண்ணிக்கொண் டிருந்தனன்.

இப்படியிருக்க, மகம்மது கோரி என்னும் மகம்மதிய மன்னன் இந்தியாவின் மேல் படை யெடுத்து வந்து சுழிக்காற்றைப்போல்தன் முன்னெதிர்ப்பட்ட யாவற்றையும் அழித்து வந்ததுமன்றி இந்துக்களால் உயிரினும் இனியதாகக் கருதப்பட்டுள்ள கோவில்



களை இடித்துத் தள்ளி அவைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மூர்த்திகளை யழித்துச் சின்ன பின்னம் செய்தனன். இஃதன்றியும் கிராமங்களைக் கொள்ளை யடித்துக் கொளுத்தி அனேக ஸ்திரீகளை பலாத்காரமாய்க் கவர்ந்து சென்று அவர்கள் பதிவிரதாத் தன்மையைக் குலைத்துக் காமுகர்களான மகம்மதிய ராணுவ வீரர்களின் வசம் அடிமைகளாகுமாறு செய்தான். ப்ரித்வி ராஜன் இவ் வக்கிரமங்களைக் கேட்டவுடனே மனஞ் சகியாதவனாகி மட்டில்லாத சினங்கொண்டு குரூபிகளான மகம்மதியர்களைத் தண்டித்து அவர்களுடைய **கோர்** என்னும் மலைநாட்டுக்குத் துரத்திவிடத் தீர்மானித்தனன். மகம்மதியர்களுக்குத் தகுந்த சிக்ஷை செய்வதற்கு மற்ற மன்னர்களின் உதவி அத்தியாவசியமென்று உணர்ந்து அவர்களெல்லோருக்கும் நிருபம் விடுத்தனன். மாதர்களின் மானத்தையும், ஆலயங்களின் பவித்திரத்தையும் தேச சுவாதீனத்தையும் இரக்ஷிப்பது அரசர்களுடைய இன்றியமையாக் கடமை யாகையால் எல்லா அரசர்களும் மகம்மதியர்களை எதிர்த்துத்துரத்த ஆயத்தமாகிப் பாசறைக்குச் சேனைகளுடன் வந்துசேரும்படி அந்த நிருபத்தில் கண்டெழுதி யிருந்தனன். எல்லா ராஜாக்களும் அவ் வேண்டுகோளுக் கிணங்கி ப்ரித்வி ராஜன் பக்கலில் தங்கள் தங்கள் சேனைகளோடுவந்து சேர்ந்தனர்; ஜயசந்திர ராஜன் மாத்திரம் ப்ரித்வி ராஜன்மேலிருந்த வஞ்சத்தால் வாராமல் தன்னூரிலேயே நின்று விட்டான். டிராரி (Tirari) என்னும் படுகளத்தில் ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் ஒரு பெரிய யுத்தம் நடந்தது; அப்போரில் மகம்மது கோரி தோல்வி யடைந்தான். மகம்மதியர்கள் கண்ட

துண்டமாக வெட்டப்பட்டு நூற்றுக்கணக்காக மாண்
டனர். மகம்மது கோரி உயிர் பிழைத்துத் தப்பிப்
போனதே பெரிய காரியமாயிற்று.

**ப்ரித்வி** ராஜன் ஜயமடைந்ததைப் பார்க்க ஜய
சந்திர ராஜனுக்கு அதிக பொறாமை உண்டாயிற்று;
இவனை எப்படிப் பங்கஞ் செய்வது? எப்படி நாசஞ்
செய்வது? என்னும் எண்ணமானது ஜயசந்திரனு
டைய மனதில் பூரணமாகக் குடிகொண்டது; ஆகை
யால் தன்னை நரகில் செலுத்தக்கூடிய காரியமாயி
னும் தனது பகையாளி ப்ரித்வி ராஜனின் நாசத்தை
மாத்திரம் விளைவிக்கக் கூடியதாயின் அதனைச்செய்ய
மனமொருப்பட் டிருந்தனன். புஜபல பராக்கிரமத்
தால் தனது பகைவனை வெல்லவேண்டுமென்று இரு
க்க வேண்டிய எண்ணம்போய், கோழைத்தன்மை
யுள்ள பாமரர் அவலம்பிக்கும் கபட ஆலோசனைக்கு
ஜயசந்திரன் மனமானது இடங்கொடுத்தது; அவன்
மகம்மது கோரியின் நட்பைப்பெற்று தன் வஞ்சத்
தைத் தீர்க்கத் தீர்மானஞ் செய்து அம் மகம்மதிய
ராஜனிடத்து ஒரு தூதனையனுப்பி, இன்னொருமுறை
இந்தியாவின் மேல் படையெடுத்து வரும்படியாக
வும் அக்காலத்தில் தான் உதவிபுரிவதாகவும் சொல்
லும்படி அத்தூதனுக்குக் கட்டளையிட்டனுப்பினான்.
அவ்வாறே அத்தூதன் போய்ச்சொல்ல மகம்மது
கோரி அதிக உவகை யடைந்து படையெடுப்புக்கு
வேண்டிய பரிவாரங்களைச் சேர்க்கத் தலைப்பட்டான்.
ஜயசந்திரன் மேற்கண்டவாறு தூது அனுப்பியது
மன்றி தனது புத்திக் கூர்மையாலும் தந்திரத்தாலும்
ப்ரித்வி ராஜனுக்கும் முன் அவனுக்கு உதவிபுரிந்த
ராஜாக்களுக்கும் மித்திரபேதமும் செய்துவிட்டனன்.



ஆகவே மகம்மது கோரி இரண்டாம் முறை ஜயசந்தி
ரன் பிரேரேபணையால் இந்தியாவின் மேல் படை
யெடுத்து வந்தபோது ப்ரித்வி ராஜன் முன்போல
மற்ற ராஜாக்களின் உதவியைக் கோரிக்கேட்டும் ஒரு
வரும் வாராமையால் தான் தனியாகவே இத்தருணம்
மகம்மது கோரியுடன் போர்செய்ய நேரிட்டது.

ஜயசந்திர ராஜன் தனது படையை யமுனை நதி
யின் கரையில் இறக்கிக்கொண்டு மகம்மது கோரியை
எதிர்பார்த்துக் கொண்டிருந்தனன்; ப்ரித்வி ராஜா
வுக்கு நேரிடப்போகும் அபஜயத்தையும் அபகீர்த்தி
யையும் மனோகற்பனை செய்து கொண்டு பேருவகை
யுடன் கூடாரத்தில் ஒருநாள் தனியே யிருந்தான்.
அத்தருணத்தில் ஒரு போர்ச்சேவகன் வந்து “மஹா
ராஜாவே! நமது பகையாளிகளின்பாசறையி (Camp)
லிருந்து இளவயதுள்ள ஒரு யுத்தவீரன் வந்திருக்
கிறான். அவன் தங்களுடன் கண்டுபேச உத்தரவு
வேண்டி நிற்கின்றான்” என்றனன். இளவயதுள்ள
போர்வீரனா! என்று சொல்லி “ஆ! நமது பகையாளி
களின் பாசறையிலிருந்து ஓர் இளவயதுள்ள போர்
வீரனா வந்திருக்கிறான்? அவனுக்கு என்ன வேண்டி
யிருக்கும்” என்று இவ்வாறு தனக்குள்ளே தானே
ஜயசந்திரன் சிந்தித்துக்கொண்டு சும்மா இருந்ததைக்
கண்ட போர்ச்சேவகன் “தங்களைக் காணவந்திருப்ப
வன் ஒரு தூதன்; அதனால் அவனை நமது சேனைக்
குள் செல்லவிட்டு இங்குத் தங்கள் சமுகம் அழை
த்து வந்தே”னென்றனன். இதனைச் செவியேற்ற ஜய
சந்திரன் “அங்ஙனமாயின் இங்கே யிட்டுக்கொண்டு
வா” என்று சொல்லி மறுபடி ஏதோ ஒரு யோசனை
யினால் “நீ வெளியே இரு; அவனை மட்டும் உள்ளே

அனுப்பு" என்று போர்ச்சேவகனுக்குக் கட்டளையிட்டுத் தன்னுடைய பட்டாக்கத்தியை யெடுக்கத் தன்னாசனத்தை விட்டெழுந்தனன். ஜயசந்திரனைப் பார்க்கவந்தபோர்வீரன்கூடாரத்திற்குள்பிரவேசித்து ராஜாவின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரஞ் செய்து அவன் முன் நின்றான். இவ்வாறு நின்ற அப்போர்வீரனை இராஜன் நோக்கி "உனக்கு யாது வேண்டு" மென்று வினவினன். அப்போது போர்வீரன்வேஷந் தரித்திருந்த ஸஞ்சுக்தா ராணி தன் பிதாவாகிய இராஜனை நோக்கிப் பின்வருமாறு பகரலாயினள். "அண்ணா! உமது ஆசீர்வாதம் பெறுவதற்காக வந்திருக்கிறேன். நமது தேச சுவாதீனத்திற்காக மகம்மதியருடன் போர்செய்ய யத்தனித்திருக்கிறேன். உமது ஆசீர்வாதம் பெறுமுன் அவர்களை எதிர்க்க மனமில்லாதவளா யிருக்கிறேன். ஏனெனில் தந்தையின் ஆசீர்வாதமில்லாவிடில் ஜயமடைவது நிச்சயமில்லை."

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஜயசந்திரன் ஐந்து நிமிஷ நேரம் சித்திரப்பதுமைபோல் நின்றுவிட்டனன். பிறகு ஏதோ சொல்ல வாயெடுத்து மறுபடியும் மௌனமாய்த் தனது புத்திரியை ஆழ்ந்த சிந்தையுடன் இன்னொரு ஐந்து நிமிஷநேரம் உற்றுப் பார்த்து "இவைகளுக்கெல்லாம் காரணம் நீ தான். இப்பொழுது உன்னுடைய வேண்டுகோளுக்கிணங்க இயலாத காலமா யிருக்கிறது. ஆதலின் இவ்விடம் விட்டு எழுந்துபோ" என்றனன். அப்போது அவனது புத்திரியாகிய ஸஞ்சுக்தா ராணி அதிக வினயத்துடன் "அண்ணா! என் பிரியமான அண்ணா! உமது தேசத்தார் உஜ்ஜீவனத்தைக் கவனியும், அனாதா



வான எளிய ஸ்திரீகள் எத்தனைபேர் மகம்மதியர்களால் மானபங்க மடைவார்கள்? இஃது உமக்கிஷ்டமா? எத்தனை கோவில்கள் படுசூரணமாய் விடும், ஆலயங்களில் விக்ரகரூபமாய் நாம் தொழுது வரும் தேவர்களும் தேவிமார்களும் அவமதிக்கப்பட்டுப் பரிசுத்தக் குறைவு அடைவார்களே. இது நமக்கு அடுக்குமா? இத்யாதி துன்பங்கள் மகமதியர்களால் நேரிடாவண்ணம் தடுக்க முயலாவிடில் நமது ஜன்மம் அவலமாகுமே. நான் செய்த குற்றத்தையும் எனக்காக ப்ரித்வீராஜன் செய்த காரியத்தையும் மறந்து தேச சுவாதீனத்தைக் கைவிடாதுபற்றலும் ஸ்திரீகளின் பதிவிரதாத்தன்மைக்குக் குறைவு வாராது காத்தலுமே மேலான கடமையென்று உமது மனச்சாக்ஷியே பறையறையும்; ஆகையால் அண்ணா" என்று இன்னும் பேசப்போவதைத் தடுத்துவிட்டு வெளியே விரைவாகச்சென்று தன்னைக் காணவந்த போர்ச்சேவகன் பகையாளிகளின் பாசறைக்குப் போய்ச் சேரும் வரை பத்திரமாகப் பாதுகாக்கும்படி தனது சேவனுக்குக் கட்டளையிட்டுக் குதிரையேறி மகம்மதுகோரி இருந்த இடம் நோக்கிச் சென்றனன். கூடாரத்துள்ளிருந்த ஸஞ்சுக்தா ராணி ஒரு கால்மணி நேரம் காத்திருந்து தன் தகப்பன் வாராமையால் வெளியே போய்ப்பார்த்துத் தேடியும் அவனைக் கண்டிலளாகி அதிக மனக்கவலை யடைந்து தனது சேனைகளிருக்குமிடம்போய்ச் சேர்ந்தனள்.

ஜயசந்திரன் மகம்மதுகோரியோடு சேர்ந்துவிட்டான் என்று நன்கு புலப்பட்டவுடனே, மகம்மதுகோரி ஜயமடைவான் என்று ப்ரித்வி ராஜனுக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல விளங்கியது; ஸஞ்சுக்தா

ராணிக்கும் அவ்வாறே தோன்றியது. ஆயினும் மகம்மதியருக்கு வணங்கி மானத்தையும் சுவாதீனத்தையும் இழப்பதைவிட உயிரை விடுவதே உசிதமென்றெண்ணினர். இனிமேல் நாம் இருவரும் ஒருவரையொருவர் சந்திப்பது அசாத்தியமாய் முடியும் என்று ஒருவரை ஒருவர் அன்பு மிகுதியாலும் நேசத்தாலும் கட்டியணைத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் ஆசீர்வதித்துக் கொண்டனர். இவ்வாறு செய்து பிரியுந்தருணத்தில் ப்ரித்வி ராஜன் தன் மனைவியைப் பார்த்து " எனது பிரிய நாயகியே! நான் போர்க்களத்தை விட்டு முதுகுகாட்டி ஓடி எனக்கு அவமானத்தை வருவித்துக் கொள்வேனென்று நினையாதே. என்னைப் போல் என்னுடைய போர்வீரர் ஒவ்வொருவரும் நடந்து கொள்வார்களென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன் " என்று கூறினன். இதைக் கேட்ட ஸஞ்சுக்தா ராணி " எனது பிரிய நாயகனே! இதைத் தெரிந்தே நான் உம்மைவிட்டுப் பிரிகின்றேன். நீர் போர்க்களத்திலிருப்பது அத்தியாவசியகமாம். நான் டில்லிக்குப் போகாவிட்டால் அங்கிருக்கும் நமது குடிகள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அசக்தர்களாகி மனக்குழப்பமும் திகிலும் அடைவர். இதைத் தடுக்கத்தான் நான் டில்லிக்குச் செல்லுகின்றேன். என் தந்தை தனது மித்திரனாகிய மகம்மது கோரியுடன் டில்லி நகரில் பிரவேசிக்கும்போது அங்கு ஒரு ஸ்திரீயையும் உயிருடன் காணான். இது நிச்சயம்; பிரிய நாயகனே! நீர் அறிவீராக " என்று விடை பகர்ந்தனள். இவ்வாறு சொல்லிவிட்டு நாயகியாகிய ஸஞ்சுக்தாராணி டில்லி நோக்கிச் சென்றனள்; ப்ரித்வி ராஜன் போர்க்களத்திலேயே இருந்தனன்.



சதிபதிகள் பிரிந்து சில மாதங்கள் கழிந்தும் சண்டை ஆரம்பமாகவில்லை. இருதிறத்தாருடைய சேனாவலியும் சமமாக இருந்தமையின் சண்டையைத் துவக்க இருதிறத்தாரும் முன்பின் பார்த்துக்கொண்டிருந்தனர். மகம்மதியர்கள் முன்பு எதிர்க்கட்டுமென்று ப்ரித்வி ராஜன் அநாயாசமாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். டில்லி நகர் சென்ற ஸஞ்சுக்தா ராணி இந்த மாதங்களெல்லாம் என்ன செய்துகொண்டிருந்தாளெனின் கொஞ்சம் தண்ணீரும் ரொட்டியும் சாப்பிட்டுக் கொடூரமான சன்னியாசத்தை அவலம்பித்து வந்தனள். அந்நகரின்கண்ணிருந்த மற்ற மாதர்களும் அவ்வாறே செய்து வந்தனுமன்றி எந்த க்ஷணத்திலும் தங்கள் மானத்திற்காக உயிரைவிடத் துணிந்திருந்தனர். ஸஞ்சுக்தா ராணி முதல், யாசகஞ் செய்துவந்த மகளிர் பரியந்தம் எல்லா மாதர்களும் தங்களுடைய தேச சுவாதீனத்திற்காகவும் பதிவிரதாத் தன்மைக்குப் பங்கம் வாராமலிருப்பதற்காகவும் மகம்மதியருடைய தோல்விக்காகவும் தங்கள் ராஜன் வெற்றிக்காகவும் அல்லும் பகலும் கடுமையான உபவாசமிருந்து தூய மனத்துடன் தங்கள் இஷ்ட தேவதைகளைத் தொழுதுகொண்டிருந்தனர். இவ்வாறு சிலநாட்களல்ல, சில வாரங்களுமல்ல, சில மாதங்களும் கழிந்தன. கடைசியில் மும்மரமாய்ச் சண்டை யாரம்பித்தது. ப்ரித்வி ராஜனும் அவனது ராணியும் எதிர்பார்த்தவண்ணமே ஓர் இராணுவ வீரன் கூடப் பிழைக்காமல் ஹிந்து சேனையானது அழிந்துபோயிற்று. ஓர் இராணுவ வீரனாகிலும் மகம்மதியருக்குக் கீழ்ப்பட்டு அவரது வசமாயினை, அல்லது அவருடைய தயவையாகிலுங் கோரி

னோ? கண்ணுங் கருத்துமிருந்தவளவும் சண்டை செய்தே ராணுவ வீரர்கள் யாவரும் தங்களுடைய உயிரைவிட்டனர். ப்ரித்வி ராஜனும் தன்னைச் சூழ்ந்து இரக்ஷித்துவந்த போர்வீரர்கள் காயங்களால் மடியத் தானும் அவர்கள் மத்தியில் உயிர் துறந்தனன்.

மகம்மதுகோரி ஜயபேரிகையை முழக்கி ஜயசந்திர ராஜனை மிகுதியும் புகழ்ந்தனன். ப்ரித்வி ராஜன் மாண்டதைக் காண ஜயசந்திரனுக்குச் சந்தோஷமல்லவா உண்டாயிருக்க வேண்டும்? அவ்வாறன்றி யாது காரணத்தாலோ மனக்கிலேசத்தை யடைந்தனன். யுத்தகளத்தில் மாண்டவர்களைப் புதைத்துவிட்டு மகம்மது கோரியும் ஜயசந்திரனும் டில்லி நகருட் பிரவேசித்தனர். இவர்கள் பிரவேசியா முன்னரே ஓர் இராணித் தனது அரண்மனைக்குள் பிரவேசிப்பதுபோல ஸஞ்சுக்தா ராணி காஷ்டங்களை வருவித்துத் தீமூட்டி அதனுள் பிரவேசித்து உம்பருலகம் சென்றனள். அதைக்கண்ட மற்ற மாதர்களும் அவ்வாறே எரிகாஷ்டங்களில் பிரவேசித்து உயிரைவிட்டனர். ஆகவே மகம்மது கோரியும் ஜயசந்திரனும் டில்லி நகருள் சென்றபோது தணிந்துவரும் காஷ்டங்களைக் கண்டனரே யன்றி உயிருடன் ஒரு மகளிரையும் கண்டிலர். ஆண்மக்கள் யாவரும் போரில் மாண்டுபோக, பெண்மக்கள் அனைவரும் தீக்குட் பிரவேசித்து மாண்டனர்; மானத்தைப் பெரிதாகக் கருதினரேயன்றி உயிரைப் பெரிதாகக் கருதவில்லை. அதனைக் கண்ட ஜயசந்திரன் அதிக ஆராமையை யடைந்தனன். தன் மனச்சாக்ஷியால் மிகவும் பீடிக்கப்பட்டான். கடுநரகில் வீழ்த்தியபோதிலும் இவ்வித கிலேசமுண்டாகாது. பொறாமையால் தான் அடாத காரியஞ் செய்



ததுபற்றிப் படாத பாடுபட்டான். மறு வருடம் வரு முன்னரே மகம்மதுகோரி ஜயசந்திரனது நகரத்தின்மேல் படை யெடுத்துச் சென்று அவனுடைய நகரத்தைக் கைப்பற்றியதுமன்றி அவனை உயிருடன் வைத்திருந்தால் தனக்கு அநேகம் இடையூறுகள் விளைவிப்பானென்று பயந்து அவனைச் சிரச்சேதஞ் செய்து விட்டனன். ஐயோ! பொறாமையை விட்டுத் தேச சுவாதீனத்தைநாடி ஒற்றுமை பாராட்டி யிருந்தால் ஜயசந்திர ராஜன் இந்தக் கதியை அடைந்திருப்பானோ?

# பத்மினி.

இந்தியா தேசத்தின் வடமேற்கிலே ஸிந்து நதிக்குத் தென் கிழக்கே இராஜபுதன மென்னும் ஒரு நாடுளது. வெளி நிலமுளதாயும் காடு மலைசெறிந்துள்ளதாயும் அந்நாடு காணப்படும். இராஜபுத்திரர் என்று தென்னிந்தியாவில் சொல்லப்படுவோர் ஆதியில் இந்நாட்டில்தான் குடியிருந்தனரென்று மதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நாட்டில் மேவார் என்னும் மாகாணமிருந்தது. இம்மாகாணம் சுமார் 800 வருடங்களுக்கு முன்னே அதிக கீர்த்தி பெற்றிருந்தது. எல்லாவித ஐசுவரியத்திலும் இந்த மேவார் மாகாணத்துக்குச் சமானமான பிறிதொரு ஊர் பரத கண்டத்தில் அக்காலத்தில் இல்லையெனப் பல தேச சரித்திர ஆராய்ச்சி செய்த பண்டிதர்கள் எழுதி யிருக்கின்றனர். இந்த மேவார் நாடானது இந்தியா தேசத்திற்கு நடு

நாயகம்போல் விளங்கிக் கொண்டிருந்தது; சித்தூர்
இதற்குத் தலைநகர். கல்விச் செல்வமும், பொருட்
செல்வமும் நாகரிகமும், தங்குவதற்குச் சித்தூர் தலை
நகர் உறைவிடமாக விருந்தது. ஐரோப்பிய சாதியார்
செய்வதை மேன்மையென மதித்து அவர்களைப்
போல நடக்கத் தற்காலத்தில் நாம் எவ்வித முயற்சி
செய்கிறோமோ அவ்விதமாகச் சித்தூர் தலைநகரிலுள்
ளார் இந்தியா முழுதும் மதிக்கப்பட்டுவந்தனர். சுமார்
800 வருடங்களுக்கு முன்னே சித்தூர் நகரானது
மற்றெல்லா நாடுகளுக்கும் வழி காட்டிக்கொண்டு
வந்தது.

சித்தூர் நகரம் இவ்விதப் பிரசித்தி யடைந்திரு
ந்த காலத்தில் மஹாராஜா இலக்ஷ்மணசிங் கென்ப
வன் மோவர் தேசத்துக் கதிபதியா யிருந்தான். ஆனால்
அக்காலத்தில் அவன் இளைஞனா யிருந்தமையின்
அவன் சிற்றப்பனாகிய பீமன்சிங் கென்பவன் இலக்ஷ்
மண சிங்குக்குப் பதிலாக இராஜ்யபரிபாலனஞ்செய்து
வந்தான். வீரத்திலும், ஆலோசனையிலும் பீமன்சிங்
குக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை. அஞ்சாமையும்,
கொடுத்தலும், விவேகமும், ஒரு காரியஞ் செய்வதில்
ஊக்கமும் ஆகிய இந்நான்கு குணங்களும் அவனிடத்
தில் இயல்பாகப் பொருந்தி யிருந்தன. ஆகவே மோ
வர் நாடானது இவனது பரிபாலனத்தில் செழித்
தோங்கியதுபோல வேறெப்பொழுதும் அவ்வளவு
சீராக ஆளப்படவில்லை. நீர்வளம் நிலவளம் நிரம்பப்
பெற்றதாய், குடிகள் எல்லாரும் தரித்திரம் க்ஷாமம்
பிணிநோய் முதலிய வொன்றுமில்லாமல்பீமன்சிங்குக்
காலத்தில் சுகித்து வாழ்ந்து வந்தனர். பீமன்சிங்
விஷயத்தில் குடிகள் அதிக பயபக்தியையும், விசுவா



சத்தையும் பேரன்பையுங் காட்டி வந்தனர். இவ்வித
சுகவாழ்வானது நெடுநாள் நில்லாதெனக் காணப்பட்
டது.

இவ்வுலகத்தின்கண்ணே எதுவும் நீடித்திருப்ப
தில்லை. சுகமும் துக்கமும் மாறிக்கொண்டே வருகின்
றன. இது கடவுளுடைய நிபந்தனைபோலக் காண
கின்றது. ஆகவே, மோவர் நாட்டாரும் தங்கள் சுகவாழ்
வை இழக்கக் காலம் வந்து விட்டது. இவ்வித விப
த்து இவ்வளவு சீக்கிரம் சம்பவிக்குமென்று ஒருவரும்
கனவிலு மெண்ணவில்லை. முசல்மான்களுக்கு அரச
னான அலாவுடின் என்பவன் வட இந்தியாவைத் தன்
கைவசப்படுத்திக்கொண்டு நகரங்களையும் பட்டணங்
களையும் கொள்ளை யடித்துப் படுசூரணஞ் செய்துவந்
தான். இதன்றியும் ஆலயங்களை யழித்து, வயோதி
கர்களையும் குழந்தைகளையும் கொலை செய்வது முத
லிய அடாத காரியங்களைச் செய்துகொண்டே ஒவ்
வொரு ஊராகப் பிடித்துக்கொண்டு மோவர் தேசத்
தைக் கிட்டினான். மோவர் தேசமானது மேன்மை
வாய்ந்த அரணுளதென்று கண்டான். வெளிநிலமும்
மலையுங் காடும் செறிந்ததா யிருந்ததுடன் உயரமும்
அகலமும் திண்மையு முள்ளதான சுவர்களால் காக்
கப்பட்டிருந்ததைக் கண்டான். மேலும் இத்தேச
மானது தன்னுள்ளிருப்போர்க்கு வேண்டும் பொரு
ளெல்லா முடையதாயும், சௌரிய பராக்கிரம
முடைய சுத்த வீரரையு முடையதாயும் காணப்பட்
டமையின், அதனது அரண் தகர்க்கப்படக் கூடிய
தாய் அலாவுடினுக்குத் தோன்றவில்லை. சேனைப்
பெருமையால் தன்னைச் சூழ்ந்து வளைத்த பகைவ
ரைத் தன்னகத்திலுள்ள வீரர்களால் வெல்லச் செய்

பக் கூடியதாயும் போர் தொடங்கியபோதே பகைவர் நாசமுறச் செய்யவல்ல வீரருள்ளார் என்னும் பெருமையை யுடைத்தாயு மிருந்தது அம்மோவர்நாடு. இந்நாட்டின் அரணையும், இராஜபுத்திரர்களின் வீராவேசப் பராக்கிரமத்தையும், அரசனிடம் குடிகளிருந்த விசுவாசத்தையும் கண்டு அலாவுடின் என்னும் முசல்மான் மன்னன், மோவர் நாட்டிற்குட் பிரவேசிக்கத் தைரியமற்றவனாகி, ஒருகால் தான் இதுவரை யடைந்திருக்கும் புகழுக்குப் பங்கம் வருமெனச் சிந்தாகுலனாய், அபார வல்லமையுள்ள தனது அளவிறந்த சேனையை வேறொரு பக்கம் திருப்பி நடத்த எண்ணங்கொண்டான். அத்தருணத்திலே பீமன்சிங்கின் மனைவி மிக ரூபலாவண்ய முடையவளென்றும், அவளைப்போன்ற அழகுடைய ஸ்திரீ இப்பூமண்டல முற்றிலும் ஓடோடிப் பார்த்தாலும் கிடைக்கமாட்டாளென்றும் இவ்வாறு அவளுடைய அழகைப் பற்றிக் கேள்விப்பட்டான். காமத்துக்கும் பேராசைக்கும் அலாவுடின் அடிமைப்பட்டவனாகையால் மோவர் தேசத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதென்னும் எண்ணத்தைமாற்றி அங்கேயே தங்கிக் கூடாரத்தை நாட்டினான்.

மோவர் நாட்டின் இராஜ காரியத்தைப் பார்த்து வந்த பீமன்சிங் கென்பவனது மனைவியாகிய பத்மினி இராணியையடைய அலாவுடின் முதலில் இரகசியமாய் அனேக முயற்சிகள் செய்தான். தூதர்களை நகரத்திற்குட் செலவிடுத்துத் துர்நடத்தையையுடைய சில ஸ்திரீகளுக்கு லஞ்சங் கொடுத்துப் பத்மினி இராணியினிடத்தில் தன் கருத்தைத் தெரிவிக்கும்படி கூடியமட்டும் சாகசம் செய்து பார்த்தான். பத்மினி இராணியார் இத்தன்மையனான அலாவுடின்



அறிந்திலன். அவள் அதிக மனத்தூய்மையுடையவள். "கற்புறு சிந்தைமாதர் கணவரை யன்றிவேறோர் நிற்புறந் தவரை நாடா"ராகலின் இவனது அரசச் செருக்கும் பராக்கிரமமும் ஆற்றலும் அம்மாதினிடத்தில் பயனிலவாயின. இவ்வாறு இவன் பிரயத்தனம் வீண்போகவே தனது மகத்தான சேனையுடன் மோவர் தேசத்தின்மேல் படையெடுத்துச் சென்று சித்தூர் என்னும் தலைநகரை முற்றுகை செய்தான். (அஃதாவது தன் சேனையால் அந்நகரைச் சூழ்ந்து கொண்டான்). இராஜபுத்திரர் இவனை இலேசாக விட்டனரா? அவர்கள் சிங்கக்குட்டிகளாயிற்றே. தேங்காய்க்கு மாங்காய் தோற்குமாவென்று வெகு பராக்கிரமத்துடன் அலாவுடினை எதிர்த்து நின்றனர். அவர்களது நகரம் நின்றுள்ள மலை எவ்வளவு உறுதியோ அவ்வளவு பலமாய் நிலைகுலையாது நின்று யுத்தஞ் செய்தனர். இரவென்று பாராமலும் பகலென்று பாராமலும் யுத்தம் அதிக கொடூரமாய்ப் பலநாள் நடந்துகொண்டு வந்தது. ஜயமாவது அடைய வேண்டும் அல்லது இறந்தாவது போகவேண்டுமென்கிற பிடிவாதத்துடனே இராஜபுத்திரர்கள் போர்புரிந்து வந்தார்கள். எவ்வளவு நஷ்டம் வந்தாலும் சரி எப்படியாயினும் மோவர்நாட்டைக் கீழ்ப்படுத்த வேண்டுமென்கிற திடத் தீர்மானத்துடன் முசல்மான்கள் முற்றுகை போட்டுக் கொண்டனர்.

தன்னுடைய போர்வீரர்கள் அநேகர் மாண்டமையின் பகைவரை எதிர்த்து நிற்பது அசாத்தியமெனத் தோன்றி சமாதானத்துக்கு ஏற்பாடு செய்தான். அலாவுடின் சமாதானத்துக்கு வழி கொடுத்தால் அனேக பொன் நாணயங்கள் முசல்மான்களுக்

குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமென்று தூதர்கள்
மூலமாக அலாவுடீனுக்குத் தெரிவித்தான். சமாதா
னம் செய்யப் பீமன்சிங்கிற்குச் சற்றேனும் மனமில்லை.
இதைவிட உயிரைத் துறப்பது சிரேஷ்டமென
வெண்ணங்கொண்ட பீமன்சிங்கென்பவன் தன்மேல்
அதிக நேசமும் விசுவாசமும் வைத்துவந்த குடிகளின்
நிமித்தம் சமாதான ஏற்பாடு செய்ய இணங்கினான்.
துராத்மாவான அலாவுடீன் என்பவன் எவ்வித
நியாயமான சமாதானத்துக்கும் ஒத்துவரவில்லை.
"இராஜ புத்திரர்களுக்குச் சமாதானம் வேண்டுமா
னால் அதற்கு ஓரே மார்க்கமுளது. அது என்ன
வெனில் பத்மினி இராணியைத் தனது காம இச்சை
யைத்தீர்க்கும் வண்ணம் தனக்குத் தத்தம் செய்து
விடுவதே. இதுவன்றி வேறு மார்க்கமில்லை" என்று
அலாவுடீன் விடை கூறி அனுப்பினன். இவ்வித
அவமானத்திற்கு இராஜ புத்திரர்கள் உட்படுவார்
களா? படார். ஆகவே மறுபடியும் சண்டை ஆரம்
பித்தது. முற்றுகையும் நடந்து கொண்டு வந்தது.
இவ்விதமாகச் சுமார் $1\frac{1}{2}$ வருடம் கடந்தது. அலாவு
டீன் எவ்வளவோ ஆயிரக்கணக்காகச்சேனைகள் வைத்
திருந்தும் சித்தூராகிய தலைநகரைக் கைப்பற்ற அசக்
தனாயிருந்தான். கொந்தளிக்கும் கடலில் அலைகள்
பலமாக இடைவிடாது மோதியபோதிலும் கன்மலை
யானது எப்படி அசையாது நிற்கின்றதோ அதைப்
போலவே எவ்வளவு மும்முரமாக முசல்மான்கள் பல
மாகத் தாக்கின போதிலும் இராஜபுத்திரர்கள் தங்
கள் இடத்தைவிட்டு நகர்ந்தாரில்லை. இதனால் அலா
வுடீன் என்னும் முசல்மான் அரசன் சண்டைசெய்து
சண்டைசெய்து சோர்வும் களைப்பும் அடையலாயி



னன். இராஜ புத்திரர்களையும் சித்தூரையும் விட்
டுப் போய்விடலாமா என்று அலாவுடீன் எண்ணும்
படி நேரிட்டது. ஆயினும் பத்மினி மாதைக் கைப்
பற்ற இன்னொரு பிரயத்னம் செய்து பார்க்கலாமெ
ன்று இராஜ புத்திரர்களிடம் ஒரு தூதனை அனுப்பி
னான். பத்மினி மாதை ஒருதரமாவது கண்ணால்
பார்த்துவிட்டால் இராஜ புத்திரர்களுடன் சமாதா
னஞ் செய்து தனது சேனைகளை யிட்டுக்கொண்டு
தன்னூர் போய் விடுவதாக அலாவுடீன் அந்தத் தூத
ருடன் சொல்லி யனுப்பினான். இராஜ புத்திரர்களும்
தங்கள் நிலைமை அதிக துர்ப்பலமா யிருந்ததை
நோக்கி என்ன உத்தரம் அலாவுடீனுக்கு அனுப்பிக்க
வேண்டுமென்று தீர்மானிக்கப் பெரியகூட்டம் ஒன்று
கூட்டினார்கள். பத்மினி இராணியின் பிரதி பிம்பத்
தை ஒரு கண்ணாடியில் பார்க்கச் சம்மதிப்பட்டால்
அவ்விதம் அலாவுடீன் பார்ப்பதில் தீங்கில்லை யென்
றும் அப்படி கண்ணாடியில் பிரதி பிம்பத்தைப்
பார்க்க வரும்பொழுது சில போர்வீரர்களுடன்
தான் கோட்டைக்குள் அலாவுடீன் பிரவேசிக்கலா
மென்றும் அக்கூட்டத்தில் தீர்மானித்தார்கள். இந்
தத் தீர்மானத்தை அலாவுடீனுக்குத் தெரிவித்தார்
கள். அவனும் அதற்குச் சம்மதித்தான். பத்மினி
இராணியின் உருவைக் கண்ணாடியில் காட்ட ஒரு
நாள் குறிக்கப்பட்டது. சண்டை முற்றும் நின்று
விட்டது. குறித்த நாளில் குறித்த காலத்திலே
அலாவுடீன் வந்தான்; அவனுக்குப் பத்மினி யென்
னும் இராணியின் பிரதிபிம்பம் கண்ணாடியில் காண்
பிக்கப்பட்டது. இவ்வாறு தான் பத்மினியின் உரு
வத்தைக் கண்டதற்கு அதிக திருப்தி யடைந்தவனா

கக் காண்பித்துக் கொண்டது மன்றி இராஜபுத்திரர்
ஊர் மேல் படையெடுத்து வந்து இத்தனை நாள் சண்
டை செய்ததற்காகத் தான் அதிகத் துயரப்படுவதா
கவும், தான் இறந்து போகுமளவும் நண்பனாக இருப்
பதாகவும், வாக்குதத்த மளித்தான். பீமன்சிங்கி
னிடம் விடைபெற்றுப் போகாமுன் பின்வருமாறு
சொன்னான். "எனது அரிய சிநேகிதனே! இராஜ
புத்திர ஜாதியார் இவ்வளவு வீராவேச முடையவ
ரென்றும், அவர்களுடைய இராஜ காரியத்தை நட
த்திவரும் நீ இவ்வளவு மேம்பாடான குணத்தை
யுடையவ னென்றும், புகழும் கீர்த்தியும் நிரம்பப்
பெற்றவ னென்றும் எனக்குத் தெரிந்திருந்தால் நான்
யுத்தத்திற்கு வந்தே யிருக்க மாட்டேன்; உங்கள் நட்
பையடையக் கோரியிருப்பேன். உன்னுடைய நட்
பால் இன்று நான் மிகவும் கண்ணிய மடைந்தேன்.
இன்று முதற் கொண்டு இராஜ புத்திரர்களுக்கும்
முசல்மான்களுக்கும் பகைமை போய்விட்டது. பகை
மை இனி எப்பொழுதுமே உண்டாகாது" என்று
இவ்வாறான அன்புவாய்ந்த மொழிகள் கூறி பீமன்
சிங்கை ஆலிங்கனஞ் செய்து அவனது கரத்தைத்
தனது கரத்தால் பிடித்துக் குலுக்கிப் பெருவகை
காட்டிப் பின்னுமொரு மொழி பகரலாயினன். "ஒரு
வரை விட்டு ஒருவர் நாமிப்பொழுது பிரிந்து செல்லா
முன் நான் ஒன்று உன்னைக்கேட்டுக் கொள்ளுகிறேன்
நீ ஆசைபங்கம் செய்யமாட்டா யென்று நம்புகிறேன்;
அது யாதெனில் நாளைக்கு நீ என்னுடைய பாசறை
க்கு வந்து உனது சன்னிதானத்தால் என்னைக் கண்
ணியப்படுத்த வேண்டும். இதுதான் எனது வேண்டு
கோள்" என்றான். சத்தியசீலனும் கம்பீரமுடைய



வனுமான பீமன்சிங்கென்னும் மன்னன் அலாவுடீன்
கபட வெண்ணத்துடனே ஏதோ தீங்குசெய்யநம்மை
அழைப்பிக்கின்றான் என்று சங்கியாது அப்படியே
ஆகுக என்று மறுமொழி பகர்ந்தனன். அலாவுடீன்
மன உல்லாசத்துடன் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்
தான்.

தான் வாக்குதத்தம் செய்த வண்ணம் சில ஆட்
களுடன் பீமன் சிங்கென்பவன் குதிரை மீதேறிக்
கோட்டையை விட்டுப் புறப்பட்டு முசல்மான் அரச
னிருந்த பாசறையை நோக்கிச் சென்றனன். ஆனால்
நம்பிக்கைத் துரோகியாகிய அந்த அலாவுடீன் பீமன்
சிங் பாசறைக்குப் போகும் வழியில் நூற்றுக்கணக்
கான போர்வீரர்களை ஒளித்து வைத்துக்கொண்டிருந்
தான். பீமன்சிங் தங்களை நெருங்கி வந்தவுடனே
திடீரென்று அவன்மேல் விழுந்து இராஜ புத்திரர்கள்
பீமன்சிங்கை இரக்ஷிக்கக் காலந்தராது முசல்மான்
கள் பீமன்சிங்கைக் கைதியாக்கிக் கொண்டனர். இச்
சமாசாரத்தைப் பாசறையிலுள்ள அலாவுடீன் கேள்
விப்பட்டவுடனே பெருவகை அடைந்தான். சித்
தூரிலோ இது அதிக மனக்கலக்கத்தையும் குழப்பத்
தையும் உண்டாக்கியது. இவ்விதமாக மனக்கலக்கத்
தாலுங் குழப்பத்தாலும் இடியுண்டு வருந்திக்கொண்
டிருந்த இராஜபுத்திரர்களிடம் அலாவுடீனால் அனுப்
பப்பட்ட தூதன் ஒருவன் வந்து பின்வருமாறு உரக்
கக் கூவினன். "அடே இராஜ புத்திரர்களே! நீங்கள்
இப்பொழுது உங்கள் பத்மினி இராணியை எங்க
ளுடைய தளகர்த்தரும் மன்னனுமாகிய அலாவுடீன்
வசம் இந்த க்ஷணமே கொண்டுவந்து விடாதிருப்பீர்
களானால் உங்கள் அரசனாகிய பீமன்சிங்கென்பவன்

கொல்லப்படுவான் ; சண்டையும் மறுபடியும் துவக்
கப்படும். இது எங்களுடைய இராஜன் தானே
என்று செவ்வனே யறியுங்கள்'' என்றான். இவ்வாறு
செருக்குடன் முசல்மான் தூதன் கதறிய மாற்றங்
களைச் செவியேற்ற இராஜ புத்திரர்களின் மனம் எப்
படி யிருந்திருக்கலாமென்று மனதினால் யூகித்துணரக்
கூடுமேயன்றி வாக்கால் விவரித்துரைக்கற்பாலதன்று.

இலக்ஷ்மணசிங் இராணா என்பவன் ஒரு சிறு
பையன்; பீமன்சிங்கின் குமாரர்கள் பன்னிரண்டு
பேரும் அவ்விதமே மிக இளைஞராயிருந்தனர். பீமன்
சிங்கை முசல்மான்கள் நம்பிக்கைத் துரோகஞ்செய்து
சிறையில் அடைத்து விட்டார்கள் என்று தெரிந்த
வுடனே சேனாதிபத்யத்தை பத்மினியின் சகோதர
னாகிய கோர்சிங் கென்பவன் வகித்துக் கொண்டான்.
ஆனால் இராஜாங்கத்தை மாத்திரம் பத்மினி இராணி
தானே நடத்த எடுத்துக்கொண்டனள். தனது கண
வனாகிய பீமன்சிங்கென்பவன் முசல்மான்கள் கையில்
அகப்பட்டுக் கொண்டானே என்கிற சமாசாரம் பத்
மினிமாதைத் துக்கக்கடலில் ஆழ்த்திப் பிரமையடை
யும்படி செய்யவில்லை. அவனை அம்முசல்மான்களின்
வசத்தி னின்றும் விடுவிக்கும் மார்க்கத்தை யோசிக்
கலாயினள். உடனே ஒரு பெரிய சபை ஒன்று கூட்
டினள். அதில் பெரியோர்களையும், சர்தார்களையும்,
தளகர்த்தர்களையும், பிரபுக்களையும், சிற்றரசர்களை
யும் வரவழைத்தனள். எல்லாரும் வந்து கூடியவுட
னே பீமன் சிங்கை மீட்கும்வகையை யோசித்துச்
சொல்லும்படி ஆஞ்ஞாபித்தனள். பத்மினி மாதைக்
கைப்பற்ற வேண்டுமென்னும் பிடிவாதங் கொண்ட
துராத்மாவான அலாவுடீன் என்பவன் எந்த ஏற்பாட்



டுக்குத்தான் சம்மதிப்பான்? சண்டை செய்து அவனை
வெல்லலாமெனில் அது அசாத்தியமாக இருந்தது.
என்ன செய்வதென்று அச்சபையோர்க்கு ஒன்றும்
புலப்படாமல் நடுக்கடலில் திசைதப்பி மயங்கும்
மாலுமியைப்போலத் திகைத்து நிற்பதைப் பார்த்துப்
பத்மினி சூழ்ச்சி ஒன்று எடுத்துரைத்தனள். தான்
அலாவுடீனிடம் செல்வதாகவும் அப்படிச்செல்வதால்
அலாவுடீன் எண்ணம் கைகூடாமலும் அவளது பதி
பதிவிரதா தருமம் குலையாமலும் இருக்கும்படியான
மார்க்கத்தைச் சபையோர்க்குத் தெளிவாக எடுத்
துக் காட்டவே, அச்சபையோரும் அவளது ஏற்பாட்
டை "நன்று நன்று'' என்று கைகொட்டி அங்கீகரித்
தனர். இந்த ஏற்பாட்டின் பிரகாரம் பத்மினி மாது
உம்மிடம்வரப் பிரியமுள்ளவளா யிருக்கின்றனள்.
ஆனால் அவள் மேலிருக்கும் பேரன்பினால் அவளது
தாதிகள் அவளைப் பின்தொடர்ந்து உமது கூடாரத்
தின் வாசற்படி வரை வந்து வழிவிட்டுச் செலவுபெற்
றுப்போக உத்தரவு கொடுக்க வேண்டுமென்று அத்
தாதிகள் எல்லோரும் கண்ணீர்விட்டு மிக்வும் மன்றாடி
பத்மினி இராணியைக் கேட்டுக் கொள்கின்றமையின்
அத்தாதிகளும் திரைபோட்ட பல்லக்குகளுடன் வரு
ம்படி தாங்கள் உத்தரவு அளிக்க வேண்டும். இவ்
விதம் பத்மினி மாது தங்கள் வசம் ஆனவுடனே
பீமன்சிங்கை விடுவிக்க வேண்டும். இது தங்களுக்
குச் சம்மதமாயின் சமாதானஞ் செய்ய இராஜ புத்தி
ரர்கள் தயாரா யிருக்கின்றனர்'' என்று இவ்வாறு
சொல்லும்படி ஒரு தூதனுக்குக் கட்டளையிட்டு அல்
லாவுடீனிடஞ் செல்ல விடுத்தனர். அந்தத் தூதனும்
அலாவுடீனிடம் அவ்விதமே போய்ப் புகன்றனன்.

இதைக் கேட்டவுடனே காமுகனை அலாவுடீன்
ஆனந்தக்கடலில் ஆழ்ந்தனன். இராஜ புத்திரர்கள்
சொல்லியனுப்பிய ஏற்பாடுகள் யாவற்றிற்கும் எனக்கு
முற்றும் சம்மதமே; நீ விரைவாக அவர்களிடம் திரும்
பிச் சென்று பத்மினிமாதைக் காலதாமதஞ் செய்யா
மல் என்னிடம் வரும்படி சொல் என்று அலாவுடீன்
மறுமாற்றங்கூறித் தூதனை அனுப்பி விட்டான்.

தூதன் வந்து அலாவுடீன் சம்மதத்தைத் தெரி
வித்தவுடனே பத்மினி இராணி பல்லக்கிலேறிக் கோ
ட்டையை விட்டு வெளிவந்தனள். அவளை 700 பல்
லக்குகள் பின் தொடர்ந்து வந்தன; அதிக பலசாலிக
ளான இராஜபுத்திரர்கள் இப்பல்லக்குகளைச் சுமந்து
சென்றனர். இவ்வாறு சுமந்து சென்ற இராஜ புத்
திரர்கள் தங்கள் உடுப்புகளில் போர்செய்யும் ஆயுதங்
களை மறைத்து வைத்திருந்தனர். ஒவ்வொரு பல்லக்
குள்ளும் இரண்டிரண்டு போர்வீரர்கள் பூரண ஆயுத
பாணிகளாய் உட்கார்ந்து கொண்டிருந்தனர். இவர்
களுக்குத் தளகர்த்தனாகிய கோராவும் அவனது குமா
ரனாகிய 12 வயதுள்ள படால் என்பவனும் ஒரு பல்
லக்கில் ஏறி பத்மினி மாதைப் பின்தொடர்ந்து சென்
றனர். பல்லக்கிலேறி வந்த யாவரும் தாதிகளென்றே
முசல்மான்கள் எண்ணினர். ஐயம் ஒன்றும் தட்டா
மையால் இராணியின் வரவை இராஜ மரியாதை
யுடன் கண்ணியப் படுத்தித் திரைபோட்டு மூடியிரு
ந்த 700 பல்லக்கையும் முசல்மான் காவலாளிகள்
பாசறைக்குள் செல்ல விடுத்தனர்

பத்மினி மாதைச் சந்திக்க அலாவுடீன் விரைந்து
ஓடி வந்தனன். அப்போது திரைக்குள்ளிருந்தபடியே
பத்மினி மாது ஒரு மொழி கூறினள். அதாவது



னில் "ஓ! மன்னர் மன்னனே! யான் உமது ஆதீனமாக
விருக்கும்படி வந்திருக்கிறேன். உமது ஆதீனமாகா
முன் கடைசியாக என் கணவனை ஒருதரம் பார்த்துப்
பேச ஆவல் கொண்டவளாயிருக்கிறேன். தாங்களித
ற்கு உத்தரவு அளிக்க வேண்டுமென்று மன்றாடிக்
கேட்டுக் கொண்டனள். காமாந்த காரத்தால் சூறை
கொள்ளப்பட்டு அறிவு மயங்கிய அலாவுடீன் இந்த
வேண்டுகோளுக்கிணங்க யாதொரு ஆக்ஷேபணையுங்
கண்டிலனாகையால் பீமன்சிங்கை யடைத்து வைத்தி
ருந்த சிறைச்சாலைக்குப் பல்லக்கைக்கொண்டுபோகும்
படி கட்டளையிட்டனன்.

இதற்கு முந்திய நாள் இரவில் இரண்டு இராஜ
புத்திரர்கள் வாயுவேக மனோவேகமென்று சொல்லக்
கூடியதாயும், மின்னல் வெளிச்சம் தோன்றி
மறையுங் காலத்திற்குள் அதிக தூரம் செல்லக்
கூடியதாயும் இருந்த இரண்டு குதிரைகளுடன்
முசல்மான்கள் வேஷம்பூண்டு முசல்மான்கள்
பாசறைக்குள் காவலாளிகளின் கண்ணில் மண்ணைப்
போட்டுச் சென்று பீமன்சிங்கிருந்த கூடாரத் தண்
டை பத்மினி மாதின் கட்டளைப்படி அந்தக் குதிரை
களுடனே காத்துக்கொண்டு நின்றிருந்தனர். பீமன்
சிங் இராணியின் கூடாரத்தண்டை பல்லக்குகள்
வந்தவுடனே, தான் கட்டளை யிட்டபடி இரண்டு
இராஜபுத்திரர்கள் குதிரைகளுடனே காத்துக்கொ
ண்டிருந்ததைக் கண்ட மாத்திரத்திலே பத்மினி இரா
ணியின் மனக்கிலேசம் வெயிலின்முன் பனிபோல நீங்
கிற்று. பத்மினி மாது தன் கணவனிருந்த கூடாரத்
திற்குள் சென்றபோது இதைக்கண்ட பீமன்சிங்

அதிக ஆச்சரியமடைந்து "பெண்ணே! நீ என்ன காரியம் செய்தனை? நீ ஏன் இங்கே வந்தனை?" என்று கூவி அலறினன். "என் பிராண நாயகனே! சந்தடி பண்ணாதேயும், உம்மை விடுவிக்கத்தகுந்த ஏற்பாடு செய்து வந்திருக்கிறேன். நாம் ஏறிப்போக இரண்டு குதிரைகள் வெளியே நிற்கின்றன. காலதாமதம் செய்யாமல் உமது உடுப்புகளையும் ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு புறப்படும்புறப்படும்" என்று அவன் காதண்டை மெல்லிய குரலுடன் கூறினள். அவனும் அவ்வாறே தயாராய் விட்டான். இருவரும் சரேலென்று கூடாரத்திற்கு வெளியே வந்து அங்குநின்று கொண்டிருந்த குதிரைகளின் பேரில் ஏறிக்கொண்டு சதிபதி யிருவரும் மறைந்து விட்டனர். இதனைக் காவலாளிகள் எதிர் பாராமையின் இவர்களைத் தடுக்க இயலாமற் போயிற்று.

பாசறையில் எங்கே பார்த்தாலும் குழப்பமும் திகிலும் உண்டாயிற்று. இதுதான் நல்லசமயமென்று பல்லக்குகளிலிருந்த இராஜ புத்திரர்கள் கீழே இறங்கி தங்களாயுதங்களை உருவிக்கொண்டு முசல்மான்களைத் தாக்கினார்கள். இதனால் பீமன் சிங்கையும் தைரியசாலியான அவனது மனைவியையும் பின்தொடர்ந்து சென்று அவர்களைப்பிடிக்க அசாத்தியமாயிற்று. இராணாவும், இராணியும் தப்பி ஓடிக்கொண்டிருந்த வழி முழுதும் இருபக்கங்களிலும் இராஜபுத்திரர்கள் சூழ்ந்திருந்தமையின் அவர்களிருவரும் பத்திரமாய்ச் சித்தூர் நகரைப்போய்ச் சேர்ந்தனர்.

இஃது இப்படியிருக்க பாசறையிலே முசல்மான்களுக்கும், இராஜபுத்திரர்களுக்கும் பெருத்த



யுத்தம் நடந்தது. இராணாவாகிய பீமன்சிங்கைச்
சிறையிலிருந்து விடுவிக்க ஏற்பாடு செய்தபோதே
தாங்கள் யாவரும் உயிரைவிட வேண்டுமென்று தெரி
ந்துகொண்டேயல்லவா அவர்கள் பல்லக்கில் ஏறி
இராணியுடன் சென்றனர். ஆகையினால் அதிக உக்
கிரமாகச் சண்டைசெய்து இராணாவையும், இராணி
யையும் பின்தொடர்ந்து செல்லாவண்ணம் முசல்மா
ன்களுக்கு இடையூறுகள் செய்து நின்றனர். ஒரு
சிங்கமானது தான் உயிர்தப்பிச்செல்ல வழியில்லை
யென்று கண்டால் எவ்வளவு உக்கிரத்துடனே
தாக்குமோ அவ்வளவு உக்கிரகத்துடனே இராஜபுத்தி
ரர்கள் போர்செய்தார்கள். ஆனால் வெகு சீக்கிரத்
திலே எண்ணிறந்த முசல்மான் வீரர்கள் வந்து இராஜ
புத்திர வீரர்களைச் சூழ்ந்து கொண்டனர். இதனைக்
கண்ட இராஜபுத்திரர்கள் முதுகுகாட்டி ஓடாமல்
இரஷபங்களைப்போலச் சண்டை செய்தனர். இவரது
தளகர்த்தனான கோராவென்பவன் வீழ்த்தப்பட்டு
வீர சொர்க்கமடைந்தான். உடனே அவனது புதல்
வனான படால் என்னும் சிறுவன் தளகர்த்தத்தன்மை
யை வகித்து யுத்தத்தை நடத்த ஆரம்பித்தனன்.
12 வயதுள்ள ஒரு சிறு பையன் ஒரு சிங்கக்குட்டி
யானையைத் தாக்கிக்கொல்ல முயல்வதுபோல முசல்
மான்களை நிர்ப்பயமாய்த் தாக்கி அவர்களைக்
கொன்று அதிக வீராவேசத்துடன் சண்டை
செய்தபோது அவனைக்கண்ட எவன்தான் தானும்
சண்டை செய்யாமலிருப்பான்? ஆயினுஞ்சாவு நூறி
னுஞ்சாவு என்னும் ஆன்றோர்வாக்கை மனதிற்கொண்
டவராகி உயிருக்கு வரும் அபாயத்தை நோக்கின

ரில்லை. தேசத்தைக் காப்பாற்றுவதும், இராஜாவைப்
பகைவர் கையினின்றும் எவ்விதமாயினும் விடுவிக்க
வேண்டுமென்கிற அவாவும், ஸ்திரீகளின் பதிவிரதாத்
தன்மை குலையாமல் இரக்ஷிக்க வேண்டுமென்கிற கட
மையினுணர்ச்சியும் ஆகிய இவை முதலிய எண்ணங்
களே அந்த இராஜபுத்திரர்களுக்கு உயிரினுஞ் சிறந்த
வையா யிருந்தன. தற்காலத்து ஹிந்துக்களாகிய
நமக்கு இவ்வித சிறப்புவாய்ந்த நோக்கங்களெல்லாம்
போய் "பந்திக்கு முந்திக்கொள் படைக்குப் பிந்திக்
கொள்" என்னும் இழிவை விளைவிக்கத்தக்க எண்
ணம் புகட்டப்பட்டு வருகின்றது. மரண பயம் யெல்
லாரையும் பிடித்துக்கொண்டிருப்பதினாலல்லவா நாம்
புழுக்கள்போல நமது வாழ்நாளைக் கழித்து வருகின்
றோம். மரணத்தைத் திரணமெனக் கருதிய அந்த
இராஜபுத்திரர்கள் சண்டைசெய்து எல்லாரும் மாண்
டனர். நடந்த விருத்தாந்தத்தைச் சொல்ல ஓர் இராஜ
புத்திரனாகிலும் சித்தூருக்குத் திரும்பிச் சென்றா
னில்லை. எல்லாரும் மாண்டு வீரசொர்க்க மடைந்த
னர். அல்லாவுடின் பாசறை தொம்சமாய் விட்டது;
அவனுடைய சேனையில் சற்றேறக்குறையப் பாதி
மாண்டுவிட்டது. இது நடந்து சுமார் 1200 வருடங்
களாகின்றன. இந்தச் சண்டையில் மாண்ட 12 வய
துள்ள படால் என்னும் சிறுவனுடைய வீரச்செயல்
கள் இந்நாளிலும் இராஜபுதனத்தில் கொண்டாடப்
பட்டு வருகின்றன.

பீமன்சிங் தப்பித்து அவனது ஊர்போய்ச்சேர்ந்
ததும், 12 வயதுள்ள துணிகரமும் தைரியமுமான
படால் என்னும் சிறுவன் மாண்டதும் முசல்மான்



களையும் இராஜபுத்திரர்களையும் முறையே உயிருக்குத்
துணிந்து சண்டை செய்யும்படி ஏவின. முசல்மான்
பூண்டு முழுதையும் தொலைத்தாகிலும் விடவேண்டும்
அல்லது நாமாயினும் ஊர் பேரில்லாமல் சண்டையில்
மாண்டாயினும் போகவேண்டுமென்று இராஜபுத்திரர்
கள் கங்கணங் கட்டிக்கொண்டனர். அவ்விதமே
முசல்மான்கள் சித்தூரையும் பத்மினி இராணியை
யும் கைப்பற்ற வேண்டும்; இல்லாவிடில் படுகளத்தில்
பிராணனைவிட வேண்டுமென்று அல்லாவுடின் பிரதி
ஞ்ஞை செய்தனன். ஐயோ! இராஜ புத்திரர்கள்
எண்ணம் நிறைவேறும்போலத் தோன்றவில்லை. அக்
ரமக்காரனை அலாவுடின் ஜயமடைவானெனக் காண
ப்பட்டது. எப்படியெனில் பீமன்சிங் கென்பவன்
ஒரு கனவு கண்டான். தனது இஷ்ட தேவதை
"மால்பூகேஊ" அஃதாவது நான் பசியாயிருக்கிறேன்
என்று சொன்னதுபோல ஒரு சத்தம் கேட்டான்.
சித்தூரை இரக்ஷித்துவந்த தேவியானவள் பீமன்ஸிங்
கின் கனவில் பிரஸன்னமாகி இராஜவம்சத்திலுதித்த
12 பேரின் உதிரத்தைக் குடித்தாலொழிய என்தாகம்
தீராது என்று கூறினாள். இக்கனவு கண்டதுபோல
வே அவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவராகப்போர்
க்களத்திற்குச்சென்று மாண்டனர். இப்படி 11 பிள்
ளைகள் இறந்தனர்; இன்னும் ஒரு முறை தான் சண்
டை செய்யவேண்டியதா யிருந்தது;முசல்மான்களைத்
துறத்திவிடக் கடைசியாகப் பிரயத்தனஞ் செய்தனர்.
எவ்வளவு ஊக்கமுடையவர்களாயும் சௌரிய பராக்
கிரம முள்ளவர்களாயும் உயிர்க்குத் துணிந்தவர்களா
யும் இராஜபுத்திரர்களிருந்தபோதிலும் அது பயனற்று

தாப் முடிந்தது. அல்லாவுடின் சேனை ஆயிரக்கணக்
காக விருந்தது. இரஜபுத்திரர்கள் ஒருகைபிடி அள
வாயிருந்தனர். ஆதலின் ஜயமடைவோம் என்கிற
கோரிக்கை கிஞ்சித்தும் இரஜபுத்திரர்களுக்கில்லை.
தாமெடுத்த காரியம் கைகூடாவிடினும் தங்கள் உயி
ரை இரக்ஷித்துக் கொள்ளும் பொருட்டு முசல்மான்
களுக்குக் கீழ்ப்படிவதைவிட தங்கள் ஊரையும்
ஸ்திரீகளின் பதிவிரதாத் தன்மையையும் உடலில்
உயிருள்ள வரையிலும் இரக்ஷிப்பது மேன்மை
யென்று சண்டைசெய்யத் தீர்மானித்தனர். தங்கள்
வம்சம் முற்றும் நிர்மூலமாகுமென்பது திண்ணமென்று
தெரிந்தமையின், இராஜவம்சத்தைச் சார்ந்த ஒரு
பிள்ளையை எப்படியாயினும் இரக்ஷித்து வைத்தால்
இவனால் கடைசியில் சித்தூர் இராஜ்யம் மறுபடியும்
ஸ்தாபிக்க இயலுமென்று நினைத்து பீமன்சிங்கின்
கடைக்கோடி பிள்ளையை ஒரு தாதி கையில் கொடு
த்து காட்டிற்குள் பிரவேசித்திருக்கும்படி கட்டளை
யிட்டனுப்பினர். அவளும் அப்படியே செய்தனள்.
இம்மாதிரியாக இராஜவம்சத்தைப் புதுக்கக்கூடிய
ஓர் இளங் குமாரனைக் காப்பாற்றினர். இது முசல்
மான்களுக்குத் தெரியாமற் போயிற்று.

கிழம் கிட்டு நிராதரவான குழந்தைகள் இவர்
கள் தவிர மற்றெல்லா இராஜபுத்திரர்களும் யுத்த
களம் போயினர். பீமன்சிங் இவர்களுக்குத் தலைகர்த்
தனாகிச் சண்டையை நடத்தினான். இரஜபுத்திரரும்
முசல்மான்களும் உயிருக்குத் துணிந்து மிகுந்த பிடி
வாதத்துடன் போர்புரிந்தமையின் எவ்வளவு மும்மர
மாய்ச் சண்டை நடந்திருக்குமென்று யூகித்துணரற்



பாலதேயன்றி உரைக்கற்பாலதன்று. உதயத்திலிரு
ந்து மாலை வரையிலும் தேங்காய்க்கு மாங்காய் தோற்
குமா என்று தோற்புக் கெலிப்பின்றி, சண்டை நடந்
தது. அந்திப்பொழுதில் ஓர் இராஜபுத்திரன் கூட
உயிரோடில்லை. அல்லாவுடின் பிரம்மாண்டமான
சேனையும் சற்றேறக்குறைய முற்றும் மாண்டது.

சித்தூர் நகரத்திலிருந்தோர்க்குச் சண்டையின்
முடிவு சாயரக்ஷை தெரிந்து நகரத்தின் மத்தியில்
பெரிய காஷ்டம் ஒன்று உண்டுபண்ணப் பத்மினி
இராணி கட்டளையிட்டனள். காஷ்டம் தயாரான
வுடனே பத்மினி இராணி தனது தாதிமார்களுடன்
நகரிலுள்ள மற்ற மாதர்களுடனும் அரண்மனையை
விட்டு வெளியே வந்து காஷ்டத்தண்டை வந்தனள்.
காஷ்டத்திற்கு தீ மூட்டப்பட்டது. பத்மினி இராணி
இந்தக் காஷ்டத்தை ஏழுதரம் வலம்வந்து அக்காஷ
டத்தில் குதித்தனள். மற்ற ஸ்திரீகளும் அப்படியே
செய்தனர். அல்லாவுடின் ஜயபேரிகை யடித்துக்
கொண்டு நகரத்திற்குள் பிரவேசித்தபோது என்ன
கண்டான்? பத்மினி மாதைக் கண்டானா? அல்லது
மற்றெந்த மாதரையாயினும் கண்டனனா? அல்லது
ஏதாவது ஐசுவரியத்தையாயினும் கண்டனனா? பட்
டணம குட்டிச்சுவர்போ லிருந்ததையும், காஷ்டத்
தின் தீ நீற்று வருவதையும் கண்டான். இரஜபுத்தி
ரர்களுடைய ஒற்றுமையும், தேசாபிமானமும், இரா
ஜபக்தியும் வீரத்தன்மையும் வியக்கத்தக்கன.

# அர்கால்நாட்டின் ராணி.

வட இந்தியாவில் பேஹார் (Behar) என்னு
மொரு மாகாணமுளது. அதில் பக்ஸார் (Buxar)
என்னுமொரு பட்டணமுண்டு. அதனருகே அர்
கால் என்னும் ஓர் ஊருண்டு. இதனை ஒரு பெரிய
ஜமீன் என்று சொல்லுதல் கூடும். கௌதமன் என்
னும் ஒரு பிரபு ஒரு காலத்தில் இவ்வூருக்கு அதிபதி
யாயிருந்து வெகு பராக்கிரமத்துடனே தன் நாட்
டின் காரியத்தை நடத்திவந்தான். அப்போது முசல்
மான்கள் ராஜரீகம் ஓங்கியிருந்தது. இந்த முசல்
மான்கள் மெல்லமெல்ல எல்லா நாடுகளையும் தங்கள்
வசப்படுத்திக்கொண்டு சிற்றரசர்களையும் பிரபுக்களை
யுங் கப்பங் கட்டும்படி செய்து வந்தனர். மேற்கூறிய
அர்கால்நாட்டதிபதியாகிய கௌதமனையும் அவ்வா
றே கப்பங்கட்டுமாறு கேட்டனர். அவன் அதற்கு
உடன்படவில்லை. ஆகவே டில்லியிலிருந்த துலுக்கச்
சக்ரவாதத இந்த அர்கால்நாட்டைத் தாக்கும்படி
தனது பிரதிநிதியாகிய வயோத்தியா கவர்னர்க்குக்
கட்டளையிட்டான். இந்தக் கவர்னரும் சக்ரவர்த்தி
யின் ஆக்கினைப்படி ஒரு பெரும்படையுடன் அர்கால்
நாட்டை எதிர்த்தான். கௌதமன் சாமானியனல்
லன். வெகு பராக்கிரமசாலி; சமர்த்தன்; போருக்
கஞ்சாதவன்; ஜயம் பெறுதற்குரிய சூழ்ச்சியில் நிபு
ணன். இவன் இவ்வளவு பராக்கிரமமுடையவனென
எவரும் அறிந்திலர்; அயோத்தியாக் கவர்னரை அர்
கால்நாட்டில் கால்வைக்காதவண்ணம் அடித்துத் துர



த்திவிட்டனன். அப்பொழுதுதான் கௌதமன்
இத்தன்மையனென யாவர்க்குந் தெரியவந்தது.
அயோத்தியாக் கவர்னர் உயிர்தப்பிப் போனது அதிக
வியக்கத்தக்க விஷயமாக விளங்கியது. அயோத்தி
யாக் கவர்னரது சேனை சின்னபின்னமாகிப் பெரும்
பான்மையும் நசித்துப்போக, மிகுந்த சில காலாட்
படையுடன் டில்லி முசல்மான் சக்ரவர்த்தியால் அனு
ப்பப்பட்ட அயோத்யாக் கவர்னர் தன்னூர்போய்ச்
சேர்ந்தான். கௌதமன் ஜயபேரிகை யடித்துக்
கொண்டு தனது ஊர்க்குவந்து திருவிழா, விருந்து
முதலியவைகளினால் சந்தோஷம் கொண்டாடினான்.
இச்சம்பவம்நேர்ந்த சிலநாட்களில் பௌர்ணமி தினம்
வந்தது. கௌதமன் மனைவி பௌர்ணமி தினம்
விரதம் இருப்பதுண்டு. அந்நாட்களில் இராணி உப
வாசமிருநது கங்கையில் ஸ்நானஞ்செய்து தனது
இஷ்ட தேவதையின் பூஜையில் சிரத்தையுடையவ
ளாயிருப்பது வழக்கம். இந்தப் பௌர்ணமி தினம்
முசல்மான்கள் கங்கை நதிக்கரையில் சேனைகளுடன்
இறங்கி யிருந்தமையின் அந்நதியில் ஸ்நானஞ்செய்
வது இயலாததுபோல் தோன்றவே, இராணியின்
மனது துக்கசாகரத்தில் அழுந்தியிருந்தது; தான்
இதுகாறும் நடத்திவந்த தவத்திற்குப் பங்கம் வந்து
விடுமோ என்னும் பயமானது அம்மாதை வாட்டினது.
துராத்மாக்களான துலுக்கரைத் தாண்டிச் சென்று
கங்கைக்கரையை எப்படிக் கிட்டுவது? அந்நதி தீரத்
தில் மூழ்கிச் சில சடங்குகள் செய்து மீண்டும் எவ்வி
தம் இல்லம் சேர்வது? துணிந்து செல்லுவோமாயின்
முசல்மான்கள் கத்திக்கு இரையாகி விடுவோம்; உயி
ருக்குப் பார்த்தால் இத்தனை ஆண்டுகளாக நாம் மேற்

கொண்ட விரதத்திற்கு பங்கம் வந்து "நமக்கு இனி
உளதென நினைக்கும் கதியை "இழந்து விடுவோமோ?
முற்பிறப்பில் எத்தவம் புரிந்தோ இம்மானிடப் பிறவி
பெற்றுக் குணசீலனும் ஐசுவரியவானுமாகிய கௌதம
னுக்கு வாழ்க்கைப்பட்டோம். நமது ஐசுவரியமும்
நமது சுகமும் கடவுள் கிருபையினாலல்லவா கிடைத்
திருக்கின்றன. இச் சுகமும் எந்நாளு மிருக்குமோ ?
எதற்குத் தொடக்கமுண்டோ அதற்கு அந்த முண்
டல்லவா ? யோசித்துப் பார்க்கில் உலக வாழ்க்கையில்
சுகமே இல்லை. "தோன்றிநின் றழியப்படுங் கொடும்
பிறப்பிற் றுன்பமேயன்றி யெட்டுணையு மூன்றி நெஞ்
சகத் தோர்ந்திடிற் பிறிதிலை" என்று நமது மூதாதை
கள் கூறியிருக்கின்றனர். எத்தனை நாள் அனுபவித்தா
லும் நேற்றனுபவித்த சுகந்தானே. இன்றைக்கு இருக்
கின்றது நாளைக்கு வருமென்பது நிச்சயமில்லை. அந்த
முடைய இந்த விஷய சுகத்தை யனுபவிப்பதற்கா
இந்த மானிட தேகமும் ஐசுவரியமும் நேர்ந்துள்ளன.
வந்த வரவை மறந்து இந்தத் தேக சுகமும் தேகத்
தைச் சார்ந்த பொன் பூமியுமாகிய மயக்கத்தி லாழ்ந்து
கிடப்பதோ அழகு? என்று மழியாச் சுகம் பெறவேண்
டின் வைராக்கியத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
பிறவிக்கடலை இவ் வைராக்கிய மென்னும் தெப்பத்
தைக் கொண்டல்லவா மகா புருஷர்கள் கடந்திருக்
கின்றார்கள். ஆகலின் என் வைராக்கியத்தை நிறை
வேற்றுவதில் உயிர் நீங்கினும் நீங்குக" என்று இவ்
வாறு சிலநேரம் தன் மனதிற்குள் போராடி, பூர்வபுண்
ணிய பலத்தாலும், தான் இதுகாறும் இயற்றிவந்த
விரதத்தாலுண்டாய கடவுள் கிருபையாலும், கங்கைக்
கரைக்கு எவ்வாறாயினும் சென்று ஸ்நானஞ் செய்து



வரவேண்டுமென்று தீர்மானித்தனள். நள்ளிரவில்
தானும் தனது தாதிகளும் கங்கைக்குப் போகப் புறப்
பட்டனர். திரும்புகாலையில் மாறுவேடம்பூண்டு வரலா
மென்னும் எண்ணத்துடன் புறப்பட்டுச் சென்றனர்.
இரவோ டிரவு வெகு துரிதமாகச் சென்று அருணோ
தயமாகாமுன் கங்கைக் கரையை நண்ணி ஸ்நான
கட்டத்திற்குச் சென்று ஸ்நானத்தை முடித்துக்
கொண்டனர். அதிக மன உல்லாசத்துடனே யாதொரு
இடையூறுமின்றிச் செய்ய வேண்டிய சில யக்கியங்
களை ராணி செய்து முடித்தனள். ராணியானமை
யின் ஜனங்கள் கவனத்தை யிழுக்காமலிருக்க முடி
யுமோ. ஸ்நானம் செய்ய வந்தவள் ஆர்கால் நாட்டு
ராணியென எப்படியோ தெரிந்துவிட்டது ; இச்
சமாச்சாரத்தைக் கங்கைக் கரையில் பாசறையிட்
டிருந்த அயோத்தியா நகர் கவர்னருக்குத் தெரிந்த
வுடன் தாதிமார்களுடன் சிறைப்படுத்தி வரும்படி
தனது சேனையை யனுப்பினன்..

ஆர்கால் ராணி தனது தாதிகளுடன் கங்காநதிக்
கட்டத்தை விட்டுத் தனது அரண்மனைக்குத் திரும்பி
வந்து கொண்டிருக்கையில் முசல்மான் வீரர்கள் இவர்
களைச் சூழ்ந்து கொண்டனர். அதனைக் கண்ட ராணி
யின் மனம் எப்படிக் கொதிப்படைந் திருக்குமென
யூகித் துணரற்பாலதே யன்றி மொழிகளால் எடுத்
துரைக்கற்பாலதன்று. திகிலடைந்த போதிலும்,
ராணி ஒரு துளி கண்ணீர் விட்டவளல்லள் ; பகை
யாளிகள் தன்னைச் சூழ்ந்து வரவர கோபாக்னியைச்
சொரியுங் கண்களை யுடையவளாய் வந்த அபாயத்தை
ஒரு திரணமாக நோக்கினவளாய், தனது தாதிகள்
தன்னைப் புடைசூழ வெகு தைரியத்துடனும் அமரிக்

கையுடனும் தனது இஷ்ட தேவதையைச் சிந்தித்துச்
சற்று நின்றனள்.

"ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்"

என்னும் ஆன்றோர் வாக்கு அவள் மனதிற் றோன்றி
யது. நாம் இதுகாறும் செய்த தவம் வீண்போமா?
வீண்போகா தாகலின், பகைவர்களை எதிர்த்து நிற்
பதே நலமென எண்ணி ஊன்றி நின்றனள். இதனைக்
கண்டு தாதிகள் தாங்கள் மறைத்து வைத்திருந்த
உடைவாட்களைக் கையிற் கொண்டு பகைவர்களை ஒறு
க்க ஆயத்தமாயினர். முசல்மான்களை யெதிர்த்து
வழி செய்துகொண்டு அர்கால் நாட்டைக் கிட்டுவது
அசாத்தியமென இராணிக்குத் தோற்றியது. உடனே
அவள் என்ன செய்தனள் என்றால் அங்கிருந்த
ஹிந்து ஜனங்களைக் கண்டு பின்வரும் சொற்களைக்
கூறி சிங்கம்போல் கர்ஜித்துக் கூறினள். "ஓ! ஹிந்து
ஜனங்களே! உங்களில் பிரபு ஒருவருமில்லையா? மீசை
யுள்ள ஆண் பிள்ளைகள் ஒருவருமில்லையா? தாய்மா
ரைப்படைத்தவன் ஒருவனுமில்லையா? மனைவியை
யுடையவன் ஒருவனுமில்லையா? அநாதரவான பெண்
பிள்ளைகளாகிய எங்களை முசல்மான்கள் இம்சிக்கப்
பார்க்கலாகுமா? இரத்தம் உங்களுடலி லிருக்கு
மானால் உடனே எழுந்திருந்து எங்களை இரக்ஷிக்க
வாருங்கள். இது கடவுள்மேலாணை. அப்படிச்செய்யா
தொழிவீராகில் எனது சாபத்துக் கிரையாவீர்கள்"
என்று இவ்வாறு அவள் கூறியதைக் கேட்ட வக்கணமே
**அபாய்சண்டே நிரபாய்சண்டே** என்னும் இரண்டு தைரிய
புருடர்கள் தங்களை யபிமானித்த சிஷ்யர்களுடன் திடீ
ரென்று கிளம்பி முசல்மான்களைப் பிளந்து வழி



செய்துகொண்டு ராணியும் அவளுடைய தாதியும்இரு
ந்த இடத்திற்கு வந்து விட்டனர். ராணியையும் தாதி
மார்களையும் தங்கள் மத்தியில் வைத்துக்கொண்டு
முசல்மான்களை வெட்டி அதிக பிரயாசத்துடன்
அரண்மனை நோக்கி வழி செய்துகொண்டே போகத்
தலைப்பட்டனர். அடி முன்செல்வது உன்னைப்பிடி
என்னைப்பிடி என்று கஷ்டப்பட்டுக் கொண்டுபோய்க்
கொண்டிருக்க, தைரியசீலனான **நிரபாய்சண்டே** என்
பவன் காயம்பட் டிறந்தனன். அதைப்போல அவ
னைச் சார்ந்தவருட் சிலரும் மாண்டனர். சீக்கிரம்
சகாயம் வந்து விட்டது. முசல்மான்கள் ராணியைச்
சூழ்ந்துகொண்டனர் என்னும் சமாச்சாரம் அர்கால்
நாட்டுக் கதிபதியாகிய கௌதமனுக்குத் தெரிந்த
வுடனே தனது மனைவியை இரக்ஷிக்கப் பெரிய சேனை
யுடன் ஓடோடியும் வந்தனன். இவன் வந்துகொண்
டிருந்ததைப் பார்த்த முசல்மான்கள் மூலைக் கொருவ
ராக ஓடிவிட்டனர். இதைக் கண்டு எல்லாரும் ஆனந்
தக் கடலில் மூழ்கினர்; இராணியின் வீர குணத்
தைப் புகழ்ந்தனர்; அவள் தாதிமாரின் விசுவாசத்
தை வியந்து மெச்சினர்; இந்த ஆபத்தின் விலக்கு
ராணியின் தபோவலிமையென்று சிந்திக்கலாயினர்.

அர்கால் அதிபதி அபாய்சண்டின் வீரத்தை
மெச்சித் தனது புதல்வியை அவனுக்குப் பாணிக்கிர
கணஞ் செய்து கொடுத்தனன்.

அயோத்தி கவர்னர் ஒரு ஸ்திரீயை எதிர்த்ததி
னால் அவனது அந்தஸ்துக்கு மிக இழுக்குண்டாகி
அவனது நட்பினரும் பகைவரும் அவனை நிந்திக்க
லாயினர்; நமது ஆயுதத்தை ஒரு பெண்பால்மேல்
பிரயோகிக்கச்செய்தோமே என்கிற அவமானமானது

அவளை ஆயுள் பரியந்தம் வாட்டிக்கொண்டே யிருந்தது.

---

# தாராபாய்.

இந்தியாவின் வடபாகத்திற்கு ஹிந்துஸ்தான் என்று சொல்லப்படும். இந்த ஹிந்துஸ்தானம் விந்திய மலைக்கும் இமாமலைக்கும் நடுவிலிருக்கும் பிரதேசமாகும். இந்த ஹிந்துஸ்தானத்தில் இராஜபுதனம் என்றொரு நாடுளது. அந்நாட்டின்கண் தோடா என்னும் ஒரு சிற்றரசு சுமார் 400 வருடங்களுக்கு முன் சிறப்புற்றோங்கி யிருந்தது. சூரதான் என்னுங் குணசீலன் இவ்வூரை அரசாண்டு வந்த காலத்தில் முகலாயர்கள் ஹிந்துஸ்தான் முழுவதையும் தொம்சப்படுத்தி வந்தனர். இந்த முகலாயர்கள் இந்தியாவின் மேற்கு எல்லையா யிருக்கும் மலைகளின் கணவாய்களின் மூலமாகப் பரத கண்டத்தில் பிரவேசித்துச் சிந்து நதியைக் கடந்து ஹிந்துஸ்தானத்திலுள்ள குடிகளையும் அரசர்களையும் பாடாதுபாடும் படுத்தினர். ஒவ்வொரு ஊராக எதிர்த்துத் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டு சூரதான் என்னும் அரசன் ஆண்டுவந்த நாட்டையும் எதிர்த்தனர். சூரதான் என்பவன் சிற்றரசனானபடியினால் பெருஞ் சேனையுடன் எதிர்த்து நின்ற முசல்மான்களை வென்று தனது சிற்றூரைக் காத்து இரக்ஷிக்க அசக்தனா யிருந்தான்; இச் சிற்றரசன் சித்தூர் இராஜாவுக்குக் கப்பங் கட்டிக் கொண்டிருந்தமையின் அன்னோன் துணையை வேண்டி நின்றனன்; சித்தூரும் மகம்மதியர்களால் எதிர்க்கப்பட்



டிருந்தமையின் சித்தூர் இராஜனும் சூரதான் வேண்டுகோளுக்கு இணங்க இயலாமற் போயிற்று. ஆகவே சூரதான் இராஜன் தோல்வியடைந்து தனது ஊரை விட்டுப் போக நேர்ந்தது.

மேவார் தேசத்து இராஜதானியாகிய சித்தூர் நகரத்தின் அண்மையிலிருந்த பிட்னபூர் (*Bidnapore*) என்னும் பட்டணத்திற்குத் தனது ஒரே அருமைப் புத்திரியாகிய தாராபாயுடன்போய் அங்கு வசித்து வந்தான். இராஜபோகத்தை யிழந்து வேறு நாட்டில் சரண்புகுந்திருத்தல் எத்தன்மைய மனக்கிலேசத்தை விளைவிக்குமென்பது கூறாமலே விளங்கும். சூரதான் மன்னன் குணசீலனென முன்னரே சொல்லப்பட்டிருக்கின்றது. தான் அரசு செலுத்திவந்த காலத்தில் அரசச் செருக்கினாலும், விடய போகங்களினாலும் கீர்த்திப் புகழ்ச்சியினாலும் மனமகிழ்ச்சி யடைந்தவனல்லன். உலகமாக்கவும் காக்கவும்வல்ல கடவுள் தன்னை அரசனாகச் செய்தனர் என்று தனது மனதில் நன்கு ஓர்ந்தவனாகலின் குடியோம்பலிலே கண்ணோட்ட முடையோனாய் அரசச் செல்வம் பெற்றேமென்று உலோபஞ் செய்தலை அறியாதவனா யிருந்தனன். இராஜ போகத்தில் இச்சை சற்று மில்லாதவனாகி அரசியலுக்கு வாய்ந்த கடமைகளையே எஞ்ஞான்றும் புரிந்து வந்தான். சுகாபேக்ஷையின்றிக் கடமைபுரியுமவாவே அவனுக்குக் குடிகொண் டிருந்தமையின்,

"அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர்" என்று தெய்வப்

புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறியவண்ணம் தான் அரசுபுரிந்த காலத்தில் அகமகிழ்ச்சி கொள்ளாதது போல் அவ்வரசு தன்னை நீங்கிய காலத்தும் அழுங்குத

விலனாய் விளங்கினன். ஆதலினால் பிட்னபூரில் தனது அரிய புதல்வியுடன் யாதொரு மனக்கிலேசமுமின்றி வாழ்ந்துவந்த போதிலும் அவனது முன்னிருப்பை யடைய வேண்டுமென்னு மெண்ணமானது அவன் மனதினின்றும் அகலவில்லை.

“வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்” என்றான்றோர்

கூறிய வண்ணம் இவ்வெண்ணமானது அரசிழந்ததனா லுண்டாய இடுக்கண் மேன்மேலடா வல்லதாயிருந்து தனது புதல்வியாகிய தாராபாயைக் கொண்டுதான் தனது அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று சூரதான ராஜனுக்குத் தோன்றியது. தனக்குக் குமாரனில்லாமையால் தாராபாயிக்கு ஓர் ஆண்பிள்ளைக்கு என்னென்ன கற்றுக்கொடுக்க வேண்டுமோ அவை யாவற்றையும் தாராபாயிக்குக் கற்றுக் கொடுத்தான். சிறுவயது முதற்கொண்டே குதிரைச் சவாரி செய்யவும், வில்லம்புகளைக் கையாளவும், ஒரு போர்வீரனுக்கு வேண்டிய வித்தை யாவற்றையும் சரிவரக் கற்றுக் கொடுத்தனன். பாணா பட்டயம் முதலிய ஆயுதங்களைப் போர்முகத்தில் வெகு சாதுர்யமாகப் பிரயோகிக்கச் சமர்த்தளாயினள். இவளையொத்த போர்வீரன் உளனோ என்று சங்கிக்கூடிய அவ்வளவு திறமை யுடையவளாய் விளங்கி வந்தனள். ரூபலாவண்ணியத்திலோ இவளுக்கு ஒப்பாரும் மிக்காரும் இராஜபுதனத்தில் பொறுக்கி எடுத்தாலும் சிக்காததாயிருந்தது. ஒரு கற்புடைய ஸ்திரீக்கு எவ்வெக் குணம் அணிகலனா யிருக்கக்கூடுமோ அவை யாவும் அம்மாதினிடத்தில் தங்கி யிருந்தன. பெண்களுக்குச் சுபாவசித்தமாயுள்ள இளகிய மனதும், அன்பு, பேதைமை,



நாண முதலிய மாக்ஷிமைக் குணங்களை யுடையளாயினும் துளரிகரத்தில் சிங்கப் பேடுபோலும், உற்சாகத்தில் புலிப்பேடுபோலும், போர்முகத்தில் அதிகச் சிறப்புற்றோங்கிய இராஜ புத்திரனைப்போலும் யாவராலும் மதிக்கப்பட்டு வந்தனள். சூரதான் இராஜன் தானிழந்த நாட்டை மறுபடியும் கைப்பற்ற பன்முறை முயற்சி செய்தனன். அக்காலங்களி லெல்லாம் தாராபாயி அவன் பக்கலிலிருந்தே சௌரிய பராக்கிரமத்துடன் சண்டை செய்தனள்.

தனது நாட்டைக் கைப்பற்றத் தகுந்த சந்தர்ப்பம் சூர்தானுக்கு நேரிடவில்லை. ஒருகால் தோடாநாட்டை மறுபடியும் தன் வசமாக்கிக் கொள்ளாமுன் தனக்கு மரணஞ் சம்பவிக்குமாயின் தனது மாக்ஷிமை தங்கிய புதல்வியான தாராபாய், எவ்வகையினாலும் முசல்மான்கள் கைகளினின்றும் தோடா நாட்டைப் பிடுங்கிக் கொள்ளும் ஆற்றலுடையவளென்று சூர்தான் பூர்ண நம்பிக்கை யுடையவனா யிருந்தான். தான் உயிரோடிருப்பினும், அல்லது உயிர் துறந்த பின்னும், தாராபாயைக்கொண்டேதான் தோடா நாட்டை மீட்க இயலுமென்று சூர்தான் மனதிற் றோன்றினமையின் அந்நாட்டை முசல்மான்களுடன் போர்செய்து மீட்டுக் கொடுக்க வல்லவனெவனோ அவனுக்கே தாராபாயை மணஞ் செய்து கொடுப்பதாகப் பிரதிஞ்ஞை செய்து கொண்டான். தாராபாயின் வியக்கத்தக்க ரூபலாவண்ணியமும் அம்மங்கையின் கல்வி கேள்விகளாதி நற்குணங்களும், ஒரு மணமுள்ள மலர் அவிழ்ந்தவுடன் தன்னுடைய மணத்தைத் திக்கெங்கும் பரவச் செய்து மாந்தர் மனதைக் கவர்ந்து தன்னைத் தேடி வரும்படி எப்படி ஏவுகின்றதோ அவ்வண்ணம்

இராஜபுதனத்திலிருந்த மன்னர் மன்னர்களும் பிரபுக்
களும் இவளைக் கண்டு மணஞ்சூட்ட வரலாயினர்.
இவ்வாறு வந்து மணங் கேட்டோர்களுக்குச் சூர்தான்
தன் பிரதிக்ஞையைச் சொன்ன மாத்திரத்தில் மன
மிளைத்துச் சோர்வடைந்து தங்களிருப்பிடம் போக
லாயினர். பிறகு மோவர் நாட்டு இராணாவின் மூன்றா
வது குமாரனை ஜெயமல்லா வென்போன் தாரா
பாயைப் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ள மனமிருப்
பதைச் சூர்த்தானுக்குத் தெரிவித்தான். சூர்தான்
என்பவன் மோவர் நாட்டின் இராணாவுக்குக் கீழ்ப்
பட்ட சிற்றரசனை படியால் ஜெயமல்லாவை மருமக
னைகப் பெறுவது பெரும் பாக்கியமென வெண்ணி
னன் ; அது தனக்கு அதிக் கௌரவத்தை விளைவிக்கு
மென்றுங் காணப்பட்டது. தனது பிரதிக்ஞைக்கு
யாதொரு இடையூறும் வராதிருக்குமாயினல்லவோ
பெரும் பாக்கியத்தையும் கௌரவத்தையும் கோரக்
கூடியவன், சூர்தான் என்னும் குணசீலன். ஆதலினால்
ஜயமல்லாவை நோக்கி " இராஜ குமாரனே!நாணிழந்த
தோடா நாட்டைக் கைப்பற்றி என்வசம் ஒப்புவிக்க
வல்ல ஆண்பிள்ளைக்கே எனது புதல்வியைப் பாணிக்
கிரகணஞ் செய்து கொடுப்பேன், வேறொருவருக்கும்
அவளைத் தத்தஞ் செய்து கொடேன் ; இது என் பிர
திக்ஞையாகும் " என்று கூறினன். இதைச் செவி
யேற்ற ஜெயமல்லா தகாதமாதிரி நடந்து கொள்ள
ஆரம்பித்தான். அவன் இயற்கையிலேயே கர்வம்
பிடித்தவன்-வீண்டம்ப முடையவன் - அதிக பொல்
லாங்குள்ளவன் - தூர்த்தன் - வெறியன் - சூர்தானைப்
பற்றிப் பல இழுக்குரைகளினால் அவமதித்துக்
கொண்டு வந்தான். இஃதன்றியும் தாராபாயைப்பற்றி



அரச அந்தஸ்துக் கியலாத கேளிக்கை வார்த்தை
களைக் கூறிக்கொண்டு வந்தான். இவை யாவையும்
சூர்தான் பொறுத்துக்கொண்டு வந்தான். ஒருநாள்
ஜெயமல்லா " இந்தச் சூர்தான் தனது புதல்வியாகிய
தாராபாயை என்னுடையகுதிரைக்காரனுக்குகூட்டிக்
கொடுக்கக்காலம்நேரிடப்போகிறது" என்றுகூறினன்.
இதனைச்செவியேற்ற சூர்தான் "குணமென்னுங் குன்
றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது "
என்று ஆன்றோர் கூறிய வண்ணம் மிகச் சீற்றங்
கொண்டு உடைவாளினால் உடனே ஜெயமல்லாவின்
சிரத்தைச் சேதித்து விட்டான். ஜெயமல்லா மரண
மடைந்த விஷயத்தைக் கேட்ட அவன் தகப்பன்
" நன்று நன்று - ஜெயமல்லாவுக்கு நேர்ந்த கதி தகுந்
ததே. அவன் என் குடும்பத்திற்கு ஒரு சாபம்போ
லிருந்தான். அவன் மரண மடைந்தது சாபவிமோ
சனம் போலாயிற்று. சூர்தான்மீது எனக்குச் சற்
றேனும் வருத்தமாயினும் கோபமாயினுமில்லை. ஒரு
இராஜ புத்திரனுக்குத் தகாதவண்ணம் ஜெயமல்லா
நடந்தமையின் அவனைச் சிரச்சேதஞ் செய்து விண்
ணுலக மனுப்பின சூர்தானை மன்னித்து விடுகிறேன் "
என்று இராணா கூறினன்.

இராணாவுக்கு இன்னொரு குமாரனிருந்தான்.
அவன் பெயர் ப்ரிதிராய். இவன் ஏதோ ஒரு அடாத
காரியத்தைச் செய்தமையின் தனது தகப்பன் இவன்
மீது சீற்றங்கொண்டு மோவர் நாட்டைவிட்டு இவ
னைத் துறத்திவிட்டான். ஜெயமல்லா கொலைப்பட்ட
வரையிலும் அவன் மோவர் நாட்டை மிதிக்கவில்லை.
ஜெய மல்லா மரண மடைந்ததும் ப்ரிதிராயைத்தனது
நாட்டுக்கு வரும்படி இராணா உத்தரவு அளித்து இள

வரசுக்கு யோக்கியனாக்கினான். மற்ற இராஜ குமாரர்களைவிட ப்ரிதிராய் அதிக மேன்மை வாய்ந்த குணங்களைப் பொருந்தியுள்ளோனாகையால் அவன் வருகையைக் குடிகள் எல்லாரும் வெகுவாகக் கொண்டாடினார்கள். ப்ரிதிராயைப்போன்ற அழகுள்ளவனும் தைரியமுள்ளவனும் இராஜபுதனத்தில் வேறொருவருமிலர். அவனுக்குச் சமானமான போர்வீரன் மேவர் நாட்டில் கிடையாது. தாராபாய்க்குத் தகுந்த மணாளன் இவனே யென்று ப்ரதிராய் யாவராலும் மதிக்கப்பட்டு வந்தான். தாராபாயைத் தனது தனையனை ப்ரதிராய்க்கு மணஞ்சூட்ட இராணாவுக்குஞ் சம்மதந்தான். ப்ரதிராயைத் தனது மருமகனாகப் பெறச் சூர்தானும் ஆவல்கொண்டான். தாராபாயும் ப்ரதிராயைத் தன் கணவனாக வரித்தனள். ப்ரதிராயும் தாராபாய்மீது காதல் கொண்டான். இப்படி எல்லாருடைய சிந்தனையும் ஏகோபித்திருக்க தோடாநாட்டை மகம்மதியர் வசத்தினின்று மீட்டுக் கொடுக்க வல்ல ஆடவன் எவனோ அவனே தான் தாராபாயை மனைவியாகப் பெறக் கூடியவன் என்று சூர்தான் செய்திருக்கும் பிரதிக்ஞையானது மேற்கண்ட எல்லாருடைய இஷ்ட பூர்த்திக் கிடையூறாய் நின்றது.

இதனை நன்குணர்ந்த ப்ரதிராய் என்ன செய்வான்? இன்னலுக் கழுங்காத்தீர நெஞ்சுடைய இராஜபுத்திரர் வம்சத்தில் உதித்தவனாதலின் மனம் நைவதைத் தவிர்த்து பின்வருமாறு எண்ணத் தொடங்கினான். "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினுமரி"தென ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இந்த மானிடப் பிறவியிலும் கூன் குருடாக ஜனிக்காமலிருப்பது பூர்வ ஜன்ம புண்ணியப் பலனாதம்



இதன்றியும் வறுமையாற் பீடிக்கப்படாமல் ஐசுவரியம் நிறம்பின இராஜ வம்சத்தில் யான் ஜனித்திருப்பதால் கடவுள் கிருபை பெற்றவனென எண்ணவேண்டியதா யிருக்கிறது. கடவுள் கிருபையால் இவ்விதம் நேரிட்டுள்ள அனுகூலங்களை நல்வழியிலல்லவா உபயோகிக்க வேண்டும்? கடவுள் திருவுள்ளத்திற்கியைய நடவாமல் விஷய போகத்தை இச்சிப்பேனாயின் என் ஜன்மம் நிஷ்பிரயோசனமாகி விடும் என்பதற்கு ஐயமின்று. இப் பூமண்டலத்திலுள்ள மக்கள் சந்நியாசி ஆஸ்ரமம், கிரகஸ்தாஸ்ரமம்; வானப்பிரஸ்தாஸ்ரமம் என்று நமது மூதாதைகளால் வகுத்துக் கூறப்பட்டுள்ள ஆஸ்ரமங்களில் யாதாமொரு ஆஸ்ரமத்தில் சேர்ந்தவராவர். யானோ இயற்கையிலேயே கிரகஸ்தாஸ்ரமத்திற் குரியோனாக விருக்கிறேன். இல்லறம் நடத்தவேண்டுமாயின் பிரம்மசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி இவர்களுக்குக் கட்டாயம் துணைபுரிய வேண்டும். பிதுர்க்களுக்கும், தெய்வங்களுக்கும், விருந்தினர்களுக்கும் இனத்தார்க்கும் தகுந்த தருமஞ்செயதலைத் தலைமையான கடமையாகஏற்றுக்கொள்ள வேண்டும். தவத்தோரைத் தவ வழியில் நடக்கச்செய்து நானும் இல்லறத்தினின்றுந் தவறுதற் பொருந்தாத வாழ்க்கையைக் கைப்பிடித்தல் இன்றியமையாததாகும். இவ்விதமாக இல்லற நடத்த வேண்டுமாயின் நற்குண நற்செய்கையை யுடைய இல்லாள் அத்தியாவசியகமென விளங்கும். இதை நோக்கியல்லவா

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். நற்குண நற்செய்கை யுடையவளும் கிரகஸ்தாஸ்ரம தர்மத்தை நடாத்துவதில் எனக்குகந்த துணைவியுமா யிருக்கக் கூடியவள் தாராபாயைவிட வேறொரு மாதைக் கண்டிலன். ஆகையால் இவளை எவ்விதத்தினாலாயினும் மனைவியாகப் பெறவேண்டும். அதற்கு ஒரே உபாயந்தானுளது; அஃதாவது மகம்மதியருடன் போர் செய்து தோடா நாட்டைப் பிடுங்கிச் சூர்தான் வசம் ஒப்புவிப்பதே. இந்தக் காரியம் சாமானியமன்று. எனக்குப் படைவலி யில்லை. ஆனால் நான் சேகரிக்கக் கூடிய சேனையுடன் சென்று மகம்மதியரைப்போய்த் தாக்குவேன். வெற்றி பெறுவேனாயின் இல்லற தருமத்தை நடாத்தத்தக்க துணைவியைப் பெறுவேன்; வெற்றி பெறாவிடின் போர்முகத்திலேயே மாள்வேன்; இல்வாழ்க்கைக்குகந்த இல்லாளின்றி உயிர் வைத்துக் கொண்டிருப்பது நிஷ்பிரயோசனமாகும். நான் இதுகாறும் சத்தியத்தைக் கடைப்பிடித்து வந்தேன். இதனாலன்றோ என் தந்தையும் என்னை ஊரைவிட்டு விரட்டினன். அப்பொழுது நான் மனச்சோர்வை யடையாது திருவருளை நம்பிப் பிரதேசங்களில் சஞ்சாரஞ் செய்துகொண்டு வந்தேன். அந்தத் திருவருளல்லவா என்னை என் தந்தையுடன் கூட்டி வைத்தது. இப்பொழுதும் அத்திருவருளைப் பூரணமாய் நம்பியே மகம்மதியருடன் போர் செய்யச் செல்வேன். மார்க்கண்டேயர் இந்தத் திருவருள் கொண்டல்லவா யமனை வென்றனர். அத்தகைய திருவருட்டுணையைக் கொண்டு அபார வல்லமையுள்ள மகம்மதியர் சேனையை கடவுள் சித்தம் அப்படியா யிருக்குமாயின், ஏன் தோல்வியடையச் செய்ய முடியாது?" என்று இவ்



வாறு தீர்க்க ஆலோசனை செய்து வீராவேசமிகுதியுள்ள இருநூறு குதிரை வீரர்களை ஒருங்கு சேர்த்துத் தோடா நாட்டைத் தாக்கச் செல்வதற்கு ஆயத்தமாயினான். தாராபாயும் இவனைப் பின்தொடர்ந்து செல்லச் சித்தமாயினள்; பிதா முதலியோர் என்ன கூறியும் அவள் கேட்டிலள். தன் தகப்பனைத் தெய்வமெனப் பாவித்து வந்தவளாதலின் தந்தையின் சம்மதமின்றி போர்க்களத்திற்குப் போக மனமில்லாதவளாயினள். ஆதலின் தந்தை ஏகாந்தமா யிருந்த தருணம் பார்த்து அவனிடம் சென்று தீர்க்கதண்டம் சமர்ப்பித்து அடியிற் கண்ட வண்ணம் பகரலாயினள்.

"அண்ணா! ப்ரதிராய் என்னும் மோவர்நாட்டு இளவரசன் தோடா நாட்டை மீட்டுக் கொடுத்து என்னை மணஞ் சூட்டும் வண்ணம் மகம்மதியருடன் போர்புரிய ஆயத்தமா யிருக்கின்றான். அவனுடன் போய் அவனுக்குத் துணைசெய்ய ஆவலுள்ள மனமுடையவளா யிருக்கிறேன். யான், காம இச்சையினால், அவனுடன் செல்லப் பிரியமுடையவளாயினள் என்று உலகோர் வசதி கூறுவர். கல்மிஷரகித சீதாபிராட்டியை உலகம் பழிக்கவில்லையா? தோடாநாட்டை மீட்டு உமது எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென்னும் எண்ணமே இந்த நிமிஷம் வரைக்கும் மேலோங்கியிருந்த எனது ஒரு எண்ணமாகும். இந்த எண்ணமானது நிறைவேறும் வரைக்கும் வேறெந்த எண்ணத்தையும் தலையெடுக்க விடேன். எனது மனோதர்மம் தங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. கீர்த்தியில்லா வாழ்க்கை என்ன பலன். மரண பயத்திற்கு அஞ்சிப் புழுவைப்போன்ற வாழ்நாள் எற்

றிற்கு ? காரியம் புரிவதே நமது கடமையாகும். அத
னால் விளையும் பலனைப் பற்றி ஆவலா யிருப்பது புத்தி
மான்களுக்கு இலக்ஷணமன்று. திருவருளை முன்
னிட்டு எல்லா நற்காரித்தத்தையுஞ் செய்ய மனதை
ஏவுவதே சுகத்தை யுண்டாக்கும். என் மனமானது
தேகபோக இச்சையின் நிமித்தம் ப்ரிதிராயுடன் செல்
லப் பிரேரேபிக்கவில்லை; இது சத்தியம். அதர்மர்க
ளான முசல்மான்களை வெருட்டச் சந்தர்ப்பம் திரு
வருளால் நேரிட்டிருப்பதாக எண்ணுகிறேன். ஆத
லின் என் மனமும் தன்னது வழியற்று திருவருள்
வழியிலிருக்கின்றமையின் நான் செய்யப்புகும் காரி
யம் நிந்திதமாகாது. ஆதலின் அண்ணா! என்னை ஆசீர்
வதித்துப் போர்முகத்திற்குச் செல்ல விடைதாரும்”
என்றனள். ஞானோபதேசத்தை நிகர்த்த இம்மாற்
றங்களைக் கேட்ட சூர்தான் மனமுருகி பேருவகை
யுடன் தனது குமாரத்தியை மடிமீது வைத்து உச்சி
முகர்ந்து ஒரு முகூர்த்த நேரம் கடவுளைத் தியானி
த்து அவளை ஆசீர்வதித்துப் போர்க்களத்திற்கு ப்ரி
திவிராயுடன் செல்ல உத்தரவு அளித்தனன்.

இவ்வாறு தந்தையின் ஆசீர்வாதம் பெற்றுக்
கொண்ட தாராபாய் அவருக்குத் தீர்க்க தண்டம்
சமர்ப்பித்து அவா சந்நிதியை விட்டு ப்ரிதிரா யிருந்த
இடத்திற்குச் சென்றனள். அவளும் ப்ரிதிராயும்
தங்களுக்குக் கிடைத்த இருநூறு குதிரைச் சேவகர்க
ளுடன் தோடா நாட்டுக் கருகிலுள்ள ஒரு காட்டிற்
குள் சென்று தங்கினர். இவ்விருவரும் அதிக வீரத்
தன்மையுங்கூரியபுத்தியும் உடையவர்களானமையின்,
முசல்மான்களைத் தாக்கும் உபாயத்தை எண்ணலாயி
னர். வெகு நேரம் தீர்க்கமாக ஆலோசித்து மொஹ



ரம் பண்டிகை தினத்தில் முசல்மான்களைத் தாக்க
வேண்டுமென்று தீர்மானஞ் செய்தனர். மொஹரம்
பண்டிகையானது முசல்மான்களுக்கு மிகு சிறந்த
உகந்த பண்டிகையாகும். முசல்மான்கள் நன்மைக்
காக அதிகப் பிரயாசப்பட்டுத் தன்னுடைய வாழ்
நாள் முழுமையும் இவர்களுடைய க்ஷேமத்தின்
பொருட்டே விநியோகித்து வந்த உசேன் என்னும்
ஒரு சீமான் இருந்தான். அவன் தன் பகையாளிகளால்
கண்டு பிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டான்.
இதனை வருஷந்தோறும் மிகு துக்கமாக முசல்மான்
கள் கவனித்து வருகின்றனர். இந்தத்தினம் மொஹ
ரம் என்று அவரால் கூறப்படும். அந்தமொஹரம்
தினத்தில் முசல்மான்கள் மதோன் மத்தர்களாய்(*like*
*fanatics*)த் திரிவார்கள் ; மதா வேசத்தால் பைத்தியம்
பிடித்தவர்கள்போல் நடந்து கொள்வார்கள் ; ஹிந்
துக்களுக்குச் சம்மதமில்லாச் சிற்சில காரியங்களை
வேண்டுமென்றே செய்து கோபத்தை மூட்டி கலகத்
திற்கு ஹேது விளைப்பதில் பிரியமுள்ளவராயிருப்பர்;
அத்தினத்தில் பிசாசைப் போலப் பயமுறுத்தும்படி
யான பயங்கரமான காரியங்களைப் புரிவதற் கஞ்சாத
வரா யிருப்பார். அத்தன்மையான தினத்தில் முசல்
மான்களை யல்லோலகல்லோலப்படுத்தவேண்டுமென்று
தீர்மானித்தவண்ணம், இருட்டாவதற்கு முன்னரே
இரண்டு இராஜ புத்திர வீரர்கள் தோடா நாட்டுக்
கோட்டைக்குள் அந்தப் பண்டிகை தினம் பிரவேசித்
தனர். இவர்களை இன்னொரு இராஜபுத்திர குதிரை
வீரன் பின் தொடர்ந்து புக்கனன். முதற் சென்ற
இரண்டு வீரர்களும் யாரெனின், ப்ரிதிராயும் தாரா
பாயும். இவர்கள் பின் சென்றவன் ஸெனிகார்

(Senegar) என்னும் நாட்டுக் கதிபதியாவன். இருநூறு குதிரை வீரர்களும் இவனுடையவர்களே. ப்ரிதிராய் இவ்வதிபதியின் அன்னியோன்னிய சிநேகன். இவர்கள் தம்முள் உடற்பேதமே யொழிய உயிர்ப்பேத மில்லாதிருந்தனர். இவர்களுக்குள் நேர்ந்திருந்த நட்பானது புணர்ச்சியும் பழகுதலும் ஆகிய இக்காரணங்களா லுண்டாயதன்று. இருவருக்கு மொத்த அறிவுதான் இவர்களுடைய நட்புக்கு முக்கிய காரணமா யிருந்தது. இவ்வதிபதி ப்ரிதிராயை நல்வழியிற் செலுத்தி ஊழினால் வந்த துன்பத்தை உடனிருந் தனுபவித்தவனாகலின் இவனது சிநேகத் தன்மையை இங்குத் தக்கவாறு எடுத்துரைக்க இயலுமோ?

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு"

என்று தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் ப்ரிதிராயுக்கு நேர்ந்த கஷ்டத்தை விலக்கத் தன்வசமிருந்த 200 குதிரைச் சேவகர்களைக் கொண்டு வந்து அவர்களுக்குத் தகுந்த கட்டளைகளை யிட்டு விட்டுத் தானும் கோட்டைக்குள் பிரவேசித்தான். இவன் நட்பன்றோ நட்பாகும். ஸெனிகார் நாட்டதிபதி கட்டளையிட்ட வண்ணம், இருநூறு குதிரை வீரர்களும் தோடா நாட்டுக் கோட்டையை நோக்கி மெல்லச்செல்லலுற்றனர். கோட்டையைச்சுற்றி மலைகள் செறிந்திருந்தமையின், குதிரை வீரர்கள் வந்து கொண்டிருந்தது முசல்மான்களுக்குத் தெரியாமற் போயிற்று. இவ்வாறவர்கள் யாதொரு தடங்கலுமின்றிக் கோட்டை வாயிலை அணுகியதும் சித்திரப்பாவை யொத்து அசைவற



நின்றுகொண்டு கோட்டைக்குட்சென்ற தங்கள் தளகர்த்தர்களின் உத்தரவுக் கெதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

இஃது இப்படியிருக்கக்கோட்டைக்குள் புகுந்த அம்மூன்று வீரர்களும் தங்களுக் கெதிர்ப்பட்ட முகலாயர்களெல்லாரையும் கண்டதுண்ட மாக்கியதால் அங்கிருந்த ஜனங்கள் மனக்கலக்கமடைந்து எல்லாப் பக்கங்களிலும் ஓடத் தலைப்பட்டனர். முசல்மான் வீரர்களும் நிராயுத பாணிகளாய் உடுத்த உடையோடு நான்கு திக்கிலும் இரிந்தோடினர். இவ்வாறு கோட்டை முழுதும் கூக்குரலும் குழப்பமும் உண்டாயின. அபாயக் குறியைத் தெரிவிக்கும் பேரிகையை அடித்தனர். கோட்டைக் கதவு மூடப்பட்டது.

இவை யெல்லாம் இப்படி நேரிடுமென்று ப்ரிதிராய் எதிர் பாராததன்று. போர்வீரர்களைத் தன்னுடன் இட்டுக்கொண்டு போயிருந்தால் இவ்விதக்குழப்பமும் கலக்கமும் உண்டாக்க முடியாவென்று ப்ரிதிராய் நன்றாய்த் தெரிந்தே தனது சைனியத்தை வெளியே நிற்கும்படி கட்டளையிட்டான். இங்ஙனமின்றிப் போர்வீரர்களைத் தன்னுடன் கொண்டு போயிருந்தால் குதிரைகளின் காலடிகள் சப்தத்தால் முசல்மான்கள் உஷாராகி கோட்டைக் கதவை உடனே மூடிவிட்டு எல்லாவித எறிபடைகளையும் யாதொரு இரக்ஷணையுமின்றி வெயிலினாலும் காற்றினாலும் அடிபட்டு வெளியே நிற்கும் இராஜ புத்திர வீரர்களின் மேல் பிரயோகித்து அழிப்பதற்குச் சுலபமாயிருக்கும். இக் காரணத்தைப் பற்றித்தான் அம்மூன்று வீரர்களும் கோட்டைக்குள் படையுடன் செல்லவில்லை. கோட்டைக் கதவு மூடப்பட்

டதும் வெளியே யிருந்த குதிரை வீரர்கள் கோட்டையைத் தாக்கினர். எல்லா ஜனங்களுடைய கவனமும் கோட்டையைத் தாக்கி நின்ற குதிரைப் போர் வீரர்கள் மேல்போனது. இதுதான் நல்லசமயமென்று ப்ரிதிராய் கோட்டைக் கதவைத் திறந்து விட்டான். உடனே தனது குதிரைப்போர்வீரர்கள் சரேலென்று கோட்டைக்குள் பிரவேசித்தனர். இராஜ புத்திரர்களின் ஆலோசனை முற்றிலும் கைகூடிவந்துவிட்டது. கோட்டைக்குள் நுழைந்தஇராஜபுத்திரப் போர்வீரர்கள், பிரமித்துக்கலக்க முற்றிருந்த முசல்மான்களை வதை செய்ய ஆரம்பித்தனர். மகம்தியப் போர்வீரர்கள் ஒன்று சேர முயன்றனர். அவர்கள் பிரயத்தனம் வீணாய்ப் போய்விட்டது; இராஜபுத்திரர்களுடைய வாளுக்கு இரையாகி உதிர் சருகுபோல் கீழே விழுந்து மாண்டனர். தாராபாயும் ப்ரிதிராயின் பக்கலிலே யிருந்து தனது தேசப்பகையாளிகளனேகரையும் தனது குடி ஜனங்களை ஹிம்சித்த துராத்மாக்களான முசல்மான்களனேகரையும் தன் கையினாலே கொன்றனள். மாலைப்பொழுது நெருங்குவதற்குமுன் இராஜபுத்திரர்கள் ஜயம் முற்றுப்பெற்றது. முக்காலே மூன்றுவீச முசல்மான்கள்யமபுரம் அனுப்பட்டனர். மிகுந்த சிற்சிலர் நான்கு பக்கங்களிலும் ஓடத்தலைப்பட்டனர். இவ்வாறு ஓடத்தலைப்பட்டவர்களையும் இராஜபுத்திர வீரர்கள் பின்தொடர்ந்து சென்றதைக் கண்ணுற்ற தாராபாய் அவர்களைத் தடுத்து "இப்படி பயந்தோடும் மகம்மதியர் பிழைத்துப் போகட்டும். தோடாநாட்டைக்கைப்பற்ற வேண்டுமென்பது நமது எண்ணமேயொழிய அவர்களைக்கொலைசெய்ய வேண்டுமென்பதல்ல என்று காருணியத்துடன் புகன்றனள்.



இவ்வாறு தோடா நாடு மறுபடியும் இராஜபுத்திரர் வசமாயது. குணசீலனான சூர்தான் அபீஷ்டம் நிறைவேறிற்று. நற்குண நற்செய்கையுடைய ப்ரிதிராயுக்கும், பதிவிரதா சிரோமணியாகிய தாராபாயுக்கும் அதிக குதூகலத்துடனும், ஆடம்பரத்துடனும் பாணிக் கிரஹண மகோற்சவம் நடந்தேறிய தென்று கூறவும் வேண்டுமோ—சூர்தான் தன் நாடாகிய தோடா நாட்டுக்கு மீண்டும்சென்று சிலநாள் கழித்து அந்நாட்டின் அரசாட்சியை ப்ரிதிராயினிடத்தும் தாராபாயினிடத்தும் ஒப்புவித்து விட்டு மறுபடியும் பிட்னோர் (Bidnore) சென்று வானப் பிரஸ்தாஸ்ரமத்தை அவலம்பித்துத் தனது வாழ்நாளைக் கழிப்பானாயினன்.

தனக்கு வெற்றியைத் தந்தது, பகைவர் மேல் தான் எறிந்த எறிபடையன்று; ஆனால் தான் இதுகாறும் விசுவசித்துக் கடைப்பிடித்து வந்த நடுவு நிலைமையின் பயனாகிய கடவுள் கிருபை யென்று ப்ரிதிராயுக்கு மனதில் நன்றாய்ப்பட்டது. மழையின்றிப் பயிர்கள் விளையா. பயிர் விளைச்சலின்றி உயிர் வாழ்க்கை இல்லாததுபோல், நடுவுநிலைமையற்ற அரசாட்சியில் குடிகள் க்ஷேமமாக விருக்கைக்கு அசாத்தியமாகும். ஆதலின், குற்றத்தை யாராய்ந்து யாவரிடத்திலும் நடுவு நிலைமையைப் பொருந்து மனவிருத்தியையுடையனாய் விளங்கினன், ப்ரிதிராயென்னும் நீதிமான். நியாயச் செய்கைகளை அநியாயச் செய்கைகளினின்றும் பிரித்து உணரும் வண்ணம் ஒற்றர்களை நியமித்ததுமன்றித் தானும் வாதிப் பிரதிவாதியாகிய "இருவர் தஞ் சொல்லையும் எழுதரம் கேட்டே" இருவருக்கும் பொருந்த உரைக்கும் ஆற்றலுடையோ

னென யாவராலும் மதிக்கப்பட்டுவந்தான். இஃதன்றி
யும் குடிகளைப் பிறர் வருத்தாமற் காத்துத் தானும்
அவர்களைவருத்தாமல், ஆதரவுசெய்து அவர்களுடைய
க்ஷேமத்தின் பொருட்டு விவசாயம், வர்த்தகம் முத
லிய தொழிலீட்டும் தொழில்களைப் புதுக்குதலிலும்,
நூதனமாயுண்டாக்குஞ் சூழ்ச்சியிலும், அதிக சமர்த்
தனாய்க் காணப்பட்டான். மன்னுயிரைத் தன்னுயிரெ
னக் கருதும் சுபாவசித்த முடையோனாதலின் தனது
குடிகளைச் சற்றேனும் இடுக்கண் அணுகாமல் காத்து
அவர்கள் நன்மையையே அல்லும்பகலும் கருதின
வனாய்ச் செங்கோலோச்சி வந்தமையின்,

“ குடிதழீஇக் கோலோச்சு மாநிலமன்ன
னடிதழீஇ நிற்கு முலகு ” என்று நமது வள்
ளுவனார் கூறியிருக்கும் வண்ணம் குடிகளும் ப்ரிதி
ராயை விடாது பற்றி நின்றனர். மேலும் சதிபதிக
ளாகிய தாராபாயும் ப்ரிதிராயும் காமவிச்சையினாற்
புணர்ந்து பன்றி பலகுட்டி பெறுவதுபோலப் புதல்
வர்களைக் கலகலவெனப் பெறுவதே வாழ்நாளின் பய
னெனக் கருதாதவராகலின், சாஸ்திரத்தில் விதித்
திருக்கும் வண்ணம் மாதம் இருமுறை புத்திரோற்
பத்திக்காக ஒரு படுக்கையிற் சயனித்து, விருந்தோம்
பல், சாதுக்களைச் சன்மானித்தல், தேவபூஜை, குடி
யோம்பல் முதலிய கிருகஸ்தாஸ்ரம தர்ம விதிகளை
அன்புடன் அனுஷ்டித்து வந்தனர். இவ்வாற்றால்
அவ்விருவரும் கடவுளுடைய திருவருளுக் குரித்தா
னவராகி, சித்த சாந்தியைப் பொருந்திப் பரமானந்த
வெள்ளத்தில் வைகியிருந்தனர்.

இச்சுக வாழ்க்கையானது சற்று நீடித்திருக்கக்
கூடாதா? இத்தரணியில் பாபிகள் நீண்ட ஆயுளுடை



யராகவும் புண்ணியசீலர்கள் அற்ப ஆயுளுடையோ
ராகவும் காணுதல் சகசமன்றோ? சாயுஜ்ஜிய பதவியை
நல்லோர்க்கு ஈயும் வண்ணம் அவர்களுக்கு விஷய இச்
சையில் விரக்தி யுண்டாக்கி எம்மட்டும் அன்னோரால்
உலகோபகாரம் புரியப்பட வேண்டுமோ அம்மட்டும்
செயவிடுத்து உயர்ந்த அந்தஸ்தை வகிக்கும் வண்
ணம் உயிரைத் துறக்கச்செய்தல் ஆக்கி அளித்துத்
துடைக்கும் கடவுளுடைய கிருபா கடாக்ஷம்போலும்
இதனையோராது மூடர்கள் கடவுளை நிந்திப்பர். அவர்
கள் தோடா நாட்டரசாட்சியை இரண்டாண்டு நட
த்திவந்தனர். அப்பொழுது ப்ரிதிராய் சகோதரி
யண்ணையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அச்சகோதரி
பிரவுராய் (**Pravu Rai**) ஒரு தூர்த்தனுக்கு வாழ்க்
கைப்பட்டிருந்தனள். அவன் கூடா வொழுக்க முடை
யோனாகலின் தன்மனைவியை அதிகச் சீர்மாறு செய்து
வந்தான்; இவ்வித ஹிம்சையைச் சகியாதவளாகித்
துயரத்தினின்றும் மீட்கக் கூடியவன் தனதுசகோதர
னாகிய ப்ரதிராய் தவிர வேறொருவனு மிலனென மன
திற் பட்டமையின், அவனுக்குக் கீழ்க்கண்டிருக்கும்
நிருபத்தை வரைந்தனள்.

“பிரிய சகோதரனே! என்னுடைய புருஷன்
செய்யும் அக்கிரமம் என்னால் பொறுக்க முடியவில்லை.
அவன் ஓயாக் குடியனாகி எனது வாயினாற் சொல்ல
வுங் கூசும்படியான கிருத்தியங்களைப் புரிந்துகொண்டு
வருகின்றான். என்மீது உனக்குக் கிஞ்சித்து அன்
பிருக்குமாயின், நான் படுங் கஷ்டத்தினின்றும் என்
னை விடுவித்து இரக்ஷிக்கக் கடுகியே வருவாயாக”
இந்தக் கடிதம் ப்ரிதிராயுக்குக்கிட்டினவுடனே தனது
சகோதரி வீட்டிற்குப் போகப் புறப்பட்டான். தன்

சகோதரி படும் இம்சையை நேரில் கண்டு அவள் கொழுநனைக் கண்டித்து அவன் இதுகாறுஞ் செய்து வந்த அடாத காரியத்திற்காகவும், இனிமேல் அவ்விதம் நடந்து கொள்வதில்லை யென்பதற்கு அறிகுறியாகவும், தனது சகோதரியின் பாதரக்ஷையைச் சிரசுமேல் வைத்துக் கொள்ளும்படி ப்ரவுராயைப் பலவந்தப்படுத்தினான். ப்ரவுராய் என்ன செய்வன்? தனக்கிழுக்குண்டாகுங் காரியத்தைச்செய்யச் சற்றும் மனமில்லாதவனாய்த் திகைத்தனன். ப்ரிதிராய் என்பவனுடைய சௌரிய பராக்கிரமங்களை நன்கோர்ந்தவனாதலின் அவன் சொல்லிய வண்ணம் செய்யாவிடில் மரணம் நேரிடும் என்னும் பயத்தால் பீடிக்கப்பட்டவனாய் அதிக மன வருத்தத்துடன் தனது மனைவியின் பாதரக்ஷையைத் தலைமேற்கொண்டான்; இவ்வாறு தன்னை மானபங்கம் செய்ததற்கு ப்ரதிராயை எவ்வண்ணமாயினும் கொலைசெய்ய வேண்டுமென்னும் எண்ணத்தை மனதில் அக்கணமே கொண்டனன். அந்தப் ப்ரவுராய் என்னும் கொடியோன் கபடசித்தனாய் ப்ரிதிராயுடன் அன்புடன் பேசிக்கொண்டிருந்து தன் வீட்டில் விருந்துண்ணும்படி கேட்டுக் கொண்டனன். நிஷ்களங்க மனதுடையவனாகிய ப்ரிதிராய் அதற்குச் சம்மதித்தனன். சாப்பிடப் பரிமாறின உண்டிகளில் ஒன்றாகிய பான பதார்த்தத்தில் விஷங் கலந்து வைத்தான்-ப்ரவுராய் என்னும் துராத்மன்- இப்பானத்தை அதிகப் பிரீதியுடன் கொடுப்பவன் போலத் தானே ப்ரிதிராயுக்கு ப்ரவுராய் எடுத்துக் கொடுத்தமையின், யாதொரு சமுசயமுங்கொள்ளாத மனதுடைய ப்ரிதிராயும் அப்பானத்தைக்களிப்புடன் வாங்கி உட்கொண்டனன். சகோதரியின் வீட்டை



விட்டு முற்றத்திற்கு வந்தபொழுது ஸ்மரணையற்றுத் திடீரென்று ப்ரிதிராய் கீழே விழுந்தான். ப்ரவுராய் செய்த மோசம் அப்பொழுதுதான் தெரியவந்தது. தாராபாயும், அவள் மாமனாரும், தந்தையும் இச்செய்தியைக்கேட்டு புரண்டு உருண்டு ஓடிவந்து அநேக அவிழ்தங்களைக்கொடுத்தும் பயனிலதாயிற்று.

“ வினைப்போக மேயொரு தேகங்கண்டாய் வினை
தான் ஒழிந்தால், தினைப் போதளவுநில்
லாது கண்டாய் ” என்று பட்டினத்தடிகள் கூறியவண்ணம் ப்ரிதிராயுக்குப் பிராரப்த கருமம் முடிவுபெற்றமையின், சித்தூர் நாட்டார் புலம்பிக் கொண்டிருக்க, கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்த தாராபாயின் மடிமீது தனது ஆருயிரைத் துறந்து விண்ணுலகம் புக்கனன் - ப்ரிதிராய் என்னும் மன்னன்.

தனது நாயகன் விண்ணுலகம் புக்கதைக் கண்ணுற்ற தாராபாய் தன்னுயிரை வைத்துக்கொண்டு தாரணிமிசை இனித் தரித்திருப்பளோ? உடல்சாயை உடலை விட்டு இருக்க இயலுமோ? தான் தனது புருஷனுக்குச் சாயை என்று எண்ணியிருந்தமையின், தனது நாயகன் நாட்டமின்றி வேறு நாட்டந் தாங்க இயலுமோ.

“ தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழு
தெழுவாளா ” யிருந்த தாராபாய் தனது நாயகன் உம்பருலக மடைந்த பின்னும் அரைக்கணம் தரைக்கணுற்றிடுவளோ? ஆதலின், தாராபாய் தன் கணவனுடன் உடன்கட்டையேறத் தீர்மானித்தனள். இவளிருந்த நன்மைக்கும் இவள் பேரிலிருந்த பேரன்பினும் இவளது பிதா, மாமனார், ஆருத்துக்க சாகர

த்தில் படிந்திருந்த பிரஜைகள்முதலாயினோர், உடன் கட்டை ஏறாமலிருக்க மன்றாடிக் கேட்டுக் கொண்டனர். இவ்வாறு மன்றாடிக் கேட்டோருக்கு இன்னலை விளைவிக்க, தாராபாயின் அன்புருவமான மனம் இடங்கொடுக்கவில்லை; தான் கொண்ட கருத்தையும் விட மனமில்லை. இருதலைக் கொள்ளியின் மத்தியில் அகப்பட்ட எறும்புபோலத் தவிக்கலாயினள். செய்வது ஒன்றும் தெரியாமல் ஒரு முகூர்த்த நேரம் திருவருளைச் சிந்தித்து இவ்வாறு கூறலாயினள்:—“ ஒரு ஸ்திரீ குழந்தைப் பருவத்தில் பெற்றோர் வசமாகவும், மங்கைப் பருவத்தில் கணவன் வசமாகவும், கணவனிறந்த பின் குமாரன் வசமாகவும் இருக்க வேண்டுமென்பது சாஸ்திர சம்மதம். என் தகப்பனோ வானப்பிரஸ்தனாயினன். எனக்குக் குமாரனோ இல்லை. கணவனோ தெய்வ கதியால் என்னைப் பிரிந்து விட்டனன். யான் யார் வசத்தில் இருக்கப் பெறுவேன். இப்பூமண்டலத்தில் இனியானிருந்து என் செய்வது? கிருகஸ்தாஸ்ரம தர்மத்தை நடத்துவது இனி இயலாது. எனக்கு விடய போகங்களில் இச்சையுமில்லை. எனக்கு இத்தேகமும் இதனாலாய உலக வாழ்க்கையும் வேம்பாய் விட்டன ; உயிரகன்ற உடலால் எவ்விதம் பிரயோசன மில்லையோ அவ்வாறு என் பிராணநாதன் என்னை விட்டு அகன்றமையின் நான் சவமேயாய்விளங்குவேன், இதற்கு ஐயமின்று. நானும் துக்காக்கிரந்தியா யிருப்பேன்; நீங்களும் மனக்கிலேசமடைவீர்கள். இது திண்ணம் ; ஆதலின், என்னருமைச் சுற்றத்தார்களே ! பிரியமுள்ள பிரஜைகளே ! உடன்கட்டை யேறச் சம்மதமளிப்பீர் ” என்று இவ்வாறு தாராபாய் கதறி வினய பூர்வகமாய் மன்றாடிக்



கேட்டுக்கொண்டனள். பிதா முதலியோர் இதற்கு மாறுத்தரஞ் சொல்ல இயலாமல் மௌனமுற்றிருந்தனர்.

உடனே காஷ்டமொன்று சித்தமாக்கப்பட்டது. ப்ரீதிராய் சவம் அதன்மேல் வைக்கப்பட்டது. பிரேத சடங்குகள் யாவற்றையும் தாராபாய் அதிக அமரிக்கையான மனதுடன் செய்து முடித்தனள். பிறகு வேதியர்கள் மந்திரங்களை ஓத ஆரம்பித்தனர். வாத்தியங்கள் கோஷிக்கவும், ஜனங்கள் ஆரவாரிக்கவும் தாராபாய் காஷ்டத்தைப் பன்முறை வலம் வந்து அதன் மீதேறி தன் கணவன் சவத்தின் பக்கலில் படுத்துக்கொண்டு காஷ்டத்திற்குத் தீ மூட்டும்படி கட்டளை யிட்டனள்.

அவ்வண்ணமே காஷ்டத்தில் அக்கினியை மூட்டவே பெருந் தீயுண்டாயிற்று. தீயின் சுவாலை சப்தித்தது. கட்டைகள் பிளந்த சப்தமும் உண்டாயிற்று. தாராபாயின் தேகமோ அசைவற்றுக் கிடந்தது. பதிவிரதையானமையின் தன் தேகத்தில் தீப்படாமுன் உயிரைத் துறந்துவிட்டனள் போலும்! இல்லாவிடில் தேக மசையாது எவ்வாறு இருத்தல் கூடும்? மரண பயம் சிறுவயது முதற்கொண்டே இல்லாமையின் மேல் நோக்கமே என்றொன்று மதிகரித்திருந்தமையின், இஷ்டப்பட்டபோது தேகத்தை விடக்கூடிய சக்தி தாராபாய்க்கு இருந்ததென்று தெரிய வருகின்றது ; இதுவன்றோ கற்பின் பயன்.

# பன்னா என்னும் தாதி.

வட இந்தியாவில் இராஜபுதனமென்னு மொரு மாகாண முளது. அதில் மோவர் என்னும் நாட்டை மிகக் கீர்த்தியுட னாண்டுவந்த மன்னர்களில் ஸங்கிரம் ஸிங் என்பவர் தமது நிர்யாண காலத்தில் தமது சிறு புதல்வனன்றி வேறொருவரும் இராஜரீகம்செய்ய இல்லாமையைக் கண்டு தமது பிரதான மந்திரியாகிய பன்னாபிர் என்பவனை குழந்தைக்கு வயது வரும் பரியந்தம் அரச விவகாரம் நடத்தி வரும்படி நியமித்தான்.

இந்தப் பன்னாபிர் என்னும் அமைச்சன்விஷயத்தில் ஸங்கிரம்ஸிங்குக்கு முழுநம்பிக்கை யிருந்தது. இந்த அமைச்சன் அடிநாளில் மிகத் தாழ்வான சமஸ்தான ஊழியக்காரனா யிருந்து தனது புத்தி சாதுரியத்தால் அரசன் கவனத்தைக் கவர்ந்து அவனது அபிமானத்தால் நாளடைவில் பிரதம மந்திரியாயினன். ஸங்கிரம் ஸிங் அரசாள்வதில் மிகு பராக்கிரமசாலியாயிருந்தும், விஷயங்களையுணர்வதில் மிகுசூக்கும புத்தி யுடையவனா யிருந்தும், ஒருவனது நிசகுணத்தை யுணர்வதில் நிபுணனா யிருந்தும்,

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு.

என்று திருவள்ளுவ ருரைத்ததை மறந்து தாழ்ந்த குடிப்பிறப்பிற் பிறந்த பன்னாபிர் என்பவனைத் தன்னுடைய குமாரனாகிய உடைய சிங்கிக்கு உயிர்க்கொல்லியாக்கினான்.



ஸங்கிரம்ஸிங் இறந்த பிறகு உடையஸிங்கை பன்னா வென்னுந் தாதி வளர்த்து வந்தனள். இந்த வேலைக்காரி அதிக விசுவாசமுள்ளவள். இவளது பெற்றோர் பாட்டன் பாட்டி அரண்மனைச் சேவையிலிருந்து நல்ல பேரெடுத்தார்கள். இந்தத் தாதியும் அது காரணமாக இராஜ சேவையில் பேரன்புடையவளா யிருந்தாள்; தனக்கு ஒரு குமாரனிருந்தான். அவன் வயதும் யுவராஜனாகிய உடயஸிங்கின் வயதும் சற்றேறக்குறைய சமமாக விருந்தமையின் இக் குழந்தைகள் இருவரையும் வித்தியாசமின்றி அதிக வாசையுடன் அவள் வளர்த்து வந்தாள்.

ஸங்கிரமஸிங் காலமான பின், சில வருடம் பன்னாபிர் வெகு சாமர்த்தியமாகவும் குடிகள் குதூகலிக்கவும் இராஜ்யபரிபாலனஞ் செய்து வந்தான். உடையஸிங்கிக்கு வயதுவந்ததும் அரசாங்கம் தன்னினின்று நழுவிவிடுமே இதற்கென்ன செய்வது என்னும் மனக்கலக்கத்துக்கு உட்பட்டான்-பன்னாபிர் என்னும் கயவன். "ஆசைக்கோ ரளவில்லை அகிலமெலாங் கட்டியாளினும் கடன்மீதிலே யாணைசெலவே நினைவர்" என்று தாயுமான சுவாமிகள் கூறிய வண்ணம் தானே எக்காலத்தும் இராஜரீகத்தைச் செலுத்திவர வேண்டும் என்கிற சிந்தாகுலத்தைப் பன்னாபிர் அடைந்தான். இவ்விச்சையை நிறைவேற்ற ஒரே வழிதான் இருந்தது. அஃதாவது யுவராஜனான உடையசிங்கைக் கொன்றுவிடல்வேண்டு மென்பதேயாம். இதையன்றி வேறு மார்க்கத்தை அவனோர்ந்திலன். இந்தக் கிர்த்தியத்தைத் தானேதான் செய்தல் வேண்டும்; அங்ஙனமன்றி வேறொருவரைச் செயவிடுத்தால் இராஜபுத்திர அதிபதிகளுக்கும் அன்னோரது குடிமகன்களுக்கும்

புலந்தெரிந்து தனக்கே மோசம் வருமென்று முற்று முணர்ந்தவனாகி அத்துஷ்கிர்த்தியத்தைத் தானே செய்து முடிக்கத் தீர்மானித்தான். குழந்தை கொலையுண்டபின் இரஜபுத்திராதிபதிகளையும் ஏனையஜனங்களையும் இங்கித வார்த்தைகளாலும் இன்னுமிதர தந்திரங்களினாலும் தன் வயப்படுத்திக் கொள்ளலாமென்னும் நிச்சய புத்தியுடையவனாயிருந்தான்.

பன்னுபிர் இவ்வாறு யோசித்ததை ஒருவரும் ஓர்ந்திலர். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற பழமொழி பொய்யாகுமா. அரண்மனைச் சேவகத்தில் ஒரு அம்பட்டனிருந்தான். தன்னைப்போல இழிவான தொழில் புரிந்திருந்த பன்னுபிர் இவ்வளவு உயர்பதவிக்கு வந்தது தனக்கு இஷ்டமில்லை. இந்த நாவிதனுக்குப் பன்னுபிர் செய்யப்போகும் கொடிய கிர்த்தியம் எப்படியோ தெரிந்துபோய் இதனைப் பன்னுவென்னுந் தாதிக்குத் தெரிவிக்க ஒருநாள் இரவு 10 மணிக்கு அரண்மனைப் போஷணசாலைக்குள் பிரவேசித்தான். எல்லாச் சந்தடி யடங்கின பிறகு பன்னு படுத்துக் கொண்டிருக்கையில் காலரவம் கேட்டனள். யார் என்று தலைநிமிர்ந்து பார்த்தபொழுது தன்னெதிர் நின்றவன் நாவிதன் என்று புலப்பட்டது. "இந்நேர வேளையில் இங்கு வருவதற்குக் காரணமென்ன? ஏதாவது சமாசாரம் உண்டா?" என்று பன்னு நாவிதனை வினவினள். "ஆம், சமாசாரம் உண்டு, நான் சொல்லப்போவது அதிக பயங்கரத்தையும் வியசனத்தையும் விளைவிக்கக் கூடியது. அது என்னவெனில் இன்னும் இரண்டுமணி நேரத்திற்குள் பன்னுபிர் என்னும் பாதகன் இராஜ குமாரனை பாலகனைப் பரலோகம் செலுத்தப் போகிறான்" என்று விடை பகர்ந்த



னன். "இம்மாதிரி நடக்குமென எனக்கொரு ஐயரவு இருந்தது. இன்று அஃது உண்மையாயது. பன்னுபிர் என்பவன்மேல் எனக்குத் தினையளவும் உள்ளன்புண்டானதில்லை. இப்பொழுது நாம் யுவராஜனை உடைய சிங்கை எவ்வண்ணமாயினுங்காப்பாற்றல் வேண்டும்" என்று பன்னு கூறினாள். இம்மாற்றங்களை நாவிதன் கேட்டவுடன் "இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்ன, உன் யோசனையைத் தாமதிக்காமல் புகல்வாயாக" என்று நாவிதன் நவின்றனன். பன்னுவென்பவள் இராஜ சேவையில் பேரன்புள்ளவள். அன்பானது ஆசையையும் சிநேகத்தையுந் தரும்.

"புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு".

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். இராஜசேவை செய்யு மனவொழுக்கத்தில்மாசற்றநெஞ்சுடையவளாயிருந்து வந்தமையின் பொறுமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் என்னும் இந்நான்கையுங் கடிந்து நடக்கு மாற்றலுடையவளா யிருந்தனள். இதனால் சித்த சுத்தி யடைந்து சித்த விஸ்ராந்தியை எஞ்ஞான்றும் வகித்திருந்தனள். இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்னவென்று நாவிதன் கேட்டவுடன் சித்த சஞ்சலம் தன்னை யணுகவொட்டாது தனது இஷ்ட தேவதையை ஒரு நாழிகை நேரம் ஸ்மரித்தவுடன் [illegible]ன வருமாறு ஆலோசிக்கலாயினள்.

"செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி"

என்று நாயனார் கூறியவண்ணம் ஒருவன் செய்யத்தக்கது நல்வினையாயிருக்க வேண்டும். இந்நல்வினையும் அவனவன் ஆச்சிரமத்துக்கியைந்ததாகும். உலகங்கள் யாவற்றையும் ஆக்கி அளித்துத் துடைக்கவல்ல இறைவன் பல்லாயிர உயிர்களையும் அவரவர் கன்மத்துக்கீடாகத் தகுந்த ஆசிரமத்தைக் கருவிலேயே அமர்த்தியுள்ளான். இவனது லீலா விபூதிக்கிணங்க ஒவ்வொருவனும் இவ்வுலகின்கண் ஒவ்வொரு நிலைமையில் அமர்த்தப்படுகின்றான். அந்நிலைமையினின்று பெயர்ந்து செல்வது இறைவனது கருணையின்றி இயலாது. குறித்த அந்நிலையின்கணுள்ள கடமையைச் சரிவரச் செலுத்துவதே இறைவனருளுக்குப் பாத்திரனாவதற்கு ஹேதுவாகும். இவ்வுலகின்கண் எனது நிலைமை தாதியாயிருத்தல். இந்நிலையில் நான் என் வசம் ஒப்புவித்திருக்கும் பாலகனைப் பரிபாலிப்பது எனது முக்கியக் கடமை. இக்கடமையை எனது சுயநலத்தையும் சௌக்கியத்தையும் கவனியாது புரிவதினால் கடவுள் கிருபைக்கு உரித்தாகுவேன். இராஜகுமாரன் உயிரைக் காப்பதற்கு என் குமாரன் உயிர் போக வேண்டிவரின் அது எனக்குச் சம்மதமே" என்று இவ்வாறாகத் தன்னுள் சிந்தித்து இராஜகுமாரனை எடுத்துக்கொண்டுபோய் எங்கேயாவது ஒளித்து வைத்துவிடல் வேண்டுமென்று நாவிதனிடஞ்சொல்ல, "அவ்விதம்செய்யத் தற்காலம் இயலாது. ஏனெனில் இன்று இரவு எந்தக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு வெளியில் அரண்மனையை விட்டுப் போகக் கூடாது என்று பன்னாபீர் தாக்கீதிட்டு இதை- னித்துப் பார்க்க காவலாளிகளை இருமடங்காக்கி உஷாராயிருக்கச் செய்திருக்கின்றான்" என்று நாவி-



தன் நவின்றனன். "அங்ஙனமாயின், பன்னாபீர் யோசனையை நிஷ்பிரயோசனப்படுத்த நாமும் ஒரு யோசனை செய்வோம். அதோ அங்கிருக்குங் கூடையை இங்கே கொண்டுவா. இராஜகுமாரனை அதில் வைத்து, குப்யை கூளங்களால் குழந்தையை மூடிவிடுகிறேன். குப்பைக்காரன் குப்பை எடுத்துப்போவது போல் நீ கூடையை எடுத்துக்கொண்டு அரண்மனைக்கு வெளியே போய்விடலாம். காவல்காரர்கள் குப்பக் கூடையென்று மதித்து உன்னை ஆக்ஷேபியார்கள் என்று பன்னா புகன்றனள்." இந்த ஆலோசனையைக் கேட்ட புத்திசாலியான நாவிதன் சொல்லுவான், "பன்னாபிர் என்பவன் பாதகச்செயலைப் புரிய இன்னுஞ் சற்று நேரத்திற்குள் இங்கு வருவான். குழந்தையைக் காணவிடில் அவனைக் கண்டு பிடிக்க மனிதர்களை எல்லாப் பக்கங்களிலும் ஏவுவன். இராஜகுமாரனை எப்படித் தப்புவிக்க இயலும்?." "நீ கூறுவது உண்மையே. இராஜகுமாரன் கொண்டுபோகப் பட்டான் என்று அவனுக்குத் தெரியாவண்ணம் என்னுடைய குமாரனை இராஜ குமாரன் சயனத்தில் கிடத்தி வைத்துவிடுவேன். என்னுடைய அருமைப் புதல்வன் உயிர்போய், யானும் என்னுடைய மூதாதைகளும் பரம்பரை பரம்பரையாக விசுவசித்துப் பணி செய்துவந்த இராஜ வம்சத்துக்கு யாதொரு ஹானியும் நேரிடாமற்படிக்கு என்னால் செய்யக்கூடுமாயின் அதனையே யான் பெரும் பாக்கியமென மதிப்பேன்" என்று அமைதியுடனும் தாழ்ந்த குரலுடனும் பகர்ந்தனள். அம்பட்டன் இதற்குச் சொல்லும் வகை ஒன்றுந் தோன்றாது, தன் பிள்ளையைமாணத்துக்காளாக்கி-

விடச்சம்மதித் திருக்கின்றனளே என்னும் எண்ணத்
தில் மெய்மறந்து மரம்போல அசையாது நின்றான்.
இதைக் கண்ணுற்ற பன்னா தானே அங்கிருந்த கூடை
யைக் கொணர்ந்துவந்து அதில் இராஜ குமாரனை
அசையாமல் வளர்த்தி குப்பை கூளங்களினால் மூடி
மரம்போல்நின்றுகொண்டிருந்த நாவிதனுக்குஸ்மரணை
வரும்படி அவனதுதேகத்தைக் குலுக்கி அவனைநோக்
கி இக்கூடையை எடுத்துக்கொண்டு தாமதிக்காமல்
போகக்கடவாய்; இக் குழந்தையை அரண்மனைக்கு
வெளியே சிறிது தூரத்திலிருக்கும் ஒரு பலத்த வர்த்
தகனுடைய பெயரைச் சொல்லி அவனிடத்தில் சேமி
த்துவை"என்றுகூறி அவனைக் கட்டாயப்படுத்தி அனு
ப்பிவிட்டனள். நாவிதன் சென்றவுடன் தன்னுடைய
குமாரனை இராஜ குமாரன் சயனத்தில் மெல்லென
வளர்த்திவிட்டு பன்னாபீர் என்னும் பாதகன் வருகை
யை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தனள். இராத்திரி
12 மணி யாயிற்று. எங்கும் நிசப்தமாயிருந்தது.
அத்தருணத்தில் மனிதன் காலடிச்சப்தம் பன்னா என்
னும் தாதியின் காதில் கேட்டது. யாரென்று அவள்
தலையைத்தூக்கிப்பார்த்தபொழுது சமஸ்தானபோஷ
ணசாலையின் கதவண்டை பன்னாபீர் நின்று கொண்டி
ருக்கப் பன்னாகண்டனள். அவனுக்குமரியாதைசெய்ய
அவள் உடனே எழுந்தபொழுது "இராஜ குமாரன்
சௌக்கியந்தானா, அதைத் தெரிந்துகொண்டுபோக
நான் ஆவலாக வந்தேன்" என்று சொல்லிக்கொண்
டே குழந்தைப் படுக்கையண்டைபோய் அங்குச் சய
னித்துக் கொண்டிருந்தது எந்தக் குழந்தையென்று
நிதானிக்காமல் குத்துவாளினால் அக் குழந்தையின்



மார்பில் பன்னாபீர் குத்தினான். குழந்தை வீர் என்று
ஓரே கூச்சல்போட்டது. பன்னாபீர் தன்னைத் தப்பித்
துக்கொள்ளும் நிமித்தம் சடுக்கெனத் தன்னிருப்பிட
த்திற்கு ஓடோடியும்போய் தன்னறைக்குள் புகுந்து
கொண்டான். ஒரு கூச்சல் குழந்தை போட்டதைக்
கேட்டு அரண்மனையில் எல்லாப் பக்கங்களிலிருந்தும்
ஜனங்கள் கும்பல் கும்பலாய் வந்து ஒருங்குகூடினர்.
பன்னா என்னும் தாதி மூர்ச்சையடைந்து கீழே விழு
ந்து கிடந்ததையும் குழந்தை இரத்த வெள்ளத்தில்
துவண்டிருந்ததையும் கண்டனர். வந்த ஜனங்கள்
பன்னாவை மூர்ச்சை தெளிவித்து குழந்தையைக்
கொன்றது யாரென வினவினர். "யாரோ ஒரு கரிய
மனிதன் வந்து கொன்றுவிட்டு ஓடிவிட்டான்"
என்று பன்னா மறுமொழி பகன்றனள். எல்லா விஷ
யமும் தெரிந்திருந்தும் வீண் கலகம் நேரிடாவண்ணம்
இம்மாதிரி பன்னா கூறினள். இராஜ குமாரன்தான்
கொலைப்பட்டான் என்று துக்கித்துப் பிரலாபித்துக்
கொண்டே வந்த சனங்கள் தமது இருப்பிடம் திரும்
பிச் சென்றனர்.

பன்னாவென்னுந் தாதி இராஜ சேவையினின்
றும் நீங்கி உடையசிங்கைச் சேமித்து வைத்திருந்த
ஜைன மதத்தனாகிய அர்ஹார்ஷா வென்னும் வர்த்தக
னிடம்போய்ச் சேர்ந்தாள். இந்தவர்த்தகனிடம்வெகு
நாள் யாருக்குந் தெரியாமல் உடையசிங்கு வளர்ந்து
வந்தான். வயது வந்ததும் இராஜ குமாரனான உடைய
சிங்உயிரோடிருக்கின்றானென்றுவெளியிடப்பட்டது.
இதனை யோர்ந்த இராஜபுத்திர அதிபதிகளும் இராஜ
புத்திர ஜனங்களும் அளவிலாக் கோபமடைந்து

பன்னாபீர் என்பவனுக்குச் சிறிதும் இரக்கங்காட்டா
மல் அவனைச் சிரச்சேதம் செய்து உடையசிங்கைச்
சிம்மாதனத்தி லேறப்பார்த்து மகிழ்வெய்தினர்.

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து வளர்த்துத்
தனது குமாரனைக் கொலைக்குட்படுத்தி உடையசிங்
உயிரைக் காப்பாற்றிய பன்னாவென்னுந் தாதியின்
புகழும், கீர்த்தியும் உலக முள்ளளவும் குன்றாது
விளங்குமென்பதற்கு ஐயமுண்டாமோ? அவள் சாந்
தனையும், உடையசிங் என்னும் அரசன் அவளுக்கு
வேண்டிய மரியாதை செய்வதில் பிறழாது நின்று
அவளுக்கு யாதொரு குறையும் நேரிடாதபடிக்கு
இரக்ஷித்து நன்றி யறிதலுள்ளவனா யிருந்தான்.

## கனோர் தேசத்து இராணி.

பாரதகண்டத்திலே விந்தியமலைச்சாரலினருகி
லுள்ள பிரதேசமாகிய மத்திய இந்தியாவில் ஹிந்து
இராஜாக்களால் ஆளப்பட்டு வந்த கனோர் என்னும்
ஒரு சிறுநா டிருந்தது. மொகலாயர்களால் துறத்தப்
பட்ட பட்டான் (இவர்களும் துருக்கர்கள் தாம்) ஜாதி
யார் தாங்கள் வசித்திருந்த டில்லிநகரை விட்டுத்
தெற்குப் பக்கம் இருந்த நாடுகளைக்கைவசப்படுத்திக்
கொண்டே குடியேறிக்கொண்டு வந்தனர். அக்கா
லத்தில் இருந்த ஹிந்து இராஜாக்களுள் பெரும்பான்
மையோர் சௌரியம் வீரம் முதலிய பராக்கிரமங்க
ளற்றவர்களாயும் படைவலி குன்றியவர்களாயும் ஒற்
றுமையின்றிப் பொறாமை குடிகொண்டவர்களாயும்



இருந்தமையின், பட்டான்காரர்கள் வெகு இலேசாக
அவர்களெல்லோரையும் யுத்தத்தில் வீழ்த்தி அவர்க
ளுடைய நாடுகளைத் தங்கள் கைவசப்படுத்திக்கொண்
டே கனோர் நாட்டுக்கு வந்தனர். இந்நாட்டை யாண்டு
கொண்டிருந்த மன்னன் ஏனைய ஹிந்து அரசர்கள்
போலல்லாது மிக்க ஆற்றலுடையவன்; தேசாபிமான
முள்ளவன்; தைர்யத்தில் சிங்கத்தை யொத்தவன்;
குடியோம்பலில் மிகப் பிரியன்; தன் குடிகளின்
க்ஷேமத்துக்காகத் தனது ஆருயிரையுந் துறக்குஞ்
சுபாவமுள்ளவன்; தெய்வ பக்தியில் சிரேஷ்டன்;
குடிகளும் இம்மன்னனிடத்தில் பேரன்பு கொண்ட
வர்களா யிருந்தனர். இத்தகைய அரசனை வெல்வ
தற்குப் பட்டான்காரர்களுக்கு வெகு சு ல ப மா கக்
காணப்படவில்லை. பட்டான் அதிபதிக்குக் கான்
என்று பெயர். ஒரு அங்குல நிலம் கைப்பற்றுவதற்கு
எவ்வளவோ பட்டான்கார இராணுவர்கள் இறக்க
வேண்டியதா யிருந்தது. ஹிந்து இராஜனும் இப்
பட்டான்காரர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட உயிர்
துறத்தலே நலமென விடாமுயற்சியுடன் போர்புரி
ந்து வந்தான். ஹிந்து மன்னன்படைவலி அதிக
சொற்பமாகவும் கானினுடைய சைன்னியம் ஏராள
மாகவும் இருந்தமையின் கடைசியில் ஹிந்து இரா
ஜன் தனது சேனைத் தலைவர்களுடன் படுகளத்தில்
மாண்டான்.

மனக்கலக்கம் விளைவிக்கக்கூடிய இச் செய்தி
யைச் செவியேற்ற இராணி என்ன செய்தனள்?
மார்பைப் புடைத்துக்கொண்டு கூந்தலை விரித்துப்
புலம்பினளா ; ஆ!பிராணநாதரே என்னைக் கைவிட்டு

எங்குகரந்தீர் என்று துக்கித்து, மூர்ச்சை யடைந்த
னளா ; பாதகர்களாகிய பட்டான்காரர்களுக்குத்
துணைபுரியும் தெய்வமே, உந்நீதிக்கடுக்குமாவென்று
தெய்வத்தை நொந்து பிரலாபித்தனளா ; இவ்வாறு
செய்வோர், விஷயபோகங்களில்ஆழ்ந்து உயிரையோம்
புதலே அறமென்மதிக்கும் மாதரல்லவா? இராணியோ
கல்வி கேள்விகளால் புகழ் பெற்றவள். " காவலனை
பாவையர்க் கழகு " என்னும் அணிகலனைப் பூண்டு
கற்புக்கு ஹானி வருமுன் உயிரைத் துறக்கக் கூடிய
வளாகையின், கணவன் போர்க்களத்தில் மாண்ட சமா
சாரத்தைக் கேட்டவுடனே சோகத்துக்குச் சற்றும்
இடங் கொடுக்காமல் தன்னால் சேகரிக்கக் கூடிய இரா
ணுவ வீரர்களைப் புதிதாய்ச் சேர்த்துக்கொண்டு பட்
டான்காரர்களை வரவொட்டாமல் இன்னும் தடுத்துக்
கொண்டிருந்த தனது நாட்டின் சைன்னியத்துக்குத்
தளகர்த்தத் தன்மையை உடனே வகித்தனள். போர்
புரியும் வித்தையில் இவளும் தனது கணவனைப்போல்
சமர்த்தளானபடியால், தங்களுக்கு இவள் தளகர்த்தத்
தன்மையை வகித்ததைப்பார்த்தபோர்வீரர்கள் அதிக
உற்சாகத்தை யடைந்து முன்னினும் அதிக மும்மர
மாயும், வீராவேசத்துடனும் பட்டான்காரர்ரளை எதி
ர்த்து நின்றனர். பட்டான்காரர்களும் மனச்சோர்வை
யடையும்படி அவ்வளவு தைரியத்துடன் இராணியும்
அவளது ஆற்றலுடைய வீரர்களும் நிலைகுலையாது
நெடுநாள் நின்றனர். நாளுக்குநாள் இராணியின்
சேனை குறைந்துக்கொண்டு வந்தது. பட்டான்காரர்
களோ ஒரு அங்குல நிலத்தைக் கைவசப்படுத்த எண்
ணில் போர்வீரர்களை இழந்துகொண்டு வந்தனர்.



இராணி ஒவ்வொரு கோட்டையாய் இழந்துகொண்
டே வந்து கடைசியில் மிகுந்திருந்த 6 வது கோட்
டைக்குள் பிரவேசிக்கத் தனது சேனைக்குக் கட்டளை
இட்டனள். இக்கோட்டையானது நர்மதா நதிக்
கரையிலிருந்தது. இதனைத் தெரிந்துகொண்ட பட்
டான்காரர்கள் அவளை உடனே பின் தொடர வாரம்
பித்துக் கோட்டைக்குள் பிரவேசிக்காவண்ணம் தடு
க்க முயன்றனர். இராணியின் சேனையின் ஒரு பாகம்
ஆற்றங்கரையிலும், ஒருபாகம் படகுகளிலும், ஒருபாக
ம் வேறிடங்களிலும், இப்படியாகச்சென்று கொண்டி
ருந்தன. பட்டான்காரர்கள் நர்மதா நதிக் கரையி
லிருந்த கோட்டையைத் தாக்கச் செல்லவே கோட்
டைக் கதவு மூடப்பட்டது. முசல்மான்கள் பிசா
சைப்போல் போர் புரிந்தார்கள். இரண்டு சேனைக
ளுக்கும் சொல்ல முடியாத சண்டை நடந்தது. இரா
ணியின் சேனையில் இறந்தோர் சில்லோராயின் பட்
டான் வீரர்களில் மரண்டவர் பல்லோர். கோட்டைக்
குள்ளிருந்த ஹிந்து சைன்னியம் வெகு கொஞ்சம்.
அபஜயம் நேரிடுமென்று நன்றாகத்தெரிந்தபோதிலும்
ஹிந்துஸைன்னியமானது சற்றேனும் மனச்சோர்வை
யடையாது இராணியின் பக்கலில் நின்று வீராவேசத்
துடன் போர்செய்தது. கோபமூண்ட முசல்மான்
கள் கோட்டைச் சுவரேறி அனேகமாயிரக் கணக்காக
உள்ளே யிறங்கவே, இராணி என்ன செய்வாள்? கை
யளிக்கு மார்க்கமன்றி வேறு வழி கண்டிலள். " நாங்
கள் உங்கள் கைவசமாக ஒருப்படுகிறோம். சைன்னிய
சங்காரத்தை நிறுத்திவிட வேண்டுகிறேன் " என்று
ஜயமடைந்த கானுக்குத் தெரிவித்தனள்.

இந்தச்சமாசாரத்தைக் கொண்டுபோன இராணியின் தூதனுக்கு நல்வரவு கொண்டாடி அதிக மரியாதையைக் கான் காட்டினான். கனோர் நாட்டைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்கிற ஆவல் கானுக்கு அவ்வளவு இல்லை. இராணி அதிக ரூபலாவண்யமுடையவளானமையின் அவளைத் தனக்கு இராணியாக்கிக் கொள்ள வேண்டுமென்னும் காமநோயால் பீடிக்கப்பட்டிருந்தான். ஆதலின் இராணி யனுப்பி வைத்த சமாசாரத்தைக் கேட்டவுடன் ஆனந்தக் கடலில் ஆழ்ந்து அடியிற் கண்டிருக்கும் மறு உத்தரம் அனுப்பினான்.

"இராணியை அவளது வீராவேச தைரியத்துக்கு அதிக மெச்சினேனென்று போய்ச் சொல்லு. இராணியென்ற பெயர் அவளுக்கே தகும். இதுகாறும் அவள் இராணியா யிருந்ததுபோல எனக்குயிருள்ளளவும் இராணியாகவே இருப்பாள். யான் அவள் ஏவற்பணிகளைப் புரியும் அடிமையா யிருக்கச் சம்மதப்பட்டிருக்கிறேனென்று நீ போய்கூறுவாயாக. கனோர் இராஜ்ஜியத்தை இதுகாறும் ஆண்டு வந்தது போல் இனிமேலும் ஆண்டு வருவதுமன்றி அவள் மாற்றத்துக்கு எதிர்கூறப்போகாத அடியேனையும் ஆளட்டும்." இச்சமாசாரத்தை இராணி கேட்டபொழுது, கான் இஷ்டத்துக் கிணங்காவிடில் உடனே தன்னைப் பலவந்தப்படுத்துவான், இதற்கு ஐயமின்று. இத்தூர்த்தன்கையில் சிக்காமார்க்கம் தேட வேண்டுமென்று தீர்க்க ஆலோசனை செய்து கானுக்கு மறுபடியும் கீழ்க்கண்டிருக்கும் உத்தரம் விடுத்தனுப்பினள்.



"கானை அவரது வீரமுள்ள நடத்தைக்கும் திடச்சித்தத்துக்கும் அதிக மெச்சி அதிகவியந்து பேருவகை யடைந்திருக்கிறேன். மகளீர்களாகிய யாங்கள் ஒருஆடவனுடைய தைர்யத்தையும் பௌரிஷத்தையும் நோக்கிவியக்கக் கூடியவர்கள். இக்குணங்களைக் கான் பூரணமாய் அடைந்திருத்தலின் அவர் என்னை மணஞ்சூட்டுதற்குரியவரா யிருக்கின்றனர். அவர் என்னைத் தனது மனைவியாக அங்கீகாரஞ் செய்யின் எனக்குப் பெரிய கண்ணியமென நான் மதிப்பேன். இதற்குக் கான் இசைந்தால், எங்களுடைய புராதன வழக்கத்துக்கிணைய, விவாகமானது எங்களுடைய அரண்மனையில் நடைபெறல் வேண்டும். நான் விவாகத்துக்குத் தயாராவதற்கு இரண்டு மணி சாவகாசம் எனக்குத் தேவை. ஏனெனில் என்னந்தஸ்துக்கும் கான் அந்தஸ்துக்கும் பொருத்தமான ஆடைகளைத் தயார் செய்து அணிய வேண்டும்." இவ்வாறு கானிடம் புகலும்படி தூதனுக்குக் கட்டளையிட்டனுப்பினள்.

"எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்" என்று திருவள்ளுவர் கூறியவண்ணம் அதிக வீரனாகவும், அநேக நாடுகளுக் கதிபதியாகவும் கான் இருந்தபோதிலும் காமாந்தகாரத்தால் உணர்வழிந்தவனாய் விட்டான். இராணி சொல்லி அனுப்பிய சொற்களின் உள்ளீடாயிருக்கக்கூடிய கருத்தைக் கான் உணர்ந்தானில்லை. விவாகத்தைக் குறித்து இராணி கேட்டுக்கொண்ட வேண்டுகோளுக்கு இணங்குவதால் விளையக்கூடிய துன்பத்தை முற்றிலும் மறைத்துவிட்டது, அவனது பிறனில் விழைவு.

" எளிதென வில்லிறப்பா னெய்து மெஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி "

என்னும் திருக்குறள் வாக்கியத்தை இங்குக் கவனித்தற் பாலதாம்.

காமவிச்சைப் பூர்த்தியையே நாட்டங் கொண்டவனாகிய கான், இராணி கேட்ட யாவையுந் தர ஒருப்பட்டான். வைரக்கற்கள் புதைத்த ஒரு ஹாரமும், மிக அலங்காரமும் விலையுயர்ந்ததுமான ஒரு மணவணியும், கானுக்கு வெகுமானமாக இராணி அனுப்பி அவற்றை யுடுத்திக்கொண்டு பாணிக் கிரகணத்துக்கு இனிக் குறிப்பிட்டனுப்பப்படும் காலத்தில் எழுந்தருள வேண்டுமென்று தூது அனுப்பினள். இவைகளைப் பெற்றுக்கொண்ட கானின் களிப்பு அளவிலதாயிற்று. முசல்மான்களுக்கு விவாஹ சமாச்சாரம் காட்டுத் தீப்போல எங்கும் பரவினது. அவர்கள் ஆடல்பாடலாயினர். சண்டையோசை நீங்கிக் குதூகலவோசைக் கிளம்பியது. வதூவரர்களின் க்ஷேமத்தைச் சந்தோஷ பானங்களினால் கொண்டாடினார்கள். பட்டான் அதிபதியாகிய கானே ரூபலாவண்ணியமுள்ள இராணியை எப்பொழுது பார்க்கப் போகிறேன் என்று ஒவ்வொரு நிமிஷத்தையும் வருடம்போலக் கழித்துக்கொண்டு உன்மத்தனைப்போ லிருந்தான்.

இப்படிப் பொறுதியற்றிருக்குந் தறுவாயில் இராணியினிடமிருந்து தூதன் வந்து கானை விவாகத்துக்கு வரும்படி அழைக்கலுற்றான். இராணிசொன்ன சமாச்சாரத்தைத் தூதன் சொல்லி முடித்தானோ முடிக்கவில்லையோ, இராணி கொடுத்த ஆடையைப் பூண்டு கொண்டிருந்த கான் அதிக விரைவாக உப்பரிகை



மேற் சென்றனன். இராணியைக் கண்ணாற் கண்ட மாத்திரத்தில் அவளது பேரழகைக் கண்டு ஆனந்தக் கடலில் ஆழ்ந்தான். அவளது முகலாவண்ணியத்தைப் பற்றித் தான் இதுகாறும் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்துக்குமேல் எத்தனையோ மடங்கு தன் மனத்தைக் கவரக்கூடியதா யிருந்தது, அவளது சௌந்தரியம். அம்மாதி னுருவத்தை வர்ணிக்க வல்ல கவிஞற்கு மசாத்தியமெனில் சாமானியர்களால் எடுத்துரைக்க முடியுமோ. வெல்வெட்டாற் செய்த ஒரு உயர்வான ஆசனத்தில் இராணி வீற்றிருந்தனள். அவளைச் சுற்றிச் சிறிது தூரதூரம் கோணியாற் செய்த உயரமுள்ள குஷன்களின்மீது அரண்மனையிலிருந்த மகளீர்கள் உட்கார்ந்திருந்தனர். இந்த மகளீர்கள் உயர்ந்த பட்டாடைகளை யணிந்து கையில் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு இருந்தனர். கானுக்கும் வீற்றிருக்க அதிக வாஞ்சையுடன் ஒரு ஆசனம் அளிக்கப்பட்டது. இராணி இவனுக்கு வாழ்க்கைப் படுவதாக எப்பொழுது சொல்லி யனுப்பினளோ அப்பொழுதே கான் அவளுக்கு அடிமையாய் விட்டானன்றோ ; அவள் காலாலிட்ட வேலையைக் கையாற் செய்ய ஆரம்பித்தனன். அவளுடன் சற்று நேரம் சம்பாஷணை செய்து கொண்டிருந்தான். அவளது சௌந்தரியத்தை அவன் பார்க்கப் பார்க்க ஒரு நிமிஷம் போவது ஒரு வருடம்போ லிருந்தது. இப்படி அவன் பூரிப்பாய் அவள் முகத்தை நோக்கிக்கொண்டிருக்கையில்

" தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று "—என்று நாயனார்

கூறியவண்ணம் திடீரென்று கான் முகவாட்ட முற்ற வனாய் உடலில் எரிச்சலுண்டா யிருக்கிறதென்று முறையிட்டனன். உடனே ஆலவட்டம் ஓச்சினர்; பருக ஜலங்கொண்டுவந்து தந்தனர். இன்னும் ஏனைய சிகிச்சைகளும் செய்யப்பட்டன; இவை யாவும் பிரயோசனப்படாமற் போயின. கான் மரண வாதனையை யடைந்து தனதுமணவணியைத் துண்டுதுண்டாகக் கிழிக்கத் தலைப்பட்டான். அச்சமயத்தில் இராணி தன்னிடத்தினின்று மெதுவாக வெழுந்து அவனருகிற்சென்று "ஐயா உமது இறுதிக்காலம் வந்து விட்டதென நீர் ஓர்வீராக; நீர் உடுத்திருக்கும் ஆடை பாஷாணம் நிறைந்துள்ளது. எனது மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள உமது நடத்தையால் வேறெந்த வழியுமில்லாமற் போய்விட்டது" என்று கூறி கானைப் பின்பற்றிவந்தவர்கள் இம்மாற்றங்களைக் கேட்டதனாலுண்டான பிரமையிலிருந்து தெளியு முன் உப்பரிகையி னளிந்தத்தின் கீழடிவாரத்தி லிருந்த ஆற்றில் வீழ்ந்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டனள்; இராணி அதிக உயர்குலத்தோ ளாதலின்.

"சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்"

என்று ஆன்றோர் கூறிய வண்ணம் புகழுடனே மானத்தைக் காப்பாற்றுவாள் வேண்டி தங்குடிப் பிறப்புக் கொவ்வாத இழிதொழிலைச் செய்யாது தவிர்ந்தனள். மானங்கெட்ட விடத்து இறவாது கானெண்ணத்திற் கிசைந்து நடந்து வாழ்தல் இறவாமைக்கு மருந்தாகா வாற்றை நன்கு உன்னி இராணி உயிர் துறந்தமையின்,



"இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு"

என்று நாயனார் கூறியவண்ணம் இராணியின் புகழ் வடிவை யுலகத்தார் என்ஞான்றும் துதியா நிற்பர்.

இராணி இவ்வாறு மறைந்ததும் கானைப்பின் பற்றி வந்த மூர்க்கத் தன்மையுள்ள முஸல்மான்கள் அங்கிருந்த இராணியைச் சார்ந்த மகளிரைத் தாக்க ஆரம்பித்தபொழுது அம்மாதர்கள் தாங்கள் உட்கார்ந்திருந்த வெடிமருந்துக் குவியலுக்குத் தங்கள் கையிற் பிடித்திருந்த தீவட்டியினால் அக்கினி தீண்டச் செய்யவே அம்மருந்து வெடித்துப் பெரும் புகையையும் நெருப்பையு முண்டாக்கி அங்கிருந்தவர்களைக் கொன்றுவிட்டதுமன்றி, உப்பரிகையைக் கடைக்கால் விட்டு நழுவி விழுவதுபோற் செய்தது. பாதி எரிந்ததும் எரிப்படாததுமான (கான் பட்டப்பெயருடைய) முஸல்மான் கடம் கண்டெடுக்கப்பட்டுப் பூபால் சாலையில் புதைக்கப்பட்டது. இம் முஸல்மான் எத்தனை ஊருக்கு அதிபதியா யிருந்துமென், எத்தனை அரசர்களைக் கீழ்ப்படுத்தித் தனக்குக் கப்பங் கட்டும் புகழ் பெற்றிருந்துமென், எவ்வளவு சைன்னியங்கள் தனது ஆணைக்குட்பட் டிருந்துமென், பிறன் மனைவியைச் சேரவேண்டுமென்னும் கூடா வொழுக்கமானது அவனை மரணத்துக்குள்ளாக்கியது. இதை நோக்கியன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்

"எனைத்துணைய ராயினுமென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்".

என்று கூறியுள்ளார். இதனை யாவரும் நன்குணர்தல் வேண்டும்.

# இராணி துர்க்காவதி.

இந்தியாவை ஆண்டுவந்த மகம்மதிய மன்னருக்குள் அதிகப் பிரசித்தி பெற்றவர் அக்பர். இவர் கல்வி கேள்வித் திறமையும் குடிகள் விஷயத்தில் பாராட்டிய பேரன்பும் இந்திய தேச சரித்திரத்தை வாசிப்போருக்குத் தெரிந்த விஷயமே. இவர் இமயமலையிலிருந்து கடல் வரைக்கு மிருந்த ஒவ்வொரு நாட்டையும் தமது குடைக் கீழ்ப்படுத்தி டில்லி சக்கிரவர்த்திகளுக்குள் இவரைப்போன்ற வல்லமையுள்ளவரிருந்த தில்லையென்று யாவரும் மதிக்கும்படி அரசு செலுத்தி வந்தார். எல்லா நாடுகளையும் கைப்பற்றிய அக்பர் அரசன் ஒரு நாட்டை மாத்திரம் அதனது சுதேச அரசியலிலேயே விட்டு வந்தான். அந்நாட்டிற்குக் குருமண்டல் என்று பெயர். இந்நாட்டை அதிக தைரியத்துடனும் துணிவுடனும் ஆண்டு வந்தவள் துர்க்காவதி என்னுமொரு மாது.

துர்க்காவதியின் பிதா வட இந்தியாவில் கனோஜ் என்னும் நாட்டை ஆண்டு வந்த சந்தனன் என்னும் அரசனாவன். அவள் கல்வி கேள்விகளால் நிறைந்திருந்தாள். இஃதன்றியும், கண்டோர் மனதைக் கவரக்கூடிய கட்டழகியாயும் விளங்கி வந்தனள். இம்மங்கைக்குக் கணவனை வரிக்கும் வயது வந்தது. சந்தன மஹாராஜன் தனது குமாரத்தியை ஒரு இராஜபுத்திர அதிபதிக்கு மணஞ் சூட்டுவிக்க வேண்டுமென்று எண்ணங் கொண்டிருந்தான். முற்காலத்தில் ஒரு ஸ்திரீ தன் கணவனைத் தானே தெரிந்தெடுக்கும் சுயம்வரம் என்னும் ஒரு வழக்க மிருந்



தது. இவ்வழக்கமானது அக்பர் காலத்தில் ஒழிந்துவிட்டதுபோலக் காணப்படுகின்றது. துர்க்காவதியானவள் கல்வி கேள்விகளால் நிறைந்தவளானமையின் கிரகஸ்தாஸ்ரம தர்மத்தைச் சரிவரநடத்துவதற்கு ஏற்ற மணாளன் அவசியமென மனதிற் கொண்டாள். செல்வீகர்கள் அனேகர் பொருட் செருக்கால் அகங்காரக்கிரந்தர்களாகி அக்கிரமகாரியங்களி லீடுபட்டிருந்திருக்கின்றனர். தேசாதிபதிகள் எத்தனையோபேர் தூர்த்தர்களா யிருந்திருக்கின்றனர். கல்விமான்களுள்ளும் கயவர்களைக் கண்டுள்ளோம். இல்வாழ்க்கை அன்பையு மறத்தையு முடைத்தானா லவ்வுடைமையானது அதற்குக் குணமும் பிரயோஜனமுமாகும். கரும இயல்போடு இல்லறத்தில் வாழக்கூடிய யாவனன்றோ மாண்புடையவனாவன். பிறதெய்வத்தைவணங்காளாகி, கணவனைத் தொழுதெழ வேண்டுமென்று கற்புடைமங்கையற்கு அறம் விதித்திருக்கின்றது. ஒரு கணவனைத் தெய்வமெனத் தொழ வேண்டின் தக்க குணமமைந்துள்ளவனாயிருத்தல்வேண்டுமன்றோ! அக்குணங்களமைந்துள்ள புருஷனையல்லவா யான் எனதுகணவனாக வரிக்கவேண்டும். அத்தகைய புருஷன் கிடைக்காவிடில் கன்னிகையா யிருந்து கடவுள் பாதசேவையில் என் வாழ்நாளைக் கழிக்க மனமுள்ளேன். எனது எண்ணத்தை என் பிதா கண்டறிந்திலர். தந்தைசொன்மிக்க மந்திரமில்லை என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இதற்கு முரணாக நடக்கவும் எனக்கு மனமெழவில்லை. தந்தைக்கு எனக்கு எவ்விதத்தினும் கன்னி கழியவைத்து உயர்தர நிலையிலிருக்கும் தன்னொத்த அரசனுக்கு என்னை மணஞ்சூட்டித் தரவேண்டுமென்று ஆவல்கொண்டிருக்கின்றனர். தனக்குப் பிரியமான மாப்பிள்ளை இல்லற தருமத்தைப் பிற

ழாது நடத்துவதற்குத் தகுந்தகுணங்களையுடையவனென்று தெரிந்துகொள்ள ஆவல் கொள்கிலர். இதற்கு யான் என்ன செய்வேன்? தர்ம சங்கடத்துக் காளாகியிருக்கின்றேனே! இல்லறதருமத்தைப் பிறழாது நடத்தக்கூடிய கணவனால் நான் இன்புற்று வாழ வேண்டுமென்னு மெண்ணத்தை மனதிற்கொள்ளாது தன்னைப் போன்ற அரசன், எவ்வளவு துர்க்குணங்களுடையவனாயினும் சரி, மருமகனானால் போதுமென்று என் தகப்பன் எண்ணி யிருக்கின்றார் போலும். அவரது மூப்பு உணர்வை அழித்துவிட்டமையின் இல்லறதருமத்துக்குத் தக்க கணவனை எனக்கு மணஞ்சூட்ட வேண்டுமென்கிற வெண்ணம் அவர் மதியில் தோன்றவில்லை. ஆகலின் 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் மூதோர் வாக்கியத்தை இவ்விடம் கவனியாது இல்லறத்தைச் சரிவர நடத்தும் துணையை யளிக்கக்கூடிய கணவனையே யான் தெரிந்தெடுக்கக் கடவேன் என்று தனக்குள் தீர்மானித்து, குருமண்டல் என்னும் பிரதேசத்துக் கதிபதியா யிருந்த துல்பட்ஷா என்பவனை மாலைச் சூட்டப் பிரிய மடைந்தனள். தனது தகப்பன் அரண்மனைக்கு வரும்படி அவனைக் கேட்டுக்கொண்டனள். இவன் அவ்விதமே கனோஜ் நாட்டுக்கு வந்தபோது சந்தன மஹாராஜன் தனது குமாரத்தியை இவனுக்குப் பாணிக்கிரஹணஞ் செய்துகொடுக்க இணங்கவில்லை. இதைக்கண்ட துல்பட்ஷா சந்தனனோடு போர்புரிந்து அவனைத் தோல்வியடையச் செய்து துர்க்காவதியைக் குருமண்டலத்துக்குத் தூக்கிக் கொண்டுபோய் அங்கே அவளை மணஞ்செய்துகொண்டான்.



இத்தம்பதிகள் சில வருடங்கள் அதிக சுகமாய் வாழ்ந்து சுந்தரவடிவுள்ள ஒரு குமாரனை யீன்றெடுத்தனர். அவனுக்கு பிர்நாராயணன் என்று நாமகரணஞ் சூட்டினர். குழந்தைக்கு மூன்று வயது வந்தபோது தந்தை பரலோகஞ்சென்றனன். துர்க்காவதிக்குத் தன்கணவன் பிரிவாற்றாமைஇத்தன்மையதெனக் கூறவும் வேண்டுமோ.

"அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்."

என்று திருவள்ளுவர் கூறியவண்ணம் தன் கணவனைப் பிரியலாற்றவளாயினும் தனது புதல்வன் வயதடைகிற வரையில் இராஜரீகத்தை நடத்த ஒருவரும் இல்லாமை பற்றி தான் இன்னும் உயிர் வாழ்ந்திருப்பது அவசியமாயிற்று. ஆகவே தனது கணவன்பின் தானே அரசு நடத்தலாயினள். குடிகள் முன்னிலையில் முகமலர்ச்சியுடனும் அவரைவிட்டொழிந்த ஏகாந்த காலத்தில் தன் கணவனைச் சிந்தித்து அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக விருந்தனள்; ஆயினும், தனது நாட்டை ஒருவரிடத்தும் விடாது அதிக சாமர்த்தியத்துடன் செங்கோலோச்சி வந்தனள். குடிகளுடைய சுகம் தன் சுகம்போலும் அவர்களது இடுக்கண் தனது துக்கம்போலும் உணர்ந்து அரசு புரிந்து வந்தமையின் இவளிடத்தில் குடிகளுக்குப் பேரன்பு ஜனித்தது. இவளது ஆளுகை அனைவருக்கும் திருப்தியையளித்தது. அக்பர் என்னும துலுக்க அரசனுடைய சேனைகள் இந்நாட்டைப் பலவிதமாக நெருக்கிச் சூழ்ந்து கொண்டிருந்த போதிலும் தன்கணவன் எவ்வளவு சாமர்த்தியத்துடன் அவர்கள் கைவசமாகாவண்ணம் குருமண்டலத்தைக் காப்பாற்றிவந்தன

னோ அதற்கு எண்மடங்காகத் தானும் அதிக சாமார்த்தியத்துடனும், கௌரவத்துடனும் இந்த நாட்டை இரக்ஷித்து வந்தனள்.

அக்பர் என்னும் சக்ரவர்த்திக்குப் பிதிய திபதியாக மத்திய இந்தியாவை அனேகர் ஆண்டுவந்தனர். இந்தப் பிதிய திபதிகள் ஒவ்வொருவரும் குருமண்டலத்தின்மீது படையெடுத்துச் செல்ல உத்தரவு கேட்டும் அக்பர் சக்ரவர்த்தி அதற்கு இணங்கவில்லை. அக்பருக்கு நாடுகளை மேன்மேலும்சேர்த்து பிரதாபத்தையடைய வேண்டுமென்னு மெண்ணமே எக்காலத்தும் மேலாடியிருந்ததென்றுசொல்லுவதற்கிடமில்லை. குடிகள் க்ஷேமத்தை விரும்பியவனாகையின் இது இருக்கக் கண்ட நாட்டைக் கைப்பற்ற சுபாவத்திலே மனமற்றவனாய் விளங்கி வந்தனன். துர்க்காவதியின் பிரதாபத்தை அக்பர் கேட்டுள்ளான். அவள் நாடெங்கும் சத்திரங்களும், சாவடிகளும்,குளங்களும், குட்டைகளும் வைத்திய சாலைகளும் ஆலயங்களும்கட்டி ஜனங்களுக்குத் தாயைப்போல் நடந்து இராஜரீகம் நடத்திவருகிறாள் என்று அக்பர்க்கு அனேகர் கூறியுள்ளார். இவளது அரசாக்ஷியில் ஜனங்கள் சந்தோஷமாயும் திருப்தியுடைய வர்களாயும் இருக்கிறார்கள் என்று அவன் காதிற்கெட்டியிருக்கிறது. அந்த நாடு வர்த்தகத்திலும், செல்வத்திலும் குறைவின்றியிருக்கிறதென்றும் கேட்டுள்ளான். ஆகையினால் குருமண்டலத்தைத் தாக்குவதற்கு ஒருப்படாது வெகு வருடங்கள் கழித்து வந்தான். கடைசியில் மத்திய இந்தியாவுக்கு அஜாப்கான் என்னும் ஒரு பிதியதிபதி ஏற்பட்டான். அவன் என்னமோ சொல்லி அக்பர் சக்ரவர்த்தியின் மனதைக் கெடுத்து குருமண்டலத்



தின் மேல்படையெடுத்துக் செல்லுவதற்கு உத்தரவு பெற்றுக் கொண்டனன். ஒருபலமான சைன்னியத்தை இட்டுக்கொண்டு குருமண்டலத்தை துர்க்காவதி இராணியின் கையிலிருந்து பிடுங்கிக்கொள்ள அதிக செருக்குடன் தானே சென்றனன். அக்பர் சக்ரவர்த்திக்கு துர்க்காவதி இணையாவளோ. அக்பர் இஷ்டப்பட்டிருந்தால்எப்போழுதே இந்தநாட்டைக் கைப்பற்றி யிருத்தல் கூடும். இவளாண்டுவந்த நாடு அக்பர் கொடுத்துள்ள சிறு ஜாகீருக்குக் கூட ஒப்பாகாது; அவ்வளவு சிறு நாடாகும் குருமண்டல். இதனைக் கைப்பற்றுவதுமுசல்மான்களுக்கு வெகுசுலபம். இது துர்க்காவதி இராணிக்கு நன்றாய்த் தெரியும். முசல்மான்கள் சேனையை எதிர்த்து ஜயமடைவது கனவிலும் முடியாதென்றும், தனது நாட்டை இரக்ஷிக்க முயல்வது பைத்தியக்காரத் தனமென்றும் துர்க்காவதி இராணி முற்று மோர்ந்திருந்தபோதினும் தனது நாட்டை இரக்ஷிக்க வேண்டிய முயற்சிசெய்து அபஜய மடையின் தன்னாட்டின் அழிவுடன் தானும் அழியத் திடச்சித்தஞ் செய்து கொண்டனன்.

வெகு சீக்கிரத்தில் ஒரு பெருஞ்சேனையைச் சேகரித்தனள். குடிகள் இவளைத் தாயென மதித்து வந்தமையின் அவள் சொல்லுக் கெதிர் சொல்வாரில்லை. இரணக்களஞ்சேரக்கூடிய மனிதர்கள் யாவரும்சேனையில் வந்து சேர்ந்து அவளுக்குத் தைரியத்தைக் கொடுத்தனர். எண்ணாயிரம் துரகங்களும் ஈராயிரம் கஜங்களும் அடங்கிய தளத்தைச் சேகரித்துவிட்டனள். எப்படியாகிலும் தங்களுரை முசல்மான் கையில் சிக்கவிடக் கூடாது என்னும் எண்ணம் சைன்னிய முழுதும் மேலாடியதால், இராணியின்

உத்தரவுப்படி நடந்து உயிர்துறக்க வேண்டிவரின்
அதற்கு மிணங்கவும் மனமுடையவ ராயிருந்தனர்—
இராணுவ வீரர்களுள் ஒவ்வொருவரும்.

இவ்வளவு பெருத்த சேனையைச் சேகரிக்க குரு
மண்டல நாட்டிற்குச் சாத்தியமென்று அஜாப்கான்
கனவிலும் எண்ணிலன். இந்நாட்டிற் கதிபதியா
யிருப்பவள் ஒருஸ்திரீதானே; ஆகையால் சண்டையே
யிராது என்று யெண்ணி ஐயாயிரதுரக சேனையுடன்
குருமண்டலத்தைத் தாக்கவந்தனன். குருமண்டல
நாட்டிற்கு அருகாமையில்வந்தபோது இராணி அதிக
சாமர்த்திய முள்ளவள் என்றும் தான்கருதியது
போல பிரயோஜன மற்றவளல்லவென்றும் அவளே
சேனாதி பத்தியத்தை வகித்து அக்பர் சக்ரவர்த்தி
சேனையுடன் யுத்தஞ்செய்யத் தயாரா யிருந்ததை
யும்கண்டபொழுது தனது தவறாய அபிப்ராயம்தனக்
கு விளங்கிற்று. சண்டை செய்யாமல் ஒழியின் அக்பர்
சக்ரவர்த்திக்கு அவமானத்தை விளைவிக்குமே, அல்
லது யாதொரு ஹானியன்றிப்பின்வாங்கிச் செல்ல
வும் வழியில்லையே என்று அஜாப்கான் மனங்கலங்க
லுற்றனன். கடைசியில் வழியொன்றுந் தோன்றா
மல் இராணியின் சேனையை எதிர்க்கும்படி தன் சே
னைக்குக் கட்டளையிட்டான்.

"வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு."

என்னும் ஆன்றோர் வாக்கியத்தை மறந்து குரு
மண்டலத்தார் உள்ள விடத்திலேயே பலப்படுத்தும்
ஹேதுவைத் தேடிக்கொடுத்தனன்.

இரண்டு சேனைகளுக்கும் ஒரு பெரிய யுத்தம்
விளைந்தது. அக்பர் சேனை தோல்வியடைந்து சின்னா



பின்னமாகச் செய்யப்பட்டது. அஜாப்கான் உயிர்
தப்பிப் போவதே கஷ்டமாய் விட்டது. குருமண்
டல் பிரஜைகள் அதிகசந்தோஷ மடைந்தனர். ஆனால்
துர்காவதி இராணி புத்திக்கூர்மையுடையவளானமை
யின் இவர்களைப்போலக் களிப்படைய முடியவில்லை;
ஏனெனில் வெகு சீக்கிரத்தில் இன்னும் பெரிய சேனை
யுடன் முசல்மான்கள் குருமண்டலத்தை வந்து தாக்
குவார்கள் என்பது கைப்புண்ணுக்குக் கண்ணாடி
அவசியமில்லாததுபோல் வெகுதெளிவாய் அவள் மன
தில் புலப்பட்டது. அக்பர் சக்ரவர்த்தி குருமண்ட
லத்தைத் தன் சுயாதிகாரத்துக்குள்ளாக்க வேண்டு
மென்று எப்பொழுது தீர்மானித்துவிட்டனரோ
அவரைத் தடுக்க குருமண்டலத்தாருக்கு இயலா
தென்று துர்க்காவதி இராணிக்கு நன்றாகத் தெரிந்
திருந்தபடியால் சாமான்னிய ஜனங்களைப்போல
அவள் எப்படி குதூகலித்திருப்பள்?

அவள் எதிர்பார்த்தவண்ணமே ஒன்றரை வருட
த்துக்குள்ளாக அஜாப்கான் சேனையைப் பலப்படுத்தி
ஒரு பெரிய சைன்னியம் டெல்லி நகரினின்று அக்
பர் சக்ரவர்த்தியால் மத்திய இந்தியாவில் தனது பிர
தாபத்தையும் பெருமிதத்தையும் மறுபடி நிலைநாட்ட
அனுப்பப்பட்டது. இந்தச் சைன்னியத்தின் உதவி
யால் குருமண்டலத்தைச் செயித்து இராணியை
அரசிழக்கச்செய்து டெல்லி இராசியத்தோடு சேர்
த்துவிடும்படி அக்பர் சக்ரவர்த்தி அஜாப்கானுக்குத்
தாக்கீது அனுப்பினர்.

"என்னுயிருள்ளளவும் குருமண்டலத்தை
ஒருவரையும் கைப்பற்றவிடேன். அதை இரக்ஷிப்
பதில் என்னுயிரை விடுவனே யொழிய அன்னிய அர

சர்கள்கையில் ஒப்புவியேன் ” என்றுகூறி முன்போல
ஒருபெரியசேனையைச் சேர்த்து மொகலாயர் சேனையு
டன் யுத்தஞ் செய்ய தானே அச்சேனையை நடத்திச்
சென்றனள். இவளுடைய அதிர்ஷ்டத்துக்கு அஜாப்
கான் முன்போல அபஜயமடைந்து நாணமுற்றுச்
சேனைகள் திசைகள் எங்கும் துறத்தப்பட்டபடியால்
வென்னிட்டுப் படுகளத்தைவிட்டு ஓடிவிட்டனன்.

சண்டையில் துர்க்காவதி இராணியை வெல்வது
அசாத்தியமென அஜாப்கான் உன்னி இராஜதந்திரத்
தால் குருமண்டலத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று
எண்ணங்கொண்டான். பொருள் இச்சித்தவர்களுக்கு
ப் பொருள் கொடுக்கவும், இதனை விரும்பாதவர்களு
க்குள் கலகங்களுண்டாக்கவும் இன்னும் எந்தெந்த
மார்க்கங்களினாலும் சேனையிலுள்ள ஒற்றுமையை
உடைக்கவும் தனது வேவுகாரர்களைக் குருமண்டல
நாட்டுக் கோட்டைக்குள் செல்லும்படி யனுப்பினன்.
இந்தியாவில் நெடுங்காலந் தொடங்கி ஜனங்கள் இவ்
வித ஆசாபாசத்துக்கு வெகு சுலபமாக வசப்பட்டு
வந்திருக்கின்றனர். ஹிந்துக்கள் மற்றச் சாதியாரை
விட எவ்வளவோ புத்திசாலிகளென்றுபேர்பெற்றிருக்
கின்றார்கள். ஆனால் ஒருமைப்பாட்டில் மாத்திரம்
இவர்கள் நன்கு மதிப்புக்குரியராயில்லை. ஞானமா
னது இந்தியாவில் சிலரிடத்துமாத்திரம் இருந்து வந்தி
ருக்கிறதேயன்றி ஜனங்களிடத்தில் பரவியுள்ளதாகத்
தெரியவில்லை. வேத சாஸ்திரமும் வேறு கலைஞான
மும் யாக்ஞவல்கியர், வியாசர் மனு முதலிய மஹானு
பாவர்களால் உலகோபகாரமாக வெளியிடப்பட்ட
போதிலும் அவர்கள் பின் தோன்றியவர்கள் அந்த
ஞானம் ஜனங்களில் ஒரு பகுதியாரே பெறுவதற்கு



உரியவர் என்று எவ்விதமோ ஏற்பாடுசெய்து ஜனங்
களை அந்தகாரத்தில் அழுத்தி கர்மப் பிரவிர்த்தியில்
செலவிடுத்தமையின் ஜனங்களுள் பெரும்பான்மை
யோர் காமிய கர்மத்தில் விழைவுகொள்ளலாயினர்.
காமிய கர்ம விழைவுள்ளவர்களுக்குப் பொது நோக்கு
மங்குத லடையு மென்பதற் கையமுண்டாமோ. ஆத
லின் ஞானவிழி முற்றிலு மடைப்பட்டமையின் ஜனங்
கள் தாமசவயத்தராயினர். பொருளீட்டலே பிறவி
யின் பயனெனக் கருதி அதை அடைவதற்கு வேண்
டிய இரஜோகுணம் அவர்களைவிட் டொழிந்தமை
யின் இலஞ்சம் முதலிய கூடா வொழுக்கத்தால் செல்
வத்தைத் தேடத் தலைப்பட்டனர். குருமண்டல
ஜனங்கள் இவ்வித சுபாவத்தை யுடையவரென்று
அஜாப்கான் நன்கு அறிந்துகொண்டா னாகையின்
அவன் விடுத்த வேவுகாரர்கள் அவன் எண்ணத்தைப்
பூர்த்தி செய்துகொண்டு திரும்பி அவனிடம் வந்து
விட்டனர்.

மூன்றாம்முறை அஜாப்கான் குருமண்டலத்
தின்மேல் யடையெடுத்துச் சென்றனன். இதைக்
கண்ட துர்க்காவதி இராணி முன்போல ஒரு சேனை
சேர்க்கத் தலைப்பட்டனள். முன் நடந்தேறிய இர
ண்டு யுத்தங்களில் எவ்வளவு அன்புடனும், திடச்சித்
தத்துடனும் ஜனங்கள் சேனையில் சேரவந்தனரோ
அவ்வளவு ஆர்வம் இந்த முறை இல்லாதிருந்தது,
துர்க்காவதி இராணிக்கு அதிக மனவருத்தத்தை
விளைவித்தது. இஃதன்றியும் உட் கலகங்களையுங்
கண்டனள். ஆதலின் அவள் மனமுறிவடைந்தது.
இம்முறை யுத்தத்தில் தனது நாட்டை இழக்கவே
ண்டி வருமென்பது அவளுக்குக் காதலாகமலமெனத்

தோன்றியது. இருந்தும் பின் வாங்கினளோ. அபஜயமடைவோமென்று தனக்கு நன்றாய்த் தெரிந்தும் நாட்டை இரக்ஷிக்கும் யத்தனத்தில் உயிர்துறத்தல் மாக்ஷிமையெனத் தீர்மானித்து தன்னை விசுவசித்து உயிரை விடக் கூடியவர்களையும் தன்னைக் கைவிடார்களென்று தன் மனதில் தோற்றியவர்களாயுமிருந்த இராணுவ வீரர்களை ஒரு சிறு சைன்னியமாகச் சேர்த்துப் பதினான்கு வயதுள்ள தனது குமாரனையும் தன் பக்கலில் யுத்தஞ்செய்ய அழைத்துக்கொண்டு அஜாப்கானை யெதிர்க்கச் சென்றனள்.

சூரியோதயத்திலிருந்து சூரியாஸ்தமனம் வரையில் பெரிய யுத்தம் நடந்தது. துர்க்காவதி இராணியின் குமாரன் பலமான காயமடைந்து குதிரைமேலிருந்து விழவே அவனை அங்கிருந்த சில இராணுவ வீரர்கள் படுகளத்தினின்றும் கொண்டுபோய் விட்டார்கள். இராணியினிடத்தில் ஜனங்கள் ஓடி “அம்மா, இராணி உன் அருமைப் புதல்வன் சண்டையிலுற்ற காயத்தால் உயிர்விடுந் தறுவாயில் இருக்கின்றனன். அவனைப் பார்க்கப் போம்” என்று கூறினர். “நான் இப்பொழுது போகக்கூடாது, என்னைக் காணாவிடில் என்னுடைய படைகள் அவதைரியமுறும். அவன் இறந்தால் வீரசொர்க்கமடைவான், அவனை அங்கே கண்டு கொள்ளலாமென்று” இசைந்தனள். யுத்தம் வெகு மும்முரமாய் நடந்தது. கடைசியில் ஓர் அம்பு அவள் கண்ணில் உருவக் குத்தியது. அதனைப் பிடுங்கிவிட முயன்றும் அவளால் முடியவில்லை. இருந்தும் அவ்வீரத் தன்மையுள்ள மாது படுகளத்தைவிட்டுப் போகவுமில்லை முதுகுகாட்டிப் பின் செல்லவுமில்லை. தன் உடல் முழுதும் காயப்



பட்டபோதிலும் அவள் ஒரு பெண் சிங்கத்தைப்போல வீராவேசத்துடன் போர் செய்து நின்றனள். தன்னைப் பகைவர் பற்றிப்போகா வண்ணம் தன்னைச் சூழ்ந்திருந்த சில ராணுவவீரர்கள் தவிர ஏனைய போர்வீரர்கள் எல்லாரும் மாண்டு கிடந்ததைக் கண்டனள். தப்புவதற்கு வழியில்லை. பகைவர் கையில் அகப்பட்டுவிடுவோம் என்று அவளுக்குத் தோன்றிய பொழுது ஒருமுறை படுகளத்தைச் சுற்றிப்பார்த்து பிறகு தூரத்திலிருந்த குருமண்டல நாட்டின்மேல் திருஷ்டியைச்செலுத்தி, தான் செய்யப் புகுங்காரியம் இன்னதென்று தன்னைச் சுற்றி நின்றவர்களுக்குத் தெரியாமுன் தனது உடைவாளினால் தன்னுயிரை மாய்த்துக் கொண்டனள். இவளது சரீரம் மொகலாயர்கள் தொட்டுத் தீட்டுப்படாமற்படிக்கு விசுவாசமுள்ள இராணுவவீரன் ஒருவனால் தூக்கிக்கொண்டு போகப்பட்டுத் தகனஞ் செய்யப்பட்டதென்று சரித்திராதிபர்கள் கூறுகின்றார்கள். குருமண்டல் மகம்மதியர் வசமாகிவிட்டதென்பது கூறாமலே விளங்கும்.—

## ஜஸ்ரேஸ்வரி.

அக்பர் என்னும் மொகலாய சக்ரவர்த்தி டெல்லி நகரத்தில் ஏகபத்தியாத்தியம்பெற்று செங்கோலோச்சி வந்தநாளில் பங்காள தேசம் தவிர வட இந்தியாவிலிருந்த நாடுகளெல்லாம் அவனதிகாரத்துக்குட்பட்டிருந்தன. பங்காளதேசமென்பது இந்தியா தேசத்தின்

வடகிழக்கிலுள்ள ஒரு மாகாணம். இந்தத் தேசம் பட்டான் (Pathan) அரசரிடம் இருந்தது. அக்பர் டெல்லிநகரில் அரசு செலுத்திவந்த காலத்தில் சுலிமான் என்பவன் பங்காளத்துக்கு அரசனாயிருந்தான். இவனைத் தன் அரசுக்குட் படுத்த, அக்பர், முனிம்கான் என்னும் தளகர்த்தனை ஒரு பெரிய சைன்னியத்துடன் பங்காள தேசத்தைக் கீழ்படுத்த அனுப்பினான். சூலிமானுக்கும், முனிம்கானுக்கும் விளைந்த யுத்தத்தில் சூலிமான் மாண்டனன். அவனது குமாரன் டாட்கான் என்பவன் பங்காளத்துக்குத் தெற்கேயுள்ள ஓரிஸ்ஸா நாட்டுக்கு ஓடி ஒளித்துக்கொண்டான்.

மொகலாயர்கள் பங்காளத்தை நோக்கி வருவதைக் கண்ட சூலிமான் தன்னிடத்திலிருந்த செல்வ மனைத்தையும் பங்காளத்துக்குத் தெற்கேயுள்ள ஜெஸ்ஸூர் என்னும் நகருக்குக் கொண்டுபோய் விட்டான். இந்த ஊர் அரசிறை முதலிய பணத்துக்குரிய வேலை பார்த்துவந்த தனது அமைச்சன் வசித்துவந்த இடம். இந்த அமைச்சன் ஒரு பங்காளி. சூலிமான் என்னும் நபாப் அவனுக்கு ஒரு ஜாகீர் அளித்து விக்கிரமாதித்திய இராஜனென்னும் பட்டப்பெயர் அளித்தனன். இந்தப் பங்காளியின்மேல் இந்த நவாப்புக்கு அதிக விசுவாசமும் நம்பிக்கையுமிருந்தது. சமுத்திரக்கரையைச் சார்ந்த வங்கநாடுக ளெல்லாவற்றுக்கும் உண்மையில் இவனே அதிபதியாகவிருந்து வந்தான். ஜெஸ்ஸூர் என்னும் பட்டணம் இவனுடைய சமஸ்தான ஸ்தலமாயிருந்தது.

பதான்காரர்களுடைய இராஜ்ஜிய காலத்தில் பங்காளதேசம் உம்பிளிக்கைக்கடுத்த ஆளுகையில் (Feu-



dal system) அமர்ந்திருந்தது. இவ்வித ஆளுகையில் ஒவ்வொரு சிறு நாட்டரசனும் தன்னிஷ்டப்படி ஊரையாண்டு எல்லாவித அரசுரிமைகளையும் மேற்கொண்டு அனுபவித்து வந்தான். இதற்கு ஈடாக, தவறாமல் பதான் நவாப்புக்கு கப்பம் மாத்திரம் கட்டிவரல் வேண்டும். இந்த உம்பிளிக்கைக்கடுத்த ஆளுகையில் சிறு நாட்டதிபதிகள் பலமுறை கப்பங்கட்டத் தவறினதுமன்றி இராஜாதிகாரவிரோதிகளாகத்திரிந்து நவாப் அதிகாரத்தைப் பாராமரிக்கைப்பண்ணி ஒருவரோடொருவர் பகைகொண்டு சண்டை செய்துகொண்டிருந்தனர். இந்த அதிபதிகளைக் கிரமமாகக் கப்பங்கட்டும்படி செய்வதும், ஒருவரை ஒருவர் கொலை செய்யாமல் தவிர்ப்பதும் நவாப் சேனையின் பிரதமத்தொழிலாக இருந்து கொண்டு வந்தது.

சூலிமான் நவாப்பைக் கொலை செய்தபின்னர் அவனது குமாரன் டாட் நாட்டைவிட்டு ஓடிவிட்டான். அப்பொழுது பங்காளம், மொகலாயர் வசமாயிருந்தமையின், சிறு அதிபதிகள் கப்பங்கட்டாமலிருந்தனர். இதை வசூல் செய்ய மொகல் தளகர்த்தனுக்குச் சவகாசமில்லாமற் போய்விட்டது; ஏனெனில் அவன் ஓடிக்கொண்டிருந்த டாட் நவாப்பை அவன் ஓடுமிடந்தோறுஞ் சென்று அவனைப் பின் தொடர்ந்து அவனைப் பிடிக்கும் முயற்சியிலேயே நாட்களை கழித்துவந்தனன். இப்படி ஒருவருடமானபிறகு டாட் நவாப் மொகலாயர்கள் கையிற்சிக்கிக் கொல்லப்பட்டான். அவனது சைன்னியம் உடைபட்டுப்போயிற்று. அவனது தளகர்த்தனை கட்லுகான், சக்ரவர்த்தியுடன் சமாதானம் செய்து

கொண்டதினால் ஓரிசாவை ஆண்டுகொண்டிருக்க உத்தரவு பெற்றுக்கொண்டான்.

மொகல் பிரதியதிபதியாகிய இராஜா தோடர்மல் என்பவன் சிறு அதிபதிகளின் விஷயத்தில் கவனத்தைச் செலுத்தியபோது அவர்களெல்லோரும் தனக் கடங்காமையைக் கண்டனன்; மாங்கீர் என்னும் கோட்டைக்குள் பிரவேசித்து தன்னை இரக்ஷித்துக்கொள்ள நேரிட்டது. இந்துக்களும் பட்டான்களும் ஒன்றுகூடி கோட்டையை முற்றுகைபோட்டனர்; சுமார் ஒன்றரை வருஷகாலம் கோட்டையில் அடைபட்டிருக்க நேர்ந்தது. கடைசியில் இராஜா தோடர்மல், ஹிந்து அதிபதிகளைத் தந்திரமாய் தன் வசப்படுத்திக் கொண்டான். இவர்களின் உதவியால் படான்காரர்களைப் பங்காளத்திலிருந்து துரத்திவிட்டான். பங்காளமுழுமையும் கலகம் நீங்கி அமரிக்கை நிரம்பப்பெற்றது. ஹிந்து அதிபர்கள் அக்பரைத் தங்கள் சக்ரவர்த்தியாக அங்கீகரித்துக் கொண்டு பட்டான் நவாப்புக்குக்கப்பங் கட்டினதுபோல இராஜா தோடர்மல் மூலமாகக் கப்பஞ்செலுத்த ஒருப்பட்டனர். இராஜா விக்ரமாதித்தியனும் அவ்விதமே தானுஞ் செய்ய வாக்களித்து மொகல் பிரதிநிதிக்குப் பணிந்து, தன் ஜாகீரை யடைந்தனன். இந்த இராஜா விக்ரமாதித்தியன் சில ஆண்டு வெகு அமரிக்கையாகத் தனது ஆதிக்கியத்தைச் செலுத்தித் தனது குமாரனை ப்ரதாபாதித்யன்வசம் தன் நாட்டை ஒப்புவித்து நிர்யாணதசையையடைந்தான்.

அவனுக்குப்பின் பிரதாபாதித்யன் அதிக பராக்கிரம அதிபதியாயினன். அவனுக்கொரு மனைவி



இருந்தனள். அவளுடைய பெயர் இன்னதென்று தெரியாது. ஆயினும் அவள் ஜஸ்ரேஸ்வரி என்னும் நாமத்தால் பிரஜைகளெல்லாராலும் உணரப்பட்டு வந்தனள். இந்தப்பெயர் அவளது குலதெய்வத்தின் பெயராயிருந்தது. இந்தக் குலதேவதை இந்தக் குடும்பத்தின் ஆதி புருஷனுக்குப் பிரசன்னமாகி நன்னடக்கையும் சுசீலமும் இக்குடும்பத்தார் பரிபாலித்து வருமட்டும், தான் இக்குடும்பத்தை இரக்ஷிப்பதாகவும் இக்குணங்கள் நழுவக்கண்டால் குடும்ப இரக்ஷணையினின்று விட்டு அகல்வதாகவும், அப்படி அகன்றதற்கு அறிகுறி, அரண்மனைக்கடுத்த ஆலயத்தின்கண்ணுள்ள விக்கிரகத்தின் முகம் திரும்பிவிடுமென்று கூறினதாக ஒரு வதந்தியிருந்தது. ஆகவே அரண்மனையில் இரண்டு ஜஸ்ரேஸ்வரிகள் இருந்தார்கள்—ஒருத்தி பிரதாபாதித்தியன் மனைவி, இன்னொருமாது ஆலயத்தில் எழுந்தருளியிருந்த தேவி. முற்கூறப்பட்ட ஜஸ்ரேஸ்வரி அறுவகை விகாரம் பொருந்திய ஸ்தூல சரீரத்தினள்; பிற்கூறப்பட்ட ஜஸ்ரேஸ்வரி கற்சிலை உருவினை யுடையவளாகக் காணப்பட்டனள்.

பிரதாபாதித்தியன் அதிக பராக்ரமசாலியாயினன். இஃதன்றியும் அவன் அதிக கொடிய செயல்கள் புரிவதில் அதிக மனமுடையவனாயினன். நாட்டிலுள்ள கொடியோரைத் தன்னருகில் சேர்த்துக்கொண்டு நகரங்களையும் பட்டணங்களையும் கொள்ளையடித்து அக் கிராமங்களைப் புரிந்துகொண்டு அயல் நாட்டதிபதிகளிடத்திருந்து கப்பங்களை வாங்கிக்கொண்டான். போர்ச்சுகீஸ் ஜாதி கப்பற் பறிகார்களையும், ...மாகார தீவர்த்திக்களர்களையும் தன்னுடைய ...களையுடன் சேர்த்துக்

7819

கொண்டு பங்காள தேசத்தை ஓர் எல்லையிலிருந்து மற்றோரெல்லை வரைக்கும் கொள்ளையடித்து இம்சிக்கத் தலைப்பட்டான். மொகல் பிரதி அதிபதியாலும் பிரதாபாதித்தியனை அடக்கச் சாத்தியப்படாமற் போயிற்று. மொகல் பிரதி அதிபதியை நேருக்குநேரே வைத்து அக்பர் சக்ரவர்த்தியைத் தன்னரசனாக அங்கீகரிப்பதில்லையென்று கர்வத்துடன் உரைப்பானாயினன்.

அயல் நாட்டைக் கொள்ளையடித்து அந்நாட்டதிபதிகளைக் கொலை செய்து வந்தது போதாமல் தனது மாமனாகிய வசந்தராய் என்பவனையும் இம்சிக்க எண்ணங்கொண்டான். வசந்தராய் அதிகவயது முதிர்ந்தவன். எல்லாராலும் அன்புடன் பாராட்டப்பட்டுவந்தான். அவனிடத்தில் மரியாதை செலுத்தாதவர் ஒருவருமிலர். அவனைப்போல நல்லவன் பங்காளத்தில் காண்பது அரிது. பிரதாபாதித்தியன் நடவடிக்கை இவனுக்குக் கிஞ்சித்தும் பிடிக்கவில்லை. பிரதாபாதித்தியனை அவனது கூடாஒழுக்கத்தினின்றுந் திருப்ப எவ்வளவோ முயற்சி செய்தனன், அவனது மாமனாகிய வசந்தராய். கூரிய புத்தியமைந்ததும், இராஜதந்திர நிபுணத்தன்மையமையப் பெற்றதுமான வசந்தராயின் புத்திமதிகள் பிரதாபாதித்யனுக்கு காதில் நாராசங்காய்ச்சி யூற்றினது போலிருந்தன. தனது குடிகள் வசந்தராயை தங்கள் உயிருக்கும் இனியனாக நேசித்து வந்தார்கள் என்பது பிரதாபாதித்தியனுக்கு நன்றாய்த் தெரியும். அவன் சொல்லுக்கு மீறி நடவார்கள் என்று நன்றாய் உணர்ந்திருந்தான். ஆகையால் தன்னைத் தள்ளிவிட்டு எங்கே வசந்தராயை சிம்மாசனத்தி லேற்றிவிட்டுப் போகி



றார்களோவென்று அஞ்சி இந்த வயோதிகனை வசந்தராயைக் குடும்பத்தாருடன் கொன்றுவிடத் தீர்மானித்தான்.

இந்தப்பாதகச் சிந்தையை யோர்ந்த பிரதாபாதித்தியன்மனைவியும் தன்கணவனை அவனது துஷ்கிர்த்தியத்தினின்றும் விலக்க மிக முயன்றனள். கற்பு நிறைந்த மங்கையாதலின், தன் கற்பைக்காப்பதுமாத்திரம் தனது கடமையென மதியாது தன்கணவனை நல்லொழுக்கத்தில் நடத்திவைக்கப் பார்ப்பதும் தனதுகடமையெனச் சிந்தித்தனள்.

“ தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் ”.

என்று திருவள்ளுவ நாயனார் கூறியுள்ளார். அஃதாவது “ கற்பினின்றும் வழுவாமற் றன்னைக்காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றாற் பேணி இருவர்மாட்டு நன்மை யமைந்த புகழ் நீங்காமற் காத்து மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினுங் கடைப்பிடி யுடையாளே பெண்ணாவாள். ” பதிவிர்தா இலக்ஷணம் இத்தன்மைத் தென்று முற்றுமோர்ந்த பிரதாபாதித்யன் மனைவி, தங்கள் மாட்டு இதுகாறும் நிரம்பியிருந்த புகழ்நீங்காமற்காக்க வெகு துணிகரமான காரியத்தைச் செய்ய உன்னினள்.

ஆதிகாலத்தில் அரசர்களால் மிகுந்தமதிக்கப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வந்த ஒரு பூராதன வழக்கமிருந்தது. அவ்வழக்கம் இன்னும் பங்காள தேசத்தில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இவ்வழக்கத்தின்படி ஒரு சீமாட்டி தன் கக்ஷியைச்சாதிக்க வேண்டி ஒரு வீர

னுடைய புஜவலியைக் கோரும்பொழுது, அவ்வீரனுக் காகிலும் அல்லது வீரர்கள் கூடியிருக்குங் கூட்டத்திற் காகிலும் தனது கங்கணத்தை யனுப்புவாள். தனது வண்ணமகள்கையில் அக்கங்கணத்தைத் தந்து வீரர்கள் குழாத்துள் அதனை யெறியும்படி கட்டளை இடுவள். அக்கூட்டத்தி லிருக்கும் வீரர்களுள் ஒருவன் அக்கங்கணத்தை எடுத்துக் கொண்டு அதனை யனுப்பிய சீமாட்டியின் கட்டளைப்படி நடந்து, அவளது மனோரதத்தை ஈடேற்ற உயிருள்ளவும் அவளுக்குவேண்டிய உதவி புரிய பிரமாணிக்கத்துடன் வாக்குத்தத்தஞ் செய்வான்.

ஒரு நாள் பிரதாபாதித்திய இராஜா அரச சபையில் கொலுவீற்றிருக்குஞ் சமயத்தில், அவன் மனைவியினிடத்திருந்து ஒரு வண்ணமகள் அச்சபைக்குச் சென்று அங்கிருந்த யாவரும் வியக்குமாறு, கொலு மண்டபத்தின் மத்தியில் இராணியின் கங்கணத்தை எறிந்தனள். அரசசபையில் வீற்றிருந்த எல்லாரும் பிரதாபாதித்தியன் வதனத்தைக் கவலையுடன் நோக்கினர். அரசன் முகவாட்டமுள்ளவனாய் ஒன்றும் பேசாமல் அசைவற்றிருந்தான். கடைசியில் ஒரு வீரன் சபைமத்தியிலிருந்து எழுந்திருந்தான். இவன் சேனாதிபதி; இராணிக்குச் சகோதரன்; கங்கணம் விழுந்து கிடந்த இடத்திற்குச் சென்று தன்கையில் அதைக் கொண்டனன். பிறகு அரசனைப்பார்த்து "கங்கணம் நமது இராணியால் அனுப்பப்பட் டிருக்கிறது இராணி எதனை ஆதரிக்க வேண்டுகின்றனளோ அதனையான் அறிகிலேன். அவளது கணவனும், அவளது இரக்ஷிப்புக் குரியவனும், அவளுடைய பிரபுவுமான வீரிய முள்ள நமது



அரசன் கங்கணத்தை அங்கீகரிப்பாரென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் அசையாது வீற்றிருக்கிற படியால், அதனை அங்கீகாரஞ்செய்ய மனமிருப்பது போலத் தோன்றவில்லை; இச்சபையில் வீரன் ஒருவனுமில்லை என்னும் வசைச் சொல்லிற்கு இடங்கொடாவண்ணம், நான் கங்கணத்தை அங்கீகரிக்க லாயினேன். அவள் க்ஷியைச் சாகும்பரியந்தம் காக்கப் பிரதிக்ஞை செய்து வாக்குத்தத்த மளிக்கிறேன்" என்று அனைவருமறிய சேனாதிபதி கூறினன்

அரசன், முகத்தைச் சுளித்துக் கோபக்குறி காட்டினனேயன்றி, வேறொன்றும் பகர்ந்திலன். இராணியினிடமிருந்துவந்த வண்ணமகள் அதிக இனிமையானகுரலுடன் கூறுவாளாயினள். "இந்தக் கங்கணத்தை எந்த வீரன் அங்கீகரிக்கின்றனனோ, அந்தவீரன் வசந்தராய் இராஜாவை அவனது குடும்பத்துடன் இரக்ஷித்து, அவனுக்கு ஹானி செய்பவரை ஒறுத்து நிற்றல் வேண்டும். இதுவே நமது இராணியின்விருப்பம்; இஃது அவளது கட்டளையாகும்". "அப்படியே நடத்தப்படும்" என்று கங்கணத்தை அங்கீகரித்த வீரன் புகன்று தன்னாசனத்தை நோக்கிச் சென்றனன்.

அரசன் சபையை உடனே கலைத்துவிட்டு, தனது இடத்திற்கு ஏகினன். பிரதாபாதித்தியன் ஒருவருக்கும் பயந்தவனல்லன்; ஆனால் தன் மனைவி யிடத்தில் மாத்திரம் சிறிது அஞ்சுதலுடையவனா யிருந்தான். குரூரமான சிங்கத்துடன் பிணைக்கப்பட்ட ஒரு பயங்கரமான சிங்கப்பேடொத்தவளாயிருந்தாள், அவன் மனைவி. அவனைத் தன்னிடம் வரவழைத்து சரச

சல்லாபமாக வார்த்தையாடிப் பார்த்தனள், வாதாடி ஜெயிக்க முயன்றனள், கடுஞ் சொற்களால் கடிந்து உரைத்து அதட்டிப்பார்த்தனள், வசந்தராயைக் காப்பாற்றவேண்டுமென்று கொண்ட வெண்ணத்தை மாற்ற என்னென்னமோ தந்திரங்கள் செய்து பார்த்தனள். "வசந்தராய்க்கு விநாசகாலம் வந்துவிட்டது. அவன் மாண்டுபோகத்தான் வேண்டும்; இல்லாவிடில் நாம் சுகமாயிருக்க முடியாது" என்று பிரதாபாதித்தியன் பகர்ந்தான்.

"சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத றீது"

என்று ஆன்றோர் கூறியதை மனதில் உன்னி "நமக்குச் சுகமோ, சுகமில்லையோ, அவ்வளவு பெரிய பழி விளைவிக்குங் காரியத்தைச் செய்ய உன்னை நான் விடேன்" என்று தைரியத்துடன் தான் மேற்கொண்ட தொழில் தவறுதென்னும் நிச்சய புத்தியுடைய இராணி மொழிந்தனள்.

வயோதிகனான வசந்தராயைக் கொலை செய்வது அசாத்தியமெனக் கண்டபொழுது, நம்பிக்கைத் துரோகவாயிலாக தன் இஷ்டத்தை நிறைவேற்றும் மார்க்கத்தைத் தேடினான், பிரதாபாதித்யனான பாதகன். தனது மாமனிடஞ்சென்று அவன் கால்களில் பணிந்து, தான் செய்த குற்றங்களுக்கு அதிக மனநொந்தவனாய், தன்னை மன்னிக்கும்படி பல்லாயிரமுறை வேண்டிக் கொண்டனன். வசந்தராய் சுபாவத்திலே நற்குணமுடையவனாதலின் பிரதாபாதித்தியன் செய்த குற்றங்களுக்காக அவனை மன்னித்துப் பொறுத்தருளினன். வசந்தராய் இருந்த இடம் ஜெஸ்ஸூரிலிருந்து வெகுதூரத்தி லிருந்தபடியால் தன் அரண்மனைக்கு வந்து விருந்துண்ண பிரதாபாதித்தியன் தன் மாமனை யழைத்தான்.



பிரதாபாதித்தியன் தான் செய்த காரியங்களுக்கு அதிக அனுதாபப் பட்டவனாகத் தன்னைக் காண்பித்துக் கொண்டபோதிலும், அவனுடைய கருத்தைச் சந்தேகித்தவர் இரண்டுபேர். வசந்தராய்குமாரன் தன்கை வசத்தில் பத்திரமாயிருக்கக் கண்ட பின்தான், இராணி வசந்தராயை விருந்துக் கழைக்கச் சம்மதித்தனள். ஜெஸ்ஸூருக்குப் பிரயாணப்படாமுன் வசந்தராய் தன்னுடன் ஒரு புறாவைத் தூக்கிக்கொண்டு இந்தக் கபோதம் உன்னிடத்துக்குத் தனிமையாகத் திரும்பி வருமாயின் நான் இறந்துவிட்டதாகவும் அல்லது சிறையில் அடைக்கப்பட்டதாகவும் அறிவாயாக என்று தனதுமனைவியினிடம் சொல்லி, தன்னூரை விட்டு விருந்துண்ண ஜெஸ்ஸூருக்குச் சென்றனன். வசந்தராய் தன்னைப்பற்றியிருப்போர் சிலருடன் வழிநடந்து செல்லுகையில், பிரதாபாதித்தியன் நியமனத்தால், சதிக்காரர்கள் பதிவிருந்து, வசந்தராயைக் கொன்று விட்டனர். புறாவானது தப்பி தகுந்த காலத்தில் வசந்தராயிருந்த ஊர் போய்ச் சேர்ந்தது. இதனைக் கண்ட வசந்தராய்மனைவி, பிரதாபாதித்தியன் தனக்கும் தன்னுடைய குடும்பத்தாருக்கும் இடுக்கண் விளைவித்து ஹிம்சிப்பானென்றஞ்சி அரண்மனைக்குள்ளிருந்த தடாகத்தில் தனது குடும்பத்துடன் இறங்கி உயிர் துறந்தனள். வசந்தராயின் குமாரன் அவனது அத்தையாகிய இராணியின் வசமிருந்தமையின் உயிர்தப்பினான்.

இத்தகைய பாதகன் எத்தனை நாள் இராஜ்ய பரி

பாலனம் புரிந்து வருவான். அக்பர் சக்ரவர்த்தியின் தளகர்த்தர்களுள் அதிக சிறப்புவாய்ந்திருந்த இராஜமான் சிங் என்பான், ஜெஸ்சூர் நாட்டரசனான பிரதாபாதித்தியனுக்குப் புத்திவரச் செய்யும்படி ஒரு பெரிய சைன்னியத்துடன் அனுப்பப்பட்டான். அந்தத் தளகர்த்தன் கங்கைக்கரையிலிறங்கி, மற்ற அதிபதிகளின் உதவியைப் பெற்றுக் கொண்டு ஜெஸ்சூர் நாட்டைத் தாக்கச் சென்றனன். நகரத்தண்டை பாசறை செய்துகொண்டு பிரதாபாதித்தியனுக்கு ஒரு தூதன் வசம் பர்மான் (அஃதாவது மன்னிப்பு கடிதமும் அதை நவாப் அங்கீரிக்கும் கடிதமும்) ஒரு தூக்குக்கயிறும், கத்தியும் அனுப்பினன். பிரதிபாதித்தியன் அந்தப் பர்மானைத்துண்டுத் துண்டாகக் கிழித்தான் ; பட்டாகத்தியையெடுத்துக்கொண்டு தூக்குக்கயிறைத் திருப்பிவிட்டான். “உன்னுடைய தளகர்த்தனிடம் இந்தத் தூக்குக் கயிறைத் தன்னுடைய எசமான் கழுத்தில் மாட்டும்படி கூறுவாயாக” என்று தூதனிடம் மறு உத்தரம் உரைத்தனுப்பினான்.

ஆகையால் சண்டை துவக்கப்பட்டது. பிரதாப் 52 ஆயிரம் வாள்வீரருடனும், 30 ஆயிரம் வேல் வீரருடனும், 10 ஆயிரம் குதிரைப்படையுடனும், 200 ஆனைகளுடனும், 100 பீரங்கிகளுடனும் படுகளம் போய்ச்சேர்ந்தான். இஃதன்றியும் போர்ச்சுகீஸ் கப்பற்பறிகாரர்களும் பர்மாகார தீவர்த்திக் கள்ளர்களடங்கிய ஒரு பட்டாளமும் அவனை வந்து சேர்ந்தன. பிரதாப் இந்தச் சேனையின் பெரும்பாகத்துடன் சென்று சண்டைக்கழைத்தனன். காலையிலிருந்து மாலை வரைக்



கும் யுத்தம்நடந்தது. அக்பர் சேனையைப் பின்னடையச் செய்து காலாட்படைகளை அல்லோகலப் படுத்தினான். தனக்கு வெற்றிவருவது திண்ணமாக யிருந்தது ; அத்தருணத்தில் தன்னுடைய சேனையில் ஒரு குழப்பம் உண்டாயிற்று. இராணுவ வீரர்கள் தங்கள் தங்கள் நிலைகளைவிட்டு எல்லாப்பக்கமும் இரிந்தோடத் தலைப்பட்டனர். பிரதாப் கொடுங்கோன் மன்னன் இதற்குக் காரணம் தெரியாது மயங்கினன். பிறகு விசாரித்தபொழுது “ஜஸரேஸ்வரி போய்விட்டாள்” என்று விடைபகர்ந்தனர். இந்தவிடையின் கருத்து புலப்படாது “என்னுடைய மனைவியா இறந்து விட்டனள்” என்று ராஜன் வினவினன். “அல்ல, மஹாராஜாவே, நமது மாக்ஷிமைதங்கிய தேவதை நம்மைவிட்டு அகன்றுவிட்டாள்” என்று யாரோ மாறுத்தர மளித்தனர்.

எப்போது நன்னடக்கை ஜெஸ்ஸூர் நாட்டைவிட்டகலுமோ அப்போது ஜஸரேஸ்வரிதேவி ஊரைவிட்டுப் போய்விடுவாள் என்று ஒரு சாம்பிரதாயத்தை ஜனங்கள் நம்பிவந்திருந்தார்கள் என்று முன்னமே கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தேவி தன் முகத்தை திருப்பிக்கொண்டாள். அதனால் நாட்டைக் கைவிட்டனள் என்று ஒரு வதந்தி சேனையில் பரவியது. இனிமேல் அபஜயமேதவிர ஜயமென்பதைக் கனவிலும் கருதுதல் கூடாது என்று இராணுவ வீரர்களெல்லோரும் மனமறுகி எல்லாப் பக்கங்களிலும் ஓடத் தலைப்பட்டனர். இது தவறெண்ணம் என்று தனது சைனியத்துக்குத் தெரிவிக்க, பிரதாப் அதிக முயன்றும் அசக்தனாயினன். தன்னுடைய சைனியத்தை ஒன்று கூட்ட

இயலாதபோது மரம்போல் ஒன்றுந் தோன்றாது நின்று
விட்டான். இத்தருணம் பார்த்துப் பகையாளியின் குதி
ரைப் பட்டாளம் வெடுக்கென ஓடிவந்து பிரதாபாதித்தி
யனைச் சிறைப்படுத்தினது.

இவ்விதம் ஜயமடைந்த இராஜமான்சிங் ஜெஸ்
ஸோர் நகருக்குட்செல்ல யத்தனித்தான். அக்கோட்டை
வெகு சாமர்த்தியமாகக் காக்கப்பட்டதைக் கண்ட
போது அவன் அதிக வியப்படைந்தான். விசாரித்த
பொழுது, இராணி தளகர்த்தத்தன்மையை வகித்து,
தனது தேச சுவாதீனத்தின் நிமித்தம், கோட்டையைப்
பாதுகாத்து நின்றனள் என்று தெரிந்துகொண்டான்.
கோட்டையை யளிக்கும்படி கேட்க ஒரு தூதனை
யனுப்பினான்.—"சக்ரவர்த்தியின் சேனைகளை எதிர்த்
துக் கோட்டையை இரக்ஷிப்பது வீணான இரத்தக்களறி
யை யுண்டாக்குமே யொழிய வேறுபிரயோஜனம் சித்தி
யாது. அஃது எனக்கு நன்றாகத்தெரியும்; ஆயினும் என்
னுடையபட்டணத்தைக்கொள்ளை அடிப்பதில்லையென்றும்
என்னுடைய குடிகளை எவ்வித இம்சைக் குட்படுத்துவ
தில்லை யென்றும் இராஜமான்சிங் வாக்களிக்கவேண்டும்.
இதுவன்றி வேறொரு வேண்டுகோளும் உண்டு. அஃது
யாதெனில் எனது மணாளன் உயிருடனிருந்தால் யான்
அவரைப் பின்தொடர்ந் திருக்கவும் உத்தரவு தரவேண்
டும். இராஜமான்சிங் ஹிந்துவாதலால் நான்கேட்கும்
இந்தவேண்டுகோள் ஹிந்து தர்மத்துக்குப் பொருந்
தினதாகையால் இதனை யளிப்பதற்கு ஆக்ஷேபனை யிருக்
கக் கூடாது. இவை யாவும் அவருடன் சொல்லு. அவர்
ஒத்துக்கொள்ளாவிடில் நாங்கள் சண்டைசெய்து யாவ



ரும் நிர்மூலமாகிப்போய் மொகலாயர் கொடுமைக்கு
ஆளாகுவதைத் தவிர்ப்போம். நான் கேட்டயாவையும்
அளிக்கச் சம்மதித்தால் கோட்டையை ஒரு எதிரிடை
யின்றி தந்து விடுவேன்" என்று விடைபகர்ந்து தூத
னைப்போக விடுத்தனள்.

இராஜாமான்சிங் இவ்வேண்டுகோள்களை யளித்
தானென்று சொல்லவும் வேண்டுமோ. இராணி
தானும் சிறைப்பட்டுக்கணவனுடன் டெல்லிக்குப் போக
லாயினள். தனது கணவன் ஒரு பெரிய இருப்புப்
போனில் அடைப்பட் டிருந்தபடியால், வழியில் காசி
யண்டை இறந்து விட்டான். அவனது மனைவியும்
உடன் கட்டையேறி உம்பருலகம் போயினள்.

# ஜோட்பூர் இராணி.

இந்துதேசத்தைப் படையெடுத்து வந்த ஜாதியா
ருள் மொகலாயர் என்னும் ஜாதியார் ஒருவர். இவர்
மகமதிய மதத்தைச் சேர்ந்தவர். மகம்மதிய அரசர்
களுள் அக்பர் மிகவும் சிறந்தவர். இவர் இயற்கையி
லேயே நல்ல ஞானமும் ஒவ்வொரு விஷயத்தையும்
நுட்பமாக ஆராய்ந்தறியும் சக்தியும் உள்ளவர். இராஜ
புத்திரர்கள் இவருடன் நட்பு பாராட்டி வந்தமையால்
அதிக அதிகாரத்தை யடைந்து, அக்பர் இராஜரீகத்தில்
சுகமாய் வாழ்ந்து வந்தார்கள். இந்த நட்பால், அக்பர்
ராஜபுத்திர ஸ்திரீகளை மணம் புரிந்தார். இந்த இராஜ
புத்திர மனைவியர்களுள் ஒருத்தி உதரத்தில் ஜிஹாங்கீர்

என்னும் புதல்வன் உதித்து அக்பர் சக்ரவர்த்திக்குப் பின் சிம்மாதன மேறினான். இவனும் தன் தந்தை போல் அனேக இராஜபுத்திர ஸ்திரீகளை மணம் புரிந்தான். இந்த இராஜபுத்திர ஸ்திரீகளுள் ஒருத்திவயிற்றில் பிறந்த ஷாஜிஹான் என்பான் ஜிஹாங்கீர் பின் செங்கோலோச்சத் தலைப்பட்டான். ஷாஜிஹானுடைய தாயார் ஒரு ரஜபுத்திர ஸ்திரீ. அவர் தந்தையும் ஒரு விதத்தில் இராஜபுத்திரர். ஆகலால் அவரைத் துருக்கிய ரென்று சொல்லாமல் ரஜபுத்திரரென்று சொல்வது பொருத்தமாகும். மற்ற மொகலாய அரசர்களுடைய அரசாட்சியைக் காட்டிலும் அவருடைய அரசாட்சியே மிகப் பெருமை வாய்ந்தது. அவர் கி. பி. 1627௵ முதல் 1658௵ வரையில் அரசாண்டார். அவர் அரசராக இருந்த முப்பது வருஷ காலத்துக்குள் பற்பல அழகான அரண்மனைகளையும், கோரிகளையும், பொதுமண்டபங்களையும் நூதனமாகக் கட்டி முடித்தார். இவருக்குப் புத்திரர்கள் நால்வர். நான்கு பேர்களும் நான்கு விதமான குணங்களையுடையவர். மூத்த குமாரன் பெயர் தாரா; அவனுக்கு நேரிளையோன் ஷூஜா வென்னும் பெயருடையோன்; மூன்றாம் புதல்வன் விக்ரகங்களைத் தகர்ப்பதில் பிரியமுடையோனான ஔரங்கசீப்; அவனுக் கிளையோன் மூராத் என்போன்.

இவர்கள் தந்தையான ஷாஜிஹான், டெல்லி நகரில் சக்ரவர்த்தியாய் விஜயஞ் செய்திருந்த பொழுது, அனேக சிற்றரசர்கள், இவனது ஏகாதிபத்தியத்தை அங்கீகரித்து, இவனுக்குக் கப்பங்கட்டிக்கொண்டு வந்தனர். அச்சிற்றரசருள் ஜோட்பூர் இராஜாவான ஜெஸ்



வன்ட் சிங் என்பவன் அதிக பராக்ரமசாலியாக மதிக்கப்பட்டுவந்தான். டெக்கான், தேசத்தை ஷாஜிஹானுக்குப் பதிலாக அரசாண்டுவந்த அவனது குமாரன் ஔரங்கசீப், தான் சக்ரவர்த்தியாகும் நிமித்தம் தனது சகோதரர்கள் இருவரைக்கொன்றனன். மூன்றாவது சகோதரனான ஷூஜா இவன்கையிற் சிக்காமல் அஸ்ஸாம் என்னும் நாட்டுக்கு ஓடிவிட்டனன். அவனாண்டுவந்த வங்காளத்தை ஔரங்கஜீப்பு கைப்பற்றிக்கொண்டு தனது தகப்பனாகிய ஷாஜிஹானைச் சிறைப்படுத்த டெல்லி நகரை நோக்கிச் சென்றனன்.—

ஔரங்கஜீப் கருத்தையுணர்ந்த ஜெஸ்வன்ட் சிங் ஒரு பெருஞ் சேனையுடன் அவனை எதிர்க்கலாயினன். ஔரங்கஜீப் கொண்ட கருத்து அடாதது என்று தெரிந்தமையாலும், தனது சக்ரவர்த்தியாகிய ஷாஜிஹானுக்கு உதவிபுரிவது அவனுடைய பிரதம கடமையென மதித்தமையாலும் ஔரங்கஜீப்பை டெல்லி நகருக்கு வரவொட்டாமல் ஜெஸ்வன்ட்சிங் தடுத்து நின்றனன். நர்மதா தீரத்தண்டை ஒரு பெரிய யுத்தம் நேரிட்டது. மாலை நேரத்துக்குள்ளாக ஆயிரக் கணக்கான வீரர்கள் மாண்டு போயிருந்ததை ஜெஸ்வன்ட் சிங் கண்டான். தன்னுடைய நகருக்குத் திரும்பிச் செல்ல நேரிட்டது. அதிவியாகூலத்துடன் ஜோட்பூருக்குத் திரும்பிவந்தான்; ஏனெனில் தனது அபஜயத்தால் உண்டான வெட்கத்தையும் அவமானத்தையும் இராணி சகியாது துக்கமடைந்து கோபமடைவாள் என்று தனக்கு நன்றாய்த் தெரிந்தது.

"படையெடுத் தமர்க்கட் சாருமோர் வீரன்
பகைஞரைச் சயங்கொளா விடினும்
விடையெனப் பொருதாங் கிறத்தல்."

உண்மை வீரன் அனுஷ்டிக்த கருமமென்று இராணி மதித்தவளாகலின், தனது தலைவன் அபஜயமடைந்து உயிருடன் வீட்டுக்குத்திரும்பி வந்திருக்கிறானென்று இராணி கேட்ட மாத்திரத்தில், அதிக வெட்கமுற்று ஆராக்கோப மடைந்து அவன் நகருக்குள் பிரவேசிக்காவண்ணம் நகர்வாயிலை மூடி விடும்படி கட்டளையிட்டனள். படுகளத்திலிருந்து புறங்கொடுத்தோடி வந்தவன் ஜோட்பூர் இராஜாவாகவும், மோவர் தேசத்து அதிபதியின் மருமகனாகவும், எனது கணவனாகவும் இருக்க முடியாது; வந்தவன் வேறெந்தப் புருஷனாகவோ இருக்கவேண்டும்; எனது தலைவன் இரணகளத்தில் இறந்திருக்கவேண்டும். அபஜயப்பட்ட பிறகு அவமான மடைந்து அவன் உயிரோடு மீண்டும் இங்கு வரமாட்டான். ஆகையால் ஒரு காஷ்டத்தை உண்டு பண்ணுங்கள், நான் அதின்மேல் ஏறி அக்னி தேவதைக்கு இரையாகி விடுகிறேன் என்று சில சமயம் இவ்வாறு கூறுவள். இம்மாதிரி செய்வதொன்றுந் தெரியாது தன் கணவனைப் பார்க்காமல் சில நாள் கழித்தனள். கடைசியாக அவனைப் பார்க்கச் சம்மதித்தனள். நகரக்கதவுகள் திறக்கப்பட்டன. அரசன் இவளெதிரில் வந்தான். இவளது கோபம் அடங்கியபின் அவனுடைய தேகத்திலுண்டாயிருந்த காயங்களைச் சொஸ்தப்படுத்தும் பணிவிடைகளைச் செய்து அவனையும் போஷித்து வந்தனள்.



ஜோட்பூர் அரசன் எல்லாச் சிற்றரசரிலும் மிகு பாராக்கிரமசாலி. அவன் தோல்வியடைந்ததைக் கண்ட மற்ற அதிபதிகள் ஔரங்கஜீப்பை எதிர்த்து நிற்கவில்லை. ஆதலால் ஔரங்கஜீப் நேராக டெல்லிக்குச் சென்று தன் தகப்பனைச் சிறைப்படுத்தி சிங்காதன மேறினான். இவ்விதம் சக்ரவர்த்தியான ஔரங்கஜீப் ஜெஸ்வன்ட் சிங்கை ஒழித்துவிட இலக்கு வைத்தான். இவன் உயிரோடிருக்கும் வரையில் தனக்கு இடையூறுண்டாக்குவன் என்று பயந்தவனாய் இவனைத் தொலைக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தனன். இந்தியாவின் மேற்கெல்லையிலுள்ள ஆப்கனிஸ்தானம் என்னும் பிரதேசத்துக்கு முக்கிய பட்டணமான காபூலில் ஒரு பெருங்கலகம் நேரிட்டது. இதனை அடக்குவதற்கு ஒரு பெரிய சைன்னியம் அனுப்ப நேரிட்டது. அதற்கு ஒரு தக்க தளகர்த்தனைத் தெரிந்தெடுப்பதுபோல ஜெஸ்வன்ட் சிங்குக்கு நிருபம் அனுப்பினான். இந்த நிருபத்தில் ஜெஸ்வன்ட் சிங்கை அதிகம்புகழ்ந்து சைனியத்துக்குத் தளகர்த்தனாக வேண்டிக்கொண்டனன். தன் தகப்பனைச் சிறையிலாழ்த்திய ஔரங்கஜீப் மகாபாதகன் என்று ஜெஸ்வன்ட் சிங்குக்குத் தெரிந்த விஷயமே. தொலைதூரமிருந்த தேசத்துக்குத் தன்னை யனுப்புவதற்கு ஏதோ ஒரு கருத்துவைத்தத தான் இருப்பானென்று பெருஞ் சங்கையு முண்டாயது. தர்ம சங்கடத்திற் குட்பட்ட ஜெஸ்வன்ட்சிங்கு யாதுசெய்வான்? தனது பிதாவைச் சிறைப்படுத்திய கம்ஸன் பட்டபாடு ஔரங்கஜீபும் படுவான். இதற்கு ஐயமின்று. ஔரங்கஜீப் ஏதோ ஒரு

கெட்ட யெண்ணத்துடன் நிரூபம் அனுப்பியிருப்பதால் போவது சரியல்ல எனத்தீர்மானிப்பது அறிவுடையோர் இயல்பாகாது; ஏனெனில்,

“ இணையின் ஞான பூரணன் முழுதுணர்ந்தமைத்
திட்டவாறல திங்கே
யணைவுறுதொருதீ தெமக்கவன் றரி
ஞர் தடுப்பவர்...........”

என்னும் நெஞ்சுர முடையோனாதலின் ஜெஸ்வண்ட் சிங், வருந்தீங்குக்கு வெருவுதலடைந்திலன். இஃதன்றியும், படைக்கு அஞ்சாமையும், இராஜ விசுவாச துரோகங்களை ஒறுத்தலில் கடமைப்படுவதும், தர்ம ஸ்தாபனத்தில் உயிர் விடுதலும், சுத்த வீரன் இலக்ஷணமாதலின், சக்ரவர்த்தியின் வேண்டுகோளுக்கிணங்காவிடில் உலக அபவாதத்துக்கு உட்பட வேண்டிவருமே என்று ஜெஸ்வண்ட் சிங்கு அஞ்சினான். மேலும் சக்ரவர்த்தியின் ஆக்கினைக்கு அடங்குதல் முக்கியக் கடமையாகலின் அக்கடமையைப் பலாபலம் நோக்காது செய்யவேண்டு மென்று கீதாசாரியர் திருவாய் மலர்ந்திருப்பதை மனதிற்கொண்டு, தளகர்த்தத் தலைமையை வகித்து காபூலுக்குச் சென்று கலகத்தைக் கடிந்து வருவதே உசிதமென ஜெஸ்வண்ட் சிங் எண்ணினான். அஃதன்றி எண்சாண் உடம்பை ஓம்புதலிலே நோக்கம் வைத்து கிருமிபோல் உயிர்துறப்பதற்கு அஞ்சுவது வீரனுக்கு அடாது. இம்மையில் இடறு வாய்ந்து மறுமையில் சுகமுமின்றிய நடக்கையை அவலம்பிப்பதைப் பார்க்கினும், பலாபல நோக்கின்றி கடமையைப் புரிந்தால் கடவுள் கிருபை வாய்க்கு



மென்று இவ்வாறு சிந்தித்து காபூலுக்குச் செல்லச் சம்மதித்தான்—ஜெஸ்வண்ட் சிங் என்னும் அரசன்.

அப்பொழுது இராணி என்ன செய்தனள். தன் கணவனைப் போக வொட்டாது கண்ணீர் விட்டழுதனளா? தானும் தன் கணவனைப் பின்தொடரத் தயாராயினள். இதற்குக் கணவன் முதலில் சம்மதிக்கவில்லை. “தெய்வந்தொழா அள் கொழுநற்றொழு தெழுவாள்” என்று ஆன்றோர் கூறிய வண்ணம் இவள் கணவனைக் கடவுளெனப் பாவித்துவந்து, அவன் தூங்கியபின் தான் உறங்கச் சென்று, அவன் விழிக்குமுன் தான் எழுந்து, அவனை நமஸ்கரித்து இல்லறத்தை நடாத்துஞ் சுபாவ சித்தத்தளானமையின், தன் கணவனை எங்ஙனம் விட்டுப் பிரிந்திருப்பள்? “நீங்கள் இருக்கு மிடத்திலே நான் இருப்பேன். உங்களுக்கு உற்ற உயிர்த்துணைவி அல்லளோ நான். ஒருகாலும் உங்களை விட்டுப் பிரிந்திரேன். நீங்கள் அரண்மனையில் வசிக்கும் வரையில் தான் உங்களுடன் இருப்பேனென்று யான் உங்களுக்கு மணமாலை சூட்டவில்லையே! நீங்கள் எங்கே யிருந்தாலும் உங்களுடன் இருப்பது எனக்கு வாழ்வு. அதுவே எனக்குச் சுகம். என் பிராண நாதர் இருக்கும் பாசறையும் எனக்கு அரண்மனையாகும். ஆதலின் நீங்கள் என்னை இங்கே யிருக்கச் சொல்லக்கூடாது. நீங்கள் எங்கே யிருந்தாலும் அங்கே யானும் இருந்து உயிர் துறப்பேன்” என்று இராணி தன் தலைவனிடத்தில் சொல்லலுற்றனள். இவை ஸ்ரீ ராமபிரான் கானகத்துக்குச் சென்றபோது சீதாபிராட்டி இயம்பிய காரணங்களைப்போ லிருந்தமையின், அவற்றிற்கு எதிர் கூற

அசக்தனாகி இராணியைத் தன்னுடன் இட்டுக்கொண்டு போக ஜெஸ்வண்ட் சிங் ஒருப்பட்டான். கல்வியில்லாத தலைவியாயிருந்தால் இவ்வித சிறந்த வாக்குவாதம் நேரிடாதன்றோ. தலைவியும் தலைவனைப்பிரிந்து தனிப்பதற்கும் நேரிடுமன்றோ. ஆதலின் கல்வி கேள்விகளில் நிறைந்த மனைவியே இல்லறவியலை நடத்தத் தக்கவளென்று கூறாமலே விளங்கும்.

ஜெஸ்வண்ட் சிங்கும், அவன் மனைவியும், தங்கள் குமாரனாகிய ப்ரித்தி சிங் என்பவன் வசம் இராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு அதிக வல்லமையும் வீரமும் பொருந்திய பட்டாளங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு ஆப்கனிஸ்தானத்தை நோக்கிச் சென்றனர்.

இராணி ஸ்திரீயைப் போல் தன்னை மதிக்கவிட்டவளல்லள். தான் ஒரு இராணுவ வீரன் உடுப்பை உடுத்திப் பசாறைக்குரிய கடிய வாழ்நாளுக்குத் தன்னை மனதார உட்படுத்திக்கொண்டனள். இவ்விதம் அனேக கஷ்டங்களை யனுபவித்துக்கொண்டு, தன் கணவன் பக்கவில் குதிரைமீது சவாரி செய்துகொண்டே ஆப்கனிஸ்தானத்தைக் கிட்டினர். அதில் இராஜத் துரோகிகள் நிறைய இருந்தமையைக் கண்டனர். பிரயாண கஷ்டத்தால் நேரிட்ட தேக அயர்ச்சிக்குச் சற்று இளைப்பாற சாவகாசமில்லாமற் போயிற்று. அவ்வூர் குளிர், அபரிமிதமாக யிருந்தமையின், சகிக்க முடியாமலிருந்தது. ஊரெங்கும் மூடுபனியாலும் பனிக்கட்டியினாலும் நிறைந்திருந்தமையின், காரியமியற்றக் கஷ்டப்பட்டனர். தங்களைச்சுற்றி யிருந்தவர்கள் நாகரீக மற்றவர்களாகவும் அறக் கொடியவர்களாகவும் இருந்தமை



யின், அவர்களை யடக்குவது பாகீரதப் பிரயத்தனமாகத் தோன்றினதுமன்றி நித்திய கண்டம் பூரண ஆயுசாக வாழ்நாளைக் கழிக்க நேரிட்டது. உண்ணும் உணவுக்கே கஷ்டம் நேரிட்டதெனின், அவர்கள் பட்ட பாட்டை நாவால் நவிலற்பாலதோ. இவ்வித கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு ஒரு மனிதன்சாயை, அவனை விட்டுப்பிரியாது உடன் செல்கின்றதுபோல், ஜெஸ்வண்ட் சிங்கை விட்டுப்பிரியாது, அவனது மனைவி, பக்கலிலிருந்தே பகைவர்களுடன் போர்புரிந்து வந்தனள். இராணியினுடைய சௌரிய பராக்கிரமும் அவளது துணிகரமும், கஷ்டத்தைப் பொறுக்கும் சிறந்த சுபாவமும், திடவிக்ரமமும் சிறந்த இராஜபுத்திரர் வீரர்களையும் நாணச் செய்தன.—

ஐயோ! இவ்வளவு கஷ்டப்பட்டும் ஜெஸ்வண்ட்ஸிங் உயிருடன் நெடுநாளிருக்க இயலாமல் போயிற்று. அவனுடைய குமாரனாகிய ப்ரித்திஸிங்கை ஔரங்கஜீப் டில்லிக்கு வரவழைத்து அங்கே அவனை விஷமூட்டி மடியவைத்தனன். ஜெஸ்வண்ட் ஸிங் காபூலை விட்டுத் திரும்பி வரவொட்டாவண்ணம் அங்கே தன்னால் ஏற்படுத்தப்பட்ட கொலைக்காரர்களால் ஜஸ்வண்ட் சிங் உயிரை ஔரங்கஜீப் மாய்த்து விடச் செய்தனன். இஃதன்றியும் ஜஸ்வண்ட் சிங்கை அவனது குடும்பத்துடனே நிர்மூலப்படுத்தவேண்டுமென்பதே ஔரங்கஜீப்பின் பூர்ண வெண்ணமாயிருந்தது.

கணவனை இழந்த காதலி அன்னிய ஊராகிய ஆப்கனிஸ்தானத்தில் என்ன செய்வாள்? தனது அழிவை விளைவிக்கக் கருத்துக்கொண்டிருந்த ஔரங்க

ஜீப்பு சிப்பந்திகளால் சூழப்பட்ட இராணியின் மனம் எத்தன்மை நிலைமையி லிருக்குமென, யூகிக்கத் தக்கதேயன்றி மொழிகளால் தெரிவிக்க இயலாது. தன் கணவன் இறந்தபொழுது அவனுடன் உடன் கட்டையேறி தன் னுயிரையும் மாய்த்துக் கொண் டிருப்பள். அவள் அப்பொழுது கற்பவதியா யிருந்தமையின் அவ்வாறுசெய்ய இயலாமற் போயிற்று. ஆகையினால் தன்னிடம் விசுவாசம் வைத்திருந்த இராஜபுத்திர வீரர்களுக்குத் தளகர்த்தத் தன்மையை தான் வகிக்கலாயினள். இந்தியாவை நோக்கித் திரும்பச் சாத்தியப் படும்வரையில் வெகு சாமர்த்தியத்துடன் அப்கானியர்களையும் ஔரங்ஜீப் ஆட்களையும் நெருங்க வொட்டாமல் தடுத்து வந்தனள்.

இராணி சில நாட்களுக்குள் ஓர் ஆண் மகவை ஈன்றனள்.

ஆசன மழை பொழிய இல்லாம் வீழ

* * *

இத்தன்மையான பொறுத்தற்கரிய இடுக்கண்வயத்தளாயினள்-கல்வி கேள்விகளினால் நிறைந்த இராணி. இவையாவும் கடவுள் சோதனை யென மதித்தவளாதவின் இராணி சற்றேனும் நைந்தவளல்லள். கஷ்டங்கள் அதிகரிக்க, அதிகரிக்க அவளது நற்குணங்கள் வெகு பிரகாசத்துடன் உள்ளிருந்து கிளம்பின. அவளது பிரவேசத்தைக்கண்டு வீரர்களும் பார்த்து அஞ்சத் தலைப்பட்டனர். குளிராலும், சக்ரவர்த்தி சதியாலும், பட்டினியாலும் பீடிக்கப் பட்டிருந்த இராஜபுத்திர வீரர்கள், சிங்கக்குட்டிகளைப்போல உதும்பி தங்கள் ராணியின் பக்க



வில் இருந்து மொகலாயர்களையும் ஆப்கனியர்களையும் வெருட்டி நின்றனர். பகைவர் தங்களை யணுகாமல் இவ்வாறு தடுத்துக்கொண்டே இந்தியாவுக்குள் பிரவேசித்து பிஷாவர் என்னும் நகரை யணுகினர். இங்கே இராணியைப் பத்திரமாய்த் தங்கள் நாட்டுக்கு அழைத்துக் கொண்டு போகும் நிமித்தம் வந்திருந்த சில இராஜபுத்திர வீரர்கள் வந்து சேர்ந்தனர். பிஷாவரிலிருந்து டெல்லி நகருக்கு அதிக கஷ்டமின்றிப் போயினர். ஆனால் ஔரங்கஜீப்பின் சூழ்ச்சியால் அந்நகரை விட்டுச் செல்வது மிகு கஷ்டமாய் விட்டது. பாதகனான ஔரங்கஜீப் இராணியீன்ற சிசுவைத் தன்னிடம் விட்டுப் போகும்படி அதிகாரத்துடன் கேட்டான். இராணி இதற்கு இணங்குகின்றவளா?

“பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற”.

என்று உலகமேத்தும் நாயனார் கூறியவண்ணம் ஒருவன் பெறும்பேறுகளுக்குள் மக்கட்பேறே யாதினும் சிறந்ததாகையால் அப்பேற்றை ஒருவன் கைவசமாகப் பார்ப்பனோ? இதனை அறிவிலியாகிய ஔரங்கசீப் ஓர்ந்திலன். தன் கணவனைப் பிரிந்த இராணி தன் பிற்காலத்தை எவ்விதம் கழிப்பாள்? தம் மக்கள் சிறு கையாலளாவிய சோறானது அமிர்தத்தினு மினியதன்றோ! மக்களுடலைத் தொடுதலினும் உடற்கு வேறின்பம் உண்டாமோ! தம் மக்கள் மழலைச் சொற்கள் புள்ளாங்குழலிசையினும் வீணை யிசையினும் இன்பந் தருவதல்லவா? தனது கணவன் பிரிவாற்றாமையை இவ்வின்பங்களைத் தந்து சகிக்கச் செய்யக்கூடிய தனது அரு

யிர்க்கு மினிய புதல்வனை எப்படி ஒளரங்கஜீப்பின் வசம் விடுவள்? "எனது புதல்வனை உன்வசம் விடேன். நீர் என்ன செய்யக்கூடுமோ அதைச் செய்வீராக". என்று வெகு தைரியத்துடனும் சீற்றத்துடனும் அரசனுக்குரைத்தாள். இவ்வாறு கூறிக் குழந்தையை ஒரு மிட்டாய்க் கூடையில் வைத்து மறைத்து ஒரு முசல்மான் கையில் கொடுத்து ஓர் இடத்தைக் குறித்துக் காட்டி அவ்விடம் கொண்டுபோய் வைத்திருக்கும்படி அம்முசல்மானுக்குக் கட்டளையிட்டனள். இம்முசல்மான் தருமவழி நடக்குமியல்புடையவன், தெய்வபக்தியுள்ளவன், செய்நன்றி மறவாதவன். ஆகலின் இத்தகைய கைம்மாறு இராணிக்குச் செய்யத் துணிந்தனன்.

இராணியை விசுவாசித்த அந்த உபகார முசல்மான் குழந்தையை எடுத்துக்கொண்டு வெளியே போனதும் இராஜபுத்திர வீரர்கள் தங்கள் கச்சைகளைக் கட்டிக்கொண்டு ஆயுத பாணிகளாய்த் தாங்களிருந்த இடத்தை விட்டு இராணியுடன் ஜோட்பூருக்குப் போகப் புறப்பட்டனர். உடனே ஒளரங்கஜீபால் அனுப்பப்பட்ட சேனை, இவர்களைப் போகவொட்டாமல் சூழ்ந்துகொண்டது. முசல்மான் சேனையோ பெரியது; இராஜபுத்திரர்களோ ஆயிர முசல்மான்களுக்கு ஒருவராயிருந்தனர். இவர்களிருவருக்கும் நடந்த யுத்தம் சொல்ல முடியாது. உயிருக்கஞ்சாத இராஜபுத்திரர்கள் சிங்கத்தைப்போல முசல்மான்கள் என்னும் யானைகளின் மீது வெகு தைரியத்துடன் விழுந்து சின்னபின்னமாக்கி ஆயிரக்கணக்காக மாய்த்து வீழ்த்தினர். முசல்



மான் பட்டாளங்கள் தைலதாரையைப்போல் விடாது வந்து மாண்டோர்க்குப் பதிலாக இராஜபுத்திரர்களுடன் நெருங்கிச் சண்டை செய்தனர். இவ்வாறு எத்தனையோ முசல்மான் சைன்யங்கள் படுசூர்ணமாகியும் இராணியும் அவளைச்சார்ந்த, மாண்டோரொழிய, மிகுந்த சில இராஜபுத்திரர்களும் முசல்மான் பட்டாளங்களின் வரிசையைப் பிளந்துக்கொண்டு கண்டோர் பிரமிக்கும்படி யுத்தஞ் செய்தனர். தங்கள் இராணிக்காகவும், குழந்தைப் பருவமான தங்கள் இராஜாவுக்காகவும், தங்கள் நாட்டுக்காகவும், உயிருக்கும் உலைக்குமாக அஞ்சாது போர் செய்தனர். பல தேசசரிதம் வாசித்த பண்டிதர்கள் இத்தகைய போர் எங்கும் நடந்ததில்லை என்று கூறும்படியான அவ்வளவு வீராவேசத்துடன் முகலாயர்களை எதிர்த்துக்கொண்டே குழந்தையை முசல்மான் வைத்திருந்த இடத்திற்கு வந்ததும், இராணிக்குண்டாகிய உவகை மட்டிலதாயிற்று. குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டு மின்னல் வேகம்போல சவாரி செய்து தனது சகோதரனாகிய மோவர் தேசத்து இராணுவை யடைந்தனள்.

அங்கிருந்து தனது நாடாகிய ஜோட்பூருக்குச் சென்று ஒளரங்ஜீப் செய்த அக்ரம காரியங்களை ஜனங்களுக்குத் தெரிவித்து அவனுக்கு எப்பொழுதும் இடங்கொடுக்க வொட்டாத எண்ணத்தை ஊட்டிக்கொண்டே வந்தனள். தனது குமாரன் உரிமைகளை யாதொரு குறைவு வாராமல் அவன் வயது வந்து தானே யுத்தகளம் புகும் சாமர்த்தியம் வருகிறவரையில் பாதுகாத்து வந்தாள். ஒரு ஸ்திரீயை எதிர்த்தது மன்றி

அவளது குழந்தையையும் கொல்ல யத்தனித்த ஔரங்கஜீப் மகாபாதகன், மனிதகணத்தில் சேர்ந்தவனல்லன், அதிக கொடியன் என்று ஒவ்வொரு இராஜபுத்திரன் மனதிலும் வேரூன்றினமையின் அவர்களுக்குள் என்றுங் கெடாத ஒற்றுமை யுண்டாக்கி டெல்லிநகர் விநாசத்துக்கு வேண்டிய ஹேதுக்களை எஞ்ஞான்றும் இராஜபுத்திரர்கள் தேடாநின்றனர்.

ஔரங்கஜீப் அரசன், இராஜாங்கம் நடத்தின நாளில் குடிகள் அழுத கண்ணும் சிந்திய மூக்கினராயுமிருந்தனர். இவன் குடிகளிடத்து அருளில்லாதிருந்தமையின் மழை பெய்யாமையால் எவ்வளவு துன்பம் நேரிடுமோ அவ்வளவு இடுக்கண்ணுக் குட்பட்டிருந்தனர். இவன் நீதி தவறி அரசாண்டமையின் வறுமையால் உண்டாகும் துன்பத்தைப் பார்க்கிலும் அதிக துக்கத்தை யனுபவித்தனர். இவ்விதமாய் ஔரங்கஜீப் அரசு கொடுங்கோன்மை யுடைத்தா யிருந்தமையின் புகழில்லாதவனாகி நாட்டையும் குடிகளையும் இழக்க வேண்டியதாயிற்று.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்."

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் இசைத்ததற்கேற்ப மொகலாயர் இராஜரீகம் குட்டிச்சுவராய் விட்டது. முசல்மான்கள் சொலற்கரிய இன்னலடைந்தனர். ஜோட்பூர் இராணி வாழ்நாளிலே இக்கதி அந்த இராஜரீகத்துக்குச் சம்பவித்தது. இந்த ராணி அதிக வயோதிக தசையை யடைந்து எல்லோராலும் கண்ணியப் படுத்தப்பட்டவளாய் வாழ்ந்து தனது அரிய கணவனுடன் வசிக்க உம்பர் உலகம் சென்றனள்.

# கிருஷ்ணாவென்னும் இராஜ குமாரத்தி.

இரஜபுத்திரர்களுக்கும் மொகலாயருக்கும் வெகு காலம் யுத்தம் நடந்துவந்தது என்று இந்து தேசசரித்திரம் வாசித்தவர்களுக்குத் தெரிந்தவிஷயமே. நாளடைவில் மொகலாயர்களும் இரஜபுத்திரர்களும் வலிகுன்றி மற்ற ஜாதியாருக்கு அடங்கி நடக்கநேரிட்டது. டெல்லியிலிருந்த மொகல் சக்ரவர்த்தி பெயருக்கு மாத்திரம் சக்ரவர்த்தியா யிருந்தான். அவனைச் சார்ந்த சிற்றரசர்கள் கப்பங்களைக் கிரமமாகச் செலுத்தி அவனுக்குப் பிரிய முண்டாக்கி அதிகாரஞ் செலுத்துவதில் ஸர்வ வல்லவையையும் தாங்கள் கிரகித்துக் கொண்டு தங்கள் தங்கள்நாட்டைத் தங்களுடைய இஷ்டப்படி அரசாண்டு வந்தார்கள். மொகலாயர்களை எதிர்த்துச் சண்டை செய்வதில் விடாமுயற்சி யடைந்திருந்த இராஜபுத்திரர்களும்தங்கள் வீரர்களை யெல்லாம் போர்க்களத்தில் உயிர் விடச்செய்து பலக் குறைவு எய்தினர். அதிக வீராவேசமும் பராக்கிரமமு முள்ள இராஜபுத்திர அதிபதிகள் அபூர்வமாய் விட்டனர். மேவார் தேசத்து இராணா மற்ற இராஜபுத்திர அதிபதிகளுக் கெல்லாம் தலைவனா யிருந்தான். மொகலாயர்கள் வலிகுன்றி, மஹாராஷ்டிர ஜாதியார் மேலாகி வந்தகாலத்தில், மேவார் தேசத்து இராணா இராஜபுத்திர சாதிக்குத் தலைவனாக இன்னும்

அங்கீகரிக்கப்பட்டு வந்தபோதிலும் அவனது அதிகாரம் உண்மையில் செல்லாமலிருந்தது. அவனுக்கு அடக்கமாகிய இராஜபுத்திர அதிபதிகள் அதிக வல்லமையான சைன்னியத்தை யுடையவர்களாய் அதிகாரம் செலுத்துவதில் மோவர் நாட்டு இராணாவைவிட மேம்பாடு அடைந்தனர். மஹாராஷ்டர்களுடைய தொந்தரையைநீக்கும் வண்ணம் இராஜபுத்திரர்கள் அவர்களுக்கு அடங்கி அதிக பணமும் செலவுசெய்ய வேண்டியதாயிருந்தது. இதன்றியும் இராஜபுதனத்தின் மத்தியிலேயே ஒரு மகம்மதியன் அதிக பராக்கிரம சாலியாய் வசித்து வந்தான். அவன் டாங்க் என்னும் நாட்டுக்கு நவாப்பாக இருந்தான். அவன் பெயர் அமீர்கான். இவன் மிகக் கொடியவன். இவன் ஒரு சமயத்தில் ஒரு இராஜபுத்திர அதிபதியுடன் சேர்ந்து, மற்ற இராஜபுத்திர அதிபதிகளைத் தோல்வி அடைவித்தும், மற்றொரு சமயத்தில் இவனுக்கே பிரதிகூலமாக நடந்தும், இம்மாதிரியாக இராஜபுத்திரர்களை ஒருவருக்கொருவர் பகையாளியாகச் செய்து, அவர்களுள்ளிருந்த ஒற்றுமையையும் தேசாபிமானத்தையும் சிதைத்துக் கொண்டு வந்தான்.

இந்தத் தௌர்பாக்கிய நிலைமையை இராஜபுதனம் அடைந்த காலத்தில், உடைபூர் மஹாராணாவுக்கு கிருஷ்ணகுமாரி என்னும் ஒருபுத்திரி அவதரித்தனள். அழகில் இவளைப் போன்றவள் உலகில் ஒரு மாதும் இல்லையென்று அதிக பிரசித்தி பெற்று வந்தாள். இம்மங்கை மதிபோன்ற முகமும், வில்போன்ற புருவமும், வாள்போன்ற கண்களும், பவளம்போன்ற அதரமும், கொவைக்கனியொத்த வாயும், முத்தனைய மூரலும், சங்கை



யொத்த கழுத்தும், மெல்லிய தோளும், உடுக்கைபோன்ற இடையும், அன்னநடையும் பொருந்தி யுள்ளவளாயிருந்தமையின், இரதியும் இவளைக்கண்டு நாணமுற்றாளெனின், இந்தக் கிருஷ்ண குமாரியின் ரூபலாவண்ணியத்தை வர்ணிக்க, சிறந்த கவிஞர்களாலும் இயலுமோ. இவள் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினள். இராஜபுத்திர ஜாதிக்கு ஒரு திலகம் போல் வசித்து வரு நாளில், இவளை மணம்புரிய அநேக இராஜபுத்திர அதிபதிகள் முன்வந்தனர்.

ஜெய்பூர் நாட்டுக் கதிபதியாகிய இராஜா ஜகட்சிங்குக்கு இம்மாதைப் பாணிக் கிரஹணம் செய்து கொடுக்க இவளது பிதா அபிப்பிராயங் கொண்டிருந்தனர். இதனை யோர்ந்த இராஜா ஜகட்சிங் என்போன் 3000 சேனையோடு அனேகபரிசுகளை யனுப்பி கிருஷ்ணை என்னும்ராஜ குமாரத்தியைத் தனக்கு விவாகம் செய்து கொடுக்கும்படி விண்ணப்பம் செய்து கொண்டான்.

மார்வார்நாட்டதிபதியாகிய இராஜமான்ஸிங் என்போன் தனக்குமுன் மார்வார் நாட்டையாண்ட அதிபதிக்கு விவாகப் பொருத்தம் பண்ணி யிருந்தபடியால் கிருஷ்ண குமாரியைத்தனக்குத்தான் மணஞ்சூட்ட வேண்டுமென்றும் அப்படிச் செய்து கொடுக்க ஒருப்படாவிட்டால் தான் சேனையுடன் மேவார் நாட்டைத் தாக்கி இராஜ குமாரத்தியை மணஞ்சூட்டுவிக்க பலவந்தப்படுத்தச் சித்தமா யிருப்பதாக உடைபூர் மஹாராணாவுக்கு நிருபம் விடுத்தனன். கிருஷ்ணை என்னும் இராஜ குமாரத்தியின் ரூபலாவண்ணியத்தின் நிமித்தம் மற்ற இராஜ புத்திர அதிபதிகளும் அவளை விவாகஞ்

செய்துகொள்ள விருப்பங்கொண்டு தங்கள் சேனையுடன் மேவர் நாட்டுக்கு வந்து சேர்ந்தனர். மேவர் தேசத்து அதிபதியாகிய இராணா, வலிகுன்றி பேருக்கு மாத்திரம் மஹாராணாவாக இருந்து வந்தானென்று முன்னமே சொல்லப் பட்டிருக்கிறது. இவன் ஊருக்குள் வந்திருந்த இராஜபுத்திர அதிபதிகளை யடக்கி யாளுந்திறமை யற்றிருந்தமையின், இந்த அதிபதிகள் ஒருவரோடு ஒருவர் போர் செய்யத் தலைப்பட்டனர். இந்தக் காலத்தில் மஹாராஷ்டிரர்கள் அதிக பராக்கிரம சாலிகளாய் விளங்கிவந்தன ரென்றும் இராஜபுத்திரர்களையுங்கூட தங்களுக்குக் கீழ்ப்படித்தி வந்தனரென்றும் முன்னரே கூறப்படிருக்கின்றன. பராக்கிரம சாலியான மஹாராஷ்டிர அதிபதியாகிய சிந்தியா என்போன் மேவார் தேசத்துக்கதிபதி பக்கலில் சேர்ந்து கொண்டான். மற்ற இராஜபுத்திர அதிபதிகள் ஜெய்பூர் நாட்டதிபதியாகிய இராஜா ஜகட்சிங் பக்கலில்சேர்ந்து கொண்டனர்.

சிந்தியா என்னும் மஹாராஷ்டிரன் 8000 போர்வீரர்களுடன் மேவார் நாட்டில் வந்திறங்கி ஜெய்பூர் இராஜாவின் தானுபத்தியத்தைத் (Embassy) தள்ளிவிடவேண்டுமென்றும், கிருஷ்ணா என்னும் இராஜ குமாரத்தியை மார்வார் அதிபதியாகிய இராஜமான்சிங்குக்கு மணம் புரிய வேண்டுமென்றும் மேவார் தேசத்து இராணாவுக்கு நிரூபம் விடுத்தனன். இராணா என்ன செய்வன்? ஜெய்பூர் தேசத்து அதிபதியை ஆசாபங்கம் செய்ய நேர்ந்தது. சிந்தியா கேட்டதை அளிக்கவேண்டியதாய்ச் சம்பவித்தது.



சிந்தியாவுக்கு உதவிபுரிய மோவார் தேசத்து இராஜா பெருஞ் சேனையுடன் வந்தனன். இராஜபுத்திர அதிபதிகள் ஒருவரோடு ஒருவர் போர் செய்யத் தலைப்பட்டனர். இராஜஸ்தானம் முழுமையும் ஒரு பெரிய படுகளமாகத் திரிந்துவிட்டது. ஸ்ரீமத் இராமாயணத்தில் கூறியுள்ள மூலபல சண்டைபோலத் தங்களைத் தாங்களே கொலை செய்துகொண்டு இராஜபுத்திரர்கள் குருதி வெள்ளத்தில் படியலாயினர். இராஜபுத்திர வம்சம் நிர்மூலமாகப் போய்விடும்போல் தோன்றிற்று. சுயஜாதி நாசத்தை விளைவிக்கக்கூடிய இந்தப் பெரிய யுத்தத்தைத் தடுக்க அசக்தனாகி, இராணா திகைத்து நிற்கையில், டாங் நாட்டுக்கதிபதியாகிய அமீர்கான் என்போன் ஒரு சூழ்ச்சி கூறினான்; அஃதாவது இந்தப் பெரிய யுத்தம் கிருஷ்ணா என்னும் இராஜ குமாரத்தியின் நிமித்தம் உண்டாயிருப்பதால் அவளைக் கொலைசெய்து விடல்வேண்டும்; இஃதன்றி வேறு வழி இல்லை என்று கூறினான், அமீர்கான் என்னும் லோபி. இதைக்கேட்ட மாத்திரத்தில் கிருஷ்ணகுமாரியின் தந்தை பொடுக்கெனத் தரையில்விழுந்தனன். தன்னுயிருக்கும் இனியாளாகிய தனது புதல்வியை எப்படிக் கொல்ல ஒருப்படுவன்? அப்படிச் செய்யாவிடில் இராஜபுத்திர வம்சமே நிர்மூலமாகிவிடும். இதனைத் தடுப்பதற்கு வேறு வகையையும் கண்டிலன். இருதலைக் கொள்ளியில் அகப்பட்டுக்கொண்ட ஜந்துபோல் தவித்தனன், மேவார் நாட்டு இராணா. தனது அருமைப் புதல்வியைக் கொலை செய்ய வேண்டுமென்று துணிந்து கூறிய அமீர்கான்மேல் அடங்காக்கோபம் இராணா கொண்டனன். இராணா

அமீர்கான் கைவசப் பட்டவனாகையால் தன்னிஷ்டம் போல் நடக்க அசக்தனாயினான். ஒருயிர் போனால் தேசம் சுகப்படும் என்பது இராணாவுக்கும் புலப்பட்டது. அமீர்கானும் நிர்ப்பந்தப்படுத்த ஆரம்பித்தான். கடைசியில் இராணா தனது குமாரத்தியைக் கொன்றுவிட ஒப்புக்கொண்டான்.

இந்தக் கொலையை யார்புரிவார்கள்? கிருஷ்ணா இராஜாத்தியைக் கண்ட எவன்தான் அந்த நிந்தித காரியம் செய்யச் சம்மதிப்பான்? அவள் முகதரிசனம் எவ்வித துக்கத்தையும் நீக்கி மனக்குளிர்ச்சியை யுண்டாக்குமாயின், எவ்வித கொலையாளியும் அவளைக் கொல்ல மனமிசையான். மஹா இராணாவின் பந்துவாகிய இராஜா டௌலட் சிங் என்பவனை அழைத்து "நீபோய் கிருஷ்ணாவைக் கொலைசெய்து விட்டுவா" என்று மஹாராணா கூறினான். இந்தச்சொல் அவனைத் திடுக்கென்று எடுத்துப்போட்டது. இந்த உத்தரவை எனக்குச் சொல்லும் நாக்கு அதோகதிஅடையத் தக்கது. இராணாவினிடத்திலிருக்கும் இராஜ பக்திக்காகவா, கண்மணிபோன்ற இராஜ குமாரத்தியைக் கொலைசெய்து ரௌரவாதி நரகடையக் கடவேன். ஒருகாலும் அவ்வித பாபகிர்த்தியத்தைப் புரியேன். இதனால் இராணாவுக்கு மனம் வருத்தம்வந்து என்னதண்டனைக்கு என்னை உட்படுத்தினும் சம்மதமே என்று கூறி அவன் இராணாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை.

கிருஷ்ணா என்னும் இராஜ குமாரத்தியின் மாற்றாந்தாய்வயிற்றில் உதித்தோனாகிய இராஜா ஜொவான்டாஸ் என்பவனை இராணா பிறகு அழைத்து இரு



கப்பட்ட சமாச்சாரத்தைத் தெளிவாக எடுத்துரைத்து "நீ போய் கிருஷ்ணாவைக் கொலை செய்து விட்டுவா" என்று கட்டளை யிட்டான். என் தந்தையே! எனது பிரியமான சகோதரியைக் நான் கொல்லவேண்டுமென்பது உமது கட்டளையா? உண்மையைக் கூறுமென்று வினையத்துடன் கேட்டான். நமது தேசத்தின் க்ஷேமத்தின் பொருட்டு அஃது அவசியமென்கிறார்கள், என் மகனே! என்று இராணா துக்கக்குரலுடன் அறைந்தனன். கட்டாரியைக் கையிலேந்தி இராஜ குமாரத்தியிருந்த அறைக்குள் இராஜா ஜொவான்டாஸ் பிரவேசித்தனன்.

அன்பும், மனப்புனிதமும், சுந்தரமும் நிறைந்துள்ளவளாய கிருஷ்ணா அவன் முன் எழுந்து நின்றனள். மாட்சிமை அவள் முகத்தில் பிரகாசித்தது. தன் சகோதரனை வெகு அன்புடன் நல்வரவு கொண்டாடி, அங்கு எழுந்தருளின கருத்தென்னவென வினவினள். "சகோதரியே! இறந்துபோகத் தயாராயிரு" என்று அவன் சகோதரனா இராஜா ஜொவான்டாஸ் வாடின முகத்துடன் விடைப்பகர்ந்தனன். கிருஷ்ணா வென்னும் இராஜ குமாரத்தி இதைக் கேட்டதும், புன்முறுவல் செய்து வேடிக்கைப் பேச்செனவெண்ணி, கலேல் என்று சிரித்து விட்டனள். இதைக்கண்டதும் "நான்பரிகாசம் செய்யவில்லை, நான் சொன்னது மஹாராணாவின் கட்டளையாகும், உன் தேசக்ஷேமத்தின் பொருட்டு நீ உயிர்விடவேண்டியது அவசியமாகும். இப்பொழுது நமது ஜாதியை நிர்மூலப்படுத்திவரும் சண்டையை நிறுத்துவதற்கு அக்கட்டளையை இராணா

அளித்திருக்கின்றனர்" என்று அவள் சகோதரன் கூறினான்.

இதைக் கேட்டதும், கிருஷ்ணா அதிக ஆழ்ந்த கருத்துடன் ஆலோசிக்கலாயினள். நான் இப்பிறப்பெடுத்தது நான் செய்தபூர்வ புண்ணியத்தின் அளவேயாகும். ஒவ்வோர் உயிரும் இவ்வுலகின்கண் புரிய வேண்டிய கருமங்கள் கருவிலேயே அமைக்கப்பட்டுள்ளன. அக்கருமங்கள் செய்து முடிந்தபின் உயிர் வேறு உடலைத் தேடிக் கொள்ளும்.

"நெருநலுளனொருவ னின்றில்லையென்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு" என்று

திருவள்ளுவப்பயன் கூறியவண்ணம் உலகத்தினிடத்து நிலையாமையே மிகுந்திருக்கின்றது. இவ்வுலகமானது நேற்றுப் பிறந்தவன் இன்றைக்கு இறந்தானென்னும் பெருமையுடையதா யிருக்கின்றது. யானும் ஒரு நாள் இறத்தல் வேண்டும். அஃது இன்றைக்கே நேரிடில் துக்கம் எற்றிற்கு?

"குடம்பை தனித்தொழியப்புட் பறந்தற்றே
யுடம் பொடுயிரிடை நட்பு."

என்று தமிழ்மறை பிரதிபாதித்திருப்பது போல், உயிருக்கும் உடம்புக்கும் சிறிதும் சினேகமில்லை. "முன் தனியாத முட்டைதனித்துக் கிடப்ப அதனுளிருந்தபுள்ளு பருவம்வந்து பறந்துபோய தன்மைத்து உடம்புக்கும் உயிருக்கு முள்ளதாய நட்பு," உயிருக்கு நிலைமையான வீடு இதுவரைக்கும் கிடைக்க வில்லை "வாத முதலிய வற்றின் இல்லாய உடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்து உயிருக்கு எஞ்ஞான்றும் இருப்பதோரில் இது



காறும் அமைந்ததில்லை போலும்." இப்பொழுது நடந்து வரும் யுத்தம் என்னுடைய உடம்பைக் கருதியே யாகலின் இவ்வுடம்புக்கும் எனக்கும் இருக்கும் சம்பந்தம் சினேகபாவமன்றாகலினாலும், இவ்வுடலானது ஒதுக்குக் குடியிருக்கும் இடமாக இருத்தலினாலும் இவ்வுடலைத் துறப்பதற்கு, துக்கஹேது ஒன்றையுங் கண்டிலேன்.

"உறங்குவது போலுஞ் சாக்காடுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்று தெய்வமறை ஓலமிடுகின்றமையின் இறப்பதற்கஞ்சேன். நான் தேசத்தை விடுவதால், தேசத்துக்கு க்ஷேமம் விளையுமாதலின் இதைவிட நான் செய்யக்கூடிய புனிதச்செயல் ஒன்றுமில்லை என்று இவ்வாறு தன்னுள் தீர்க்கயோசனைசெய்து தன் சகோதரனை ஒரு முறை பார்த்துவிட்டு தன்னுடைய அன்புள்ள தோழிகளின்மேல் கிருபையுள்ள பார்வையைச் செலுத்தி "சகோதரனே! நம்முடைய குடும்பத்தில் அனேக இராஜ குமாரத்திகள் நமது தேசத்துக்காக உயிர் விட்டிருக்கின்றார்கள்; நான் அத்தகைய குடும்பத்தில் பிறந்தவளானமையின் நான் அபகீர்த்தி கொண்டுவருவேனென்று எண்ணாதே. நான் இறக்கவேண்டுமென்பது நமது பிதாவின் கட்டளையானபடியால் நான் இறக்கத்தான் வேண்டும். அவர் சொல்லைப்பரிபாலிப்பது எனது பிரதம கடமையாகும். நான் சாவதற்குத்தயாரா யிருக்கிறேன். உயிரை விடக்கூடிய இடத்துக்கு என்னை இட்டுக்கொண்டு போ. ஒரு ஷிசோதியாவின் (Shisodia) குமாரத்திக்கு தன் தேசத்தின் நிமித்தம் உயிர் துறப்

பதைவிட மகிமையுள்ள காரியம் என்ன இருக்கிறது" என்று யாதொரு மனக்கலக்கமின்றித் தெளிவாய் உரைத்தனள். "அதனால் நான் உன்னை—" என்று வாய் குளறின சகோதரனைப்பார்த்து, "சகோதரனே! நீ வந்திருக்கும்வேலை இன்னதென எனக்கு நன்றாகத்தெரிகின்றது. வா, உன்னுடைய கடமையை நீ செய்வாயாக; அப்படிச் செய்துயான் என்னுடைய கடமையைச் செய்ய எனக்கு உதவி புரியும்" என்று கூறினள், கிருஷ்ணாவென்னும் இராஜகுமாரத்தி. இதைக்கேட்டவுடன் தன் பின் நின்று கொண்டிருந்த தோழிமார்கள் விம்மியழுதனர். கிருஷ்ணா அவர்களை நோக்கி "எனது பிரியமுள்ள பாங்கிமார்களே! எனக்காக நீங்கள் அழவேண்டாம்; நீங்கள் சந்தோஷமா யிருங்கள்; நான் அத்தியந்த சந்தோஷத்துடன் உயிரைவிடப் போகிறேனென்று நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்; என்னைக் கொன்று விடுவதால் வெளிவரும் உதாரம், இப்பொழுது இராஜ புதனத்தில் நடந்து வரும் சங்காரத்தை நிறுத்தி விடுமாயின், என் இரத்தம் புரண்டு ஓடட்டும், புரண்டு ஓடட்டும்; அனேக ஆயிரக் கணக்கான வீடுகள் புருஷனில்லாமல் நிராதரவாக ஆய்விட்டன" என்று பாங்கிமார்கள் மனம் கரையும்படி பகர்ந்தனள்.

இவளைக் கொலை செய்யவந்த இராஜ குமாரன் இவளது சாந்த குணத்தைக் கண்டு, தான் செய்யும்படி வந்த காரியத்தைச் செய்ய முடியாது தைரிய மிழந்தவனாய் நின்றான். இராஜ குமாரத்தியின் மாக்ஷிமை தங்கிய அமரிக்கைக் குணத்தைக் கண்ட மாத்திரத்தில் இவளது உயிரை வாங்கும் எண்ணத்தைச் சகியாதவ



னாகி, தனது கட்டாரியைப் பலகணி வாயிலின் வழியாக எறிந்து விட்டு, இராஜகுமாரத்தி யிருந்த அறையை விட்டு ஓடிவிட்டான். இவ்விதம் இராணா, அனேகரை ஒருவன் பின் ஒருவனாக அனுப்பியும் ஒருவனும் கிருஷ்ணாவைக் கொலை செய்யத் துணியவில்லை. இராஜபுதனத்தின் சரித்திரத்தில் இராணாவின் உத்தரவை மீறிநடந்தது அதுவரையுங்கிடையாது. கிருஷ்ணாவைக் கொலை செய்ய வேண்டுமென்கிறகட்டளையை எல்லாக்கனவான்களும் வீரர்களும் இராஜகுமாரர்களும் மீறிநடந்தனர்.

சண்டையை நிறுத்தும்வண்ணம், கிருஷ்ணாகுமாரி கொலைப்படப்போகிறாள் என்னுஞ் சமாச்சாரம் காட்டுத் தீயைப்போல அரண்மனையி லுள்ள எல்லாருக்கும் எட்டியது. கிருஷ்ணாவின் தாயார் இதைக் கேட்டதும் பைத்தியம் பிடித்தவள்போலக் கத்த ஆரம்பித்து, தனது பிரிய குமாரத்தியைக் காப்பாற்ற வேண்டுமென்று எல்லாருடைய இரக்கத்தையும் மன்றாடிக் கேட்டு நின்றனள். அப்படிச் செய்யாவிடில் கடவுள் உலகத்தாரெல்லாரையும் பழிவாங்குவாரென்று பயமுறுத்தினள். கிருஷ்ணாவென்னும் இராஜ குமாரத்தி மாத்திரம், மனக்கலக்கம் சற்று மடையாது தனது பிராரப்த கர்மத்தை எண்ணி, கடவுள் விட்ட வழியாகட்டும் என்னும் எண்ணத்தைக் கொண்டு சிந்தாகுலரகிதையாய் விளங்கினாள்.

ஆனால் இவளைக் கொல்ல எவனும் முன்வரவில்லை. இராணா, தான் இட்டகட்டளையை ரத்து செய்து விடுவாரென்று ஜனங்கள் எல்லோரும் அதிக ஆவலுடன் எதிர்

பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவன் என்ன செய்வான்? அமீர்கான் என்னும் கொடியோன்கையில் இராணா அகப்பட்டுக் கொண்டிருந்தமையின், அவன் எண்ணத்துக்கு மாறாகச்செய்ய அசக்தனாயிருந்தான். கிருஷ்ணாவைக் கொலை செய்யத்தான் வேண்டும்; அப்படிச் செய்யாவிடில் அரண்மனையிலுள்ள எல்லாரையும் தானே கொலை செய்யப்போவதாகக், கொடியோனாகிய அமீர்கான் பயமுறுத்தினான். மேவார் நாடு முழுதும் பாழாக்கப்பட்டு இராஜபுதன வம்ச முற்றிலும் நிர்மூலப்படும். அமீர்கான் இராஜகுமாரத்தியைக் கொலை செய்ய வேண்டும் என்று இராணாவை அதிக துரிதப்படுத்தினான்; ஏனெனில் இராஜ குமாரத்தியைக் காப்பாற்றவும் அவதூறுக்கு இடங்கொடுக்காமலும் இருக்கும் வண்ணம், இராஜ புதனத்தின் நாலா பக்கங்களிருந்தும் எண்ணிறந்த இராஜபுத்திரர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள் என்று அமீர்கான் கேள்விப்பட்டான். இதையெல்லாம் உணர்ந்த அமீர்கான், தன் எண்ணத்தைச் சாதிக்க இராணாவைப் பலவந்தப் படுத்தினான்.

இராஜ குமாரத்தியை உடைவாளினால் குத்திக் கொல்ல ஒருவரும் முன் வராமையால், விஷங்கொடுத்து அவளைக் கொல்லும்படி இராணா கட்டளையிட்டனன். எந்த ஆடவனும் கொல்வதற்கு முன் வராமையால், விஷமூட்டும்படி ஸ்திரீகளுக்குக் கட்டளையிடப்பட்டது. பாங்கிமார்களுள் ஒருத்தி, தகப்பன் கொடுக்கச்சொன்னதாக விஷமடங்கிய கோப்பையை இராஜகுமாரத்தியாகிய கிருஷ்ணாவுக்குக் கொண்டுவந்து கொடுத்தனள். அரண்மனையிலிருந்த எல்லாரும் ஓலமிட்டழுதனர்.



ஆக்ஷேபிக்க ஒருவருக்கும் தைரியமில்லாமற் போயிற்று. எல்லோரும் அழுதுகொண்டிருந்தனர். எல்லாப் பக்கங்களிலிருந்தும் விம்மி அழும் குரலானது கேட்டுக்கொண்டேயிருந்தது. இராணியின் கூக்குரல் எல்லார் மனதையும் துக்கக்கடலில் ஆழ்த்தியது. இப்படித் துக்கமாய் அரண்மனை விளங்கியிருக்க, பால்வடியும் முகத்தையுடைய இராஜ குமாரத்தி ஒரு கண்ணீர்த்துளியும் விட்டவளல்லள். பாஷாண மடங்கியகோப்பை தன்னெதிரில் கொண்டுவரப் பட்டபொழுது, சிரக்கம்பஞ் செய்து, வணங்கி, அதனைக் கையில் வாங்கிக்கொண்டனள். தனது பிரியமுள்ள பாங்கிமாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, தாயின் ஆசீர்வாதத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு, தனது தந்தை நீடூழிவாழ்கவென்று கடவுளை வேண்டிக்கொண்டு, சித்தசஞ்சல மில்லாமல் கோப்பையிலிருந்த பாஷாணத்தை உட்கொண்டனள், மாகத்தும்பர் மங்கையர் நாணும் படியான அழகு பொருந்திய கிருஷ்ணாவென்னும் மாது.

பாஷாணத்தை யுட்கொண்டு எல்லாருடனும் இதமாய்ப்பேசிக்கொண்டிருந்தனள். அருவருப்பான பாஷாணமானது அவள் இரத்தத்துடன் விபாகஞ்செய்ய உடன்படவில்லை; அஃதாவது அதை வாந்தி செய்துவிட்டனள். இன்னொரு முறை முன்னிலும் வலிவான பாஷாணம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. அதனையும் அவள் உட்கொண்டனள். அந்தப் பாஷாணமும் வயிற்றில் தங்காது வெளி நோக்கி வந்து விட்டது. மனுஷ தைரியம் எவ்வளவுதூரம் போகக்கூடுமென்று பரீக்ஷிக்கக் கருத்துக் கொண்டதுபோல, மூன்

றாம்முறை முன்னினும் அதிகபலமான பாஷாணம் கொடுக்கப்பட்டது.

அதனையும் அவள் பிரீதியுடன் குடித்தனள். மூன்றாம்முறையும் அப்பஷாணம் உள்ளிராமல் வெளி வந்து விட்டது. அதனால் இவளைக் கொலைசெய்ய வேண்டுமென்கிற கொடியோர், பிடிவாதமாய் இன்னொரு முறை அதிகக் கடுமையான பாஷாணத்தைச் செய்து கொடுத்தனர். அதனையும் கிருஷ்ணை புன்முறுவலுடன் வாங்கி உட்கொண்டனள். இம்முறை அந்தப் பாஷாணம் உட்தங்கியது. கொடியோர்களின் இஷ்டம் பூர்த்தியாயது. கிருஷ்ண குமாரி நெடுந்தூக்கம் தூங்கிவிட்டனள். அவள் தாயார் நெடுநாள் உயிரை வைத்திருக்கவில்லை. சில நாட்குள்ளாக தனது இனிய குமாரத்தியைக் காண விண்ணுலகம் போய்ச் சேர்ந்தனள்.

“ அழிதேக மன்னுயிர்க்கு அன்னிய மென ” உணர்ந்தவளானபடியால், கிருஷ்ணை என்னும் இராஜகுமாரத்தி, மரணத்துக்கு அஞ்சாதவளாகி, தேச நலத்தின் பொருட்டு உயிர் விட்டனள். இவளது புகழ்ச்சி உலகுள்ளளவும் குன்றாது நிலைபெற் றிருக்கு மென்பது திண்ணம்.—

## “ Extracts from SWAMI VIVEKANANDA'S WORKS.”

### விவேகானந்த சுவாமிகள் கூறியது :—

ஏட்டுச் சுரைக்காயில் பிரயோஜன மில்லை........... நன்னடக்கையை உண்டாக்கத் தக்கதும், மன வலிமையை அதிகரிக்கக்கூடியதும், புத்தியை விசாலிக்கத்தக்கதும், தம்மைத்தாமே இரக்ஷித்துக்கொள்ளும் திறமையை அளிக்கக்கூடியதுமான கல்வியையே நாம் நமது பெண்களுக்குக் கற்பித்தல் வேண்டும்.

* * * *

இத்தகைய கல்வியைக்கொண்டு ஸ்திரீகள் தாங்கள் படும் கஷ்டங்களினின்றும் தம்மை விடுவித்துக் கொள்ளும் மார்க்கத்தைத் தாங்களே தேடிக்கொள்ளுதல் கூடும். இதுகாறும் நமது ஸ்திரீகள் தஞ்சக்கேட்டில் அஃதாவது துணையற்ற நிலையிலும், பிறரிடத்தில் ஒதுக்குண்டுவாழும் தன்மையிலும், பழக்கப்பட்டுவந்திருக்கின்றார்கள். இதனால் ஏதாவது ஒரு அபாயமாயினும் அல்லது ஆபத்து கிட்டிவருங்காலத்து கண்ணீர்விட்டு கலங்குந் திறனுடையவர்களாகியிருக்கின்றார்களேயன்றி, அவ்விபத்துக்களினின்றும் அகலும் மார்க்கத்தை நினைக்க மனோதைரிய மில்லாதவர்களா யிருக்கின்றார்கள், ஆகையால், சௌரிய பராக்கிரமக்கிளர்ச்சியை நமது ஸ்திரீகள் அடைதல்வேண்டும். தற்காலத்தில் அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளவும், கற்றுக்கொள்ளும் அவசியம் நேரிட்டிருக்கின்றது. பெருமை பொருந்திய ஜான்ஸிநாட்டின் ராணியின் சரித்திரத்தை [illegible]ளித்துப் பாருங்கள்.

* * * *

நமது சாஸ்திரத்தின் பிரகாரம் [illegible]வொரு கிரஹஸ்தனும் பஞ்சமகா யக்யங்கள் செய்தல்வேண்டும். அவை யாவை யெனில். (1) வாசித்தல் அஃதாவது சத் விஷ

யத்தைப்பற்றி வாசித்தல், (2) கடவுளையும் மகாத்துமாக்களையும் வழிபடல், (3) நமது முன்னோர்க்குரிய கடமைகளைப் புரிதல், (4) மனிதவர்க்கத்துக்குரிய கடமைகளைச் செய்தல், (5) கடையான மிருக ஜாதிகளுக்குரிய கடமையைச் செய்தல் ஆம்.

* * * *

இந்தியாவி லிருக்கும் ஒவ்வொரு பெண்ணும் ஸாவித்திரியைப்போ லிருக்க நோக்கங்கொள்ளல் வேண்டும்:— ஸாவித்திரியானவள் தன் கணவன் மீது வைத்த மட்டில்லா ஆசையினால் யமனை அணுக ஒட்டாது யமன் கொண்டுபோன தனது கணவன் உயிரையும் யமன் வசத்தினின்றும் மீட்டு வந்தாள்.

* * * *

ஜாதி பேதக்கோட்பாடு அத்வைத சித்தாந்தத்திற்கு விரோதமானது. ஜாதிபேதம் ஒரு ஜனக்கட்டுப்பாடே யாகும். இதனை உடைத்துவிட நமது மகான்களெல்லாம் முயற்சிசெய்திருக்கின்றார்கள். புத்தமதமும் அதன் பின்வந்த கக்ஷிகளும் ஜாதிபேதத்தை அங்கீகரிக்காமலே அதற்கு எதிரிடையாகப பேசிவந்திருக்கின்றன. இங்ஙன மிருந்தும், அதனை கலகலக்க எடுத்த முயற்சி ஒவ்வொன்றும் அதனை இன்னும் இறுகச் செய்து உறுதிப்படுத்தினதேயன்றி, தளர்ச்சி செய்யவில்லை ஜாதிபேதம் இந்தியாவில் இராஜாங்க விஷயமாய் உண்டான ஒரு வளர்ச்சியேயன்றி மதவிஷயமானதன்று. ஜாதிபேதம் பரம்பரையாய் வரும் ஒருவித வர்த்தக சங்கமேயாகும். இப்பொழுது ஐரோப்பியர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு நடக்கும் வர்த்தகமே மற்ற எவ்வித போதனையைக் காட்டிலும் ஜாதிபேதக் கோட்பாட்டைத் தகர்த்துக்கொண்டு வருகிறது.

* * * *

7810

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

# அபிப்பிராயம்.

ஸ்ரீமான். மாணிக்கசுவாமி முதலியாரவர்கள் எழுதிய வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகளின் சரிதைகள் முழுதும் பார்த்தேன். இது தற்கால நாகரிகர்களின் மனங்களைக் கவர்ந்து நன்னடக்கை, பண்டையோர் அநுஷ்டித்த சௌர்யாதி குணங்கள், கற்பிற் கலங்காநிலை, கல்வி முதலியவற்றைப் போதித்து சிறுவர்களையும் சிறுமிகளையும் நல்நெறியிற் செலுத்தி உறுதியடையும் வன்மை யுண்டாக்குமென்பது என் மன நிலைமையாம். ஆதலின், கல்விச்சாலை மாணாக்கர் இத்தகைய நூல்களிற் பழகுவராயின் அவர்களுக்கு அந்நூலிற் கூறிய அபிமானாதிகள் உண்டாம் என்பதில் ஐயமின்று.

ஆ. சிங்காரவேலு முதலியார்,
சென்னை கோவிந்த நாயகர் கலாசாலைத்
தமிழ் உபாத்தியாயர்.

சென்னை,
4-12-1921.

---

ஸ்ரீமத். பெ. மாணிக்கசாமி முதலியார் B. A. அவர்கள் இயற்றிய "வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள்" என்னும் வசன வடிவ புத்தகத்தை முற்றும் படித்துப் பார்த்தேன். இதில் எட்டு இந்து மாது சிரோமணிகளின் சரித்திரம் அவர்தம் புத்தி வன்மை, கற்பின் தன்மை, கலங்கா நிலைமை, நிதானபுத்தி முதலியவற்றைக் குறிப்பிட்டுச் செவ்வையாக எழுதப்பட்டிருக்கின்றது. இப்புத்தகம் தன்னைப் படிப்பவர்க்கு நற்குண நற்செய்கைகளைப் பல்லாற்றானும் உண்டாக்குவதோடு அவர்தம்மைப் பரமேசுவரனுடைய அநுக்கிரகத்திற்கும் பாத்திரமாக்குவதாமென்பதும், இது பாடசாலை மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படுமாயின் அவர்தமக்குத் தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம், ஜாதியபிமானம் என்பவற்றை நிச்சயமாக உண்டாக்குமென்பதும் என்னுடைய பூரண அபிப்பிராயமாம்.

கோ. வடிவேலு செட்டியார்,
"லோகோபகாரி" ஆசிரியர்,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

சென்னை,
4-12-1921.